# உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக



பாஸ்டர் அமலு கிட்டா 2017

# உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக

(பாஸ்டர்) அமலு கிட்டா

தமிழாக்கம்:
சகோ. J.M.இராஜன்

**All rights reserved.**

**Copyright: Amelu Geta 2014 (EC 2005).**

**Electronically reproducing, reprinting or photocopying, fully or partially, and distributing in whatever methods apply in copying the manuscript is considered a breach of national law.**

**First Amharic Printing,July 2013**

**Second Amharic Reprinting, August 2013**

**Translated into English by Petros J.Gebeto,Kenya,Nairobi**

**April 2014**

**Third E-Book in Tamil - Oct 2017**

**Amelu Geta**

**Tel: +251-911-12-00-50**

**+251-911-12-46-14**

**USA+1 (301) 328-6327**

**E-mail: pastoramelu@yahoo.com**

**Layout & design: Bro. Isreal (LTN Ministries India)**

# நன்றி படைப்பு

இந்த புத்தகத்தை எழுதி முடிக்க தம்முடைய கிருபையின ாலே பெலனளித்த கர்த்தருக்கு நன்றி சொல்ல நான் முதலாவது கடமைபட்டிருக்கிறேன். அடுத்து நான் நன்றி கூறிக்கொள்ளுவது என்னுடைய மனைவி மின்டாமிர் ரோபிலேவுக்கு இதற்கான முயற்சிகளிலே அவர் தொடர்ந்து ஆதரவாகக் கூட இருந்தார்.

அடுத்ததாக இந்த புத்தகம் இன்னும் அநேகரை சென்றடைய வேண்டும் என்று இதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ள பெட்ரோஸ் கெபிட்டோவுக்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். தேவன்தாமே அவருக்கு பரலோக தயையையும் கிருபையையும் தர நான் வேண்டுகிறேன்.

தங்கள் அருமையான ஆலோசனைகளினால் இந்த புத்தகத்தை வடிவமைத்து முடிக்க உதவிய எனதருமை சகோதரருக்கும் நன்றிசொல்ல கடமைபட்டிருக்கிறேன். குறிப்பாக அமெரிக்காவை சேர்ந்த Rev. டொலோசா குடினா மற்றும் Dr. நீவே அர்காவும்; இங்கிலாந்தை சேர்ந்த தங்ஸ். ஜெரால்ட் காட்சன் மற்றும் Ps. அபிரா ஆப்தே; கென்யாவை சேர்ந்த ஹாய்லூ ஆஸ்பா; அமெரிக்காவின் Ps. யோகானேஸ் அட்டோஷம்; அமெரிக்காவின் தங்ஸ். Dr. தெமிஸ்கன் ஏ. பெசாயீ மற்றும் எத்தியோப்பியாவை சேர்ந்த யோனாஸ் கெபீடி, கீனோக் யோஹானீஸ் மற்றும் டீயே பேயீசியாவுக்கும் நன்றி சொல்லுகிறேன்.

பாஸ்டர் அமலு கிட்டா

# முன்னுரை

2013 ஆம் ஆண்டு நைரோபியிலுள்ள எங்கள் ஆலயத்தின் அரையாண்டு கொண்டாட்டத்தில் பேச வந்திருந்தபோது பாஸ்டர் அமலுவை சந்திக்கும் எனக்கு வாய்ப்பு கிடைத்தது. அந்த கூட்டங்களில் உதவியாளர்களாக பணிபுரிந்துவந்த மற்ற வர்களைப்போலவே நானும் பாஸ்டர் அமலுவின் ஆற்றல் மிக்க செய்திகளினாலும் அவருடைய நடவடிக்கையினாலும் மிகவும் கவரப்பட்டேன்.

அந்த நாட்களில் அவர் தன்னுடைய புத்தகமாகிய உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற புத்தகத்தை நான் படித்துள்ளேனா என்று என்னைக் கேட்டார். அதற்கு நான் அந்த புத்தகத்தைப் படித்திருக்கிறேன் என்று சொல்லி, அது எந்த அளவுக்கு காலத்திற்கேற்ற ஒன்றாயிருக்கிறது என்பதைக் குறித்து என் பாராட்டை தெரிவித்தேன். சில தினங்கள் கழித்து, ஹய்லூ என்னும் என்னுடைய நண்பன் ஒருவன், அந்த புத்தகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தால் என்ன என்று யோசனை சொன்ன ான். அதைத் தொடர்ந்து அடுத்த நாலு மாத உழைப்பிற்பின் நான் அப்புத்தகத்தை ஆங்கிலத்தில் மொழிபெயர்ந்து முடித்தேன்.

அந்த புத்தகத்தின் ஆழமும் கருத்தும் என்னை வெகுவாகக் கவர்ந்தது. நவீனமாக்குதல் மற்றும் உலகமயமாக்குதல் ஆகியவற்ற ால் நம்முடைய சமுதாய நீதிகளும், ஆவிக்குரிய நீதிகளும் வெகுவாக நாசப்பட்டுவரும் சூழல், சரியான சமயத்தில் இந்த புத்தகம் வெளிவந்திருந்தது. இந்த நாளில் தொழில் நுட்ப முன்றேங்களில் வாலிப பிள்ளைகள் கவர்ந்திழுக்கப்பட்டிருக்கிறார்கள். சுயநல நோக்கத்தோடு துவக்கப்படும் பற்பல சமுதாய இயக்கங்கள் மற்றும் சமுக வலைதளங்கள் வாலிபர்களை குறிவைக்கின்றன. இது போன்ற சூழல் வாலிபர்களை சரியாக ஆலோசனை சொல் நல்வழியில்

நடத்தவேண்டிய பெற்றோரும் ஆவிக்குரிய தலைவர்களும் தங்கள் கடமையில் முனைப்பு காட்டாமல் நிற்கிறதை நாம் காண்கிறோம். இதன் விளைவாக, தனி "மனிதனின் சுதந்திரம்' என்னும் போர்வையில் பொல்லாத சக்திகள் சமுதாயத்தை ஊடுருவும்போது அதைத் தவிர்க்க இயலாதவர்களாக அவர்கள் நிற்கிறார்கள். இந்த சூழல், பெற்றோர் மற்றும் சமுதாயத்தின் பயனுள்ள ஸ்தாபனங்கள் பயனற்றவை என்று பிரசூரிக்க முயலும் தீய சக்திகளின் கூட்டுமுயற்சியை முறிய அடிக்க பல நல்ல நிறுவனங்கள் எடுக்கும் முயற்சிகள் பாராட்டிற்குரியன வாக இருக்கின்றன. இருந்தாலும் சமுதாயத்தின்மேல் தீயசக்திகள் ஏற்படுத்தும்தாக்கத்தை முற்றிலுமாக முறிய அடிக்க பெற்றே ார்களின் நிலையை வலுப்படுத்துவது அவசியம். அதற்கு மூன்று நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பது என்னுடைய ஆலோசனை.

முதலாவது சமுதாயத்துக் காவலர்களாகிய ஆவிக்குரிய தகப்பன்மாரும், பெற்றோரும், சமுதாய தலை வர்களும், அரசாங்க அதிகாரிகளும் ஒருங்கிணைந்து செயல்பட்டு, பெற்றோர் பிள்ளை உறவுகளை சீர்படுத்தி, அதன் மூலமாக சவால்களை சந்தித்து, சமுதாய நல்லொழுக்கத்தை நிலைநாட்ட வேண்டும்.

இரண்டாவதாக, குடும்பம் என்கிற ஸ்தாபனத்திற்கு விரோதமாக உள்ளேயிருந்தும் வெளியே இருந்தும் வரும் தாக்குதல்களை பெற்றே ார் மேற்கொள்ள, அவர்களைப் பெலப்படுத்த உதவும் நிறுவன ங்களை ஏற்படுத்தவேண்டும். அதன் மூலமாக அவர்கள் பெற்றே ார் என்கிற தங்கள் பணியை செவ்வனே செய்ய பெலப்படுவார்கள்.

மூன்றாவதாக, சுதந்தரத்தையும் சமூக பழக்கவழக்கங்களையும் கட்டுப்படுத்தும் அவசியமற்ற சமூக கட்டுப்பாட்டுகளை எல்லாம் மீறி, குடும்பங்களைத் திட்டம்பண்ணி நடத்த முயற்சி எடுக்கப்பட வேண்டும். இதனை நடைமுறைப்படுத்த,

குடும்பத்திற்குள்ளும் சமுதாயத்திற்குள்ளும் குடும்ப உறவுகளைக் குறித்து வெளிப்படையான கலந்துரையாடலுக்கு வழிசெய்ய வேண்டும். இளைஞர்களுக்கு காதல் இருந்து திருமணத்திற்கு ஆலோசனைகள் தேவைப்படும். பின்பு பெற்றோர் என்கிற பணியை பற்றியும் குழந்தை பிறப்பு முதல் அவர்களுக்கு வழிநடத்துதல் தேவைப்படும். இப்படி செய்வதன் மூலம், பிரச்சனைகளிலேயே அவர்கள் மூழ்கிப்போய்விடாதபடி செய்ய முடியும். தேவனுடைய வார்த்தையின்படியே பிள்ளைகளை வளர்க்க நல்ல சூழ்நிலையை, இதன் மூலம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இந்த முயற்சிகள் நூதன அணுகுறை உள்ளவையாகவும், பிள்ளைகளை வளர்ப்பதில் குடும்பங்களுக்கு பயன்தருவதாகவும் இருக்கவேண்டும்.

தேவனுடைய கற்பனையின்படி பெற்றோர் கனம்பண்ணப்பட வேண்டும். அறியாமையினால் அழிந்து கொண்டிருக்கும் இன்றைய சமுதாயத்தை உயிர்பிக்கும் இரகசியம், இதில்தான் அடங்கியுள்ளது என்பதை பாஸ்டர் அமலு அழகாக எடுத்துரைக்கிறார். ஊக்குவிக்கும் விதத்திலே பிள்ளைகளுக்கு போதித்து அவர்களை நடத்தவேண்டுமென்று அவர் ஆலோசனை சொல்லுகிறார். பிள்ளைகள் தவறு செய்யும்போது, அவர்களுக்கு தண்டனை வழங்கி அவர்கள் மனதைக் குழப்பமடைய செய்வதற்கு பதிலாக, அவர்களோடு பேச்சு வார்தை நடத்தியும், ஆலோசனை கொடுத்தும் அவர்களை வழிநடத்த வேண்டுமென்று அவர் வலியுறுத்துகிறார்.

ஆணும் பெண்ணும் இணைவதால் பிறக்கும் குழந்தையை பாஸ்டர் அமலு சற்று துணிச்சலாக முதல் மனிதன் சிருஷ்டிக்கப்பட்டதற்கு ஒப்பிடுகிறார். மனுஷனை சிருஷ்டித்த பின்பு தேவன் அவனை அழகிய சுழல் வைத்து பாதுகாத்து பராமரித்தார். அப்படியே ஒரு குழந்தை பிறந்தபின்பு அதன் தகப்பனும் தாயும் அதனை பத்திரமானதொரு சுழ்நிலையில் வைத்து, பருவமடைந்து தன் வாழ்வை தானே நடத்தும் நிலை

வரும்வரைக்கும் அதைப் பாதுகாத்துப் பராமரித்திட வேண்டும். பெற்றோருடைய இந்த நடவடிக்கையில் திருப்தியடைந்த தேவன் அப்படிப்பட்ட நடத்துதலுக்குப் பிள்ளைகள் கீழ்படிந்து, தங்கள் வாழ்நாள் முழுவதும் பெற்றோரை கனப்படுத்தி அவர்கள் சொல்படி நடந்திட கட்டளையிடுகிறார். பிள்ளைகளிடம் தேவனுடைய திட்டத்தை நிறைவேற்ற, தலைவர்கள் மற்றும் விசுவாசிகள் மத்தியில் ஒரு கூட்டு முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டுமென்று பாஸ்டர் அமலு சொல்லுகிறார்.

பெட்ரோஸ் ஜே. கெப்டோ,

பெஸ்சா இம்மானுவேல் திருச்சபை

நைரோபி

# ஒரு கண்ணோட்டம்

ஒரு வசதியான மனிதனுடைய வாழ்கை பற்றிய கண்ணோட்டத்துடன் இந்தப் பக்கம் துவங்குகிறது. வெற்றியான வாழ்கை வாழ்ந்த அந்த மனிதனை பேட்டி காண பத்திரிக்கை நிருபர் ஒருவர் போனாராம். தன்னுடைய வெற்றி வாழ்க்கையின் இரகசியம் பற்றி அறிய விரும்பிய நிருபருக்கு பதில் அளிப்பதற்கு முன்பு அந்த மனிதர் தன் அறைக்குள் சென்று விலையுயர்ந்த கற்களும் நகைகளும் அடங்கிய பெட்டியொன்றை கையில் எடுத்துவந்து அதிருந்த பொக்கிஷங்களிருந்து பழைய முக்காட்டை கண்ணீர் மல்க எடுத்துக் காட்டினார். "நான் சிறு பிள்ளையாக இருக்கும்போதே என் தகப்பன் இறந்துவிட்டார். என்னை வளர்த்து ஆளாக்கும் பொறுப்பு தனித்துவிடப்பட்ட என் தாயின் மீது விழுந்தது. அவர் பட்ட அத்தனை கஷ்டங்கள் மத்தியிலும் தேவனுடைய கிருபை என்னுடைய வாழ்வில் இருக்கவேண்டுமென்று இடைவிடாமல் ஜெபித்து என்னை வளர்த்தார். அவர் முழங்கால் படியிட்டு ஜெபிக்கும்போதெல்லாம் இந்த முக்காட்டை அணிந்து தான் ஜெபிப்பார்கள். நான் வாழ்க் கையில் ஜெயம் பெறுவதற்குக் காரணமாக இருந்த அவருடைய ஜெப முயற்சியை கனப்படுத்தும் வகையில் அவர் மரித்தபின்பு இந்த முக்காட்டை நான் என்னுடைய பொக்கிஷங்களை வைக்கும் பெட்டியிலே வைத்து பாதுகாக்கிறேன்; என்றார்.

தன்னுடைய ஜெபத்தினாலே தன் மகனை வெற்றியுள்ளவனாக மாற்றவேண்டும் என்கிற அந்த ஏழை பெண்ணின் உறுதியை நாம் இங்கே காண்கிறோம். அவளுடைய வலிமையான ஜெபத்தின் விளைவாக அந்த மகன் மகத்தான வெற்றியுள்ள வாழ்க்கையை அடைந்தான். இப்படியாக அவனுடைய வாழ்க்கையின் வெற்றியில் அந்த தாய் முக்கிய பங்கை ஆற்றினாள்.

கர்த்தருடைய ஆசீர்வாதத்தினால்தான் அவளால் தன் மனதின் ஆசையை தன்னுடைய மகனிடம் பரிமாற முடிந்தது. அதினிமித்தம் அந்த வசதியுள்ள மனிதன் தன் ஆசீர்வாதத்திற்குக் காரணமாக இருந்த காரியத்தைத் தொடர்ந்து செய்கிறவராக ஆனார். இந்த புத்தகத்தில் மனித இனத்திற்குக் கர்த்தர் கொண்டுள்ள நோக்கம் பற்றி அருமையான இரகசியங்கள் உள்ளடங்கியுள்ளது. பெற்றோர் பிள்ளைகள் உறவு தேவனுடைய அளவுகோன்படி எப்படிபட்டதாக இருக்கும் என்பதை இந்த புத்தகம் காட்டுகிறது. மேலும் இது சிலருடைய வாழ்கையை உதாரணமாகக் கொடுத்து, அவர்களை விடுவிக்க தேவன் எத்தனை உள்மையுள்ளவராக இருந்தார் என்றும் காட்டுகிறது.

தேவனுடைய வார்த்தையின்படி பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும் என்பதை கற்பிக்கும் இந்த புத்தகம், ஆறு அத்தியாயங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் சத்தியத்தை அறிந்து அதற்குக் கட்டுப்பட்டால் என்ன ஆசீர்வாதங்கள் கிட்டுமென்றும், சத்தியத்தை அலட்சியம் செய்தால் என்ன சாபங்கள் வருமென்றும் இந்த புத்தகம் கூறுகிறது. மேலும் எந்தெந்த வேத வார்த்தைகளின்படி பெற்றோர் பிள்ளைகளை உருவாக்கி வளர்க்கவேண்டும் என்றும் இப்புத்தகம் கற்றுக்கொடுக்கிறது.

உங்களுடைய ஆவிக்குரிய தகப்பன்மாரை கனம்பண்ணுங்கள் என்கிற கடைசி அத்தியாயம் இன்னும் அதிகமாக விரிவாக்கப்பட்டு, வேத ஆதாரத்துடன் இந்த தலைமுறையினரை சந்திக்கும் வகையில் கொடுக்கப்பட்டிருக்கலாம். இருந்தாலும்,தலைமுறைகளின் இடையே இருக்கும் தொடர்பு குறைவிற்கான ஏராளமான காரணங்களை இந்த புத்தகம் அலசுகிறது.

*இந்த சந்ததிக்கு அதிகாரமுள்ள ஆவிக்குரிய தகப்பன்மார்கள் இல்லாமையால், சத்தியம் விட்டுக் கொடுக்கப்படுகிறது என்றும், ஆவிக்குரியதும் தெய்வீகமானதுமான நோக்கங்கள் மீறப்படுகின்றன என்றும் நாம் காண்கிறோம். ஆகையால் இந்தப் புத்தகம் இந்த தலைமுறைக்குச் சவால் விடுகிற தாக வும், மாம்சத்தின்படி பெற்றோராயிருப்பவர்களையும் ஆவிக்குரிய பெற்றோராய் இருப்பவர்களையும் கன ம் பண்ணவேண்டியதன் அவசியத்தை போதிப்பதோடு இளைஞர்களுக்கான அன்றாட வாழ்வின் நடத்துதலையும் தருகிறது.*

*24/7 பரிந்துபேசும் மையத்திருந்து சாமுவேல் ஹாயிலு*



# முன்னேறும் வழி

தற்போது இருக்கும் உலக சூழல் பலரால் குறை கூறப்படுகிறது. அதற்கு பல காரணங்கள் இருந்தாலும் மக்கள் நடுவே காணப்படும் சுயநலமே முக்கிய காரணமாக இருக்கிறது. பலர் பெற்றோரை குறித்து அக்கறை எடுப்பதில்லை. முதியவர்களை கவனிக்க தவறுகிறார்கள். அப்படியிருந்தாலும், இது இந்த தலைமுறையில் மாத்திரம் காணப்படும் குறை இல்லை இது இரண்டாயிரம் வருடங்களுக்கு மேலாக மனித இனத்தில் காணப்படும் குறை தான் என்று சிலர் வாதாடுகிறார்கள். இது ஆயிரக்கணக்கான வருடங்களாக இருக்கும் குறைதான் என்பது மறுக்க முடியாத உண்மை. இருந்தாலும் அது தற்காலத்தில் மிகவும் அதிகமாக இருக்கிறது என்பதே நம்முடைய வாதம்.இயேசுகிறிஸ்து பின் வருமாறு கூறினார்: அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக, “நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? உன் தகப்பனையும் உன் தாயையும் கனம் பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய

கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்" *(மத்தேயு 15:3–6).*

எனவே, இதிருந்து கீழ்படியாமையும் தாய் தந்தையரைக் கனம்பண்ணாமல் போவதும் கிறிஸ்துவின் காலம் முதலே இருந்தது என்று அறிகிறோம். ஆனால் அன்று இயேசுவின் காலத்தில் இருந்ததே இன்று நம்முடைய காலத்திலும் இருக்கிறது என்கிறதைவிட, அப்பெரிய குறையைக் குறித்து இந்நாள் சபைக்குள் அக்கரையில்லை என்பதே கவலைக்குரிய விஷயமாகும். இந்த அலட்சியம் அந்த பிரச்சனையை அதிகப்படுத்துகிற ஒன்றாக இருக்கிறது. வேதம் தெளிவாகச் சொல்லுகிறபடி ஆசீர்வா தங்களும், தீர்க்காயுசும், பெற்றோரை கன ம்பண்ணுவதினால் மாத்திரம் கிடைக்கிறவையாக இருக்கின்றன.

எனவே தேவனுடைய கற்பனையைக் குறித்து மக்கள் மத்தியில் ஒரு விழிப்பு ஏற்படுவதற்கும், இளய தலைமுறையிரை அதிலே போதித்து வழிநடத்தும்படி சமுதாயம் பொறுப்பெடுத்து செயல்படவும், அறைகூலாக இருக்கும்படி நான் இந்த புத்தகத்தை எழுதியுள்ளேன். இந்த புத்தகத்தை ஆர்வத்தோடு படியுங்கள். நான் எதையாகிலும் சொல்லாமல் விட்டிருந்தால் அதையும் சேர்த்தே படியுங்கள்.

நம்முடைய தலைமுறையை எதிர்நோக்கும் சவால் எத்தகையது என்பதை வாசகர்கள் உணர்ந்து, பரிசுத்த வேதாகமத்தின் அடிப்படையில் திட்டங்கள் தீட்டி அவைகளை எதிர்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன்.

அமிலு கிட்டா,

போதகர், இம்மானுவேல் ஒருமித்த திருச்சபை.

எத்தியோப்பியா, அடிஸ் அபப்பா

# பொருளடக்கம்

## அத்தியாயம் 1

### எல்லாரும் அறியவேண்டிய சத்தியம்

1. 1. அறிவைத் தரும் வார்த்தைகளுக்கு இருதயத்தைத் திறப்பது..............18

1. 2. தேவனுடைய கற்பனைகளைக் குறித்த அறிவு............................................22

1. 3. சத்தியம் மீறப்படுவதுமில்லை ஒழிக்கப்படுவதுமில்லை.......................24

1. 4. அதிகார வரையரையை அங்கீகரித்தல்...........................................................27

1. 5. சர்வதேச இயக்கங்களின் தாக்கம்.........................................................................29

1. 6. நம்முடைய தேசத்தின் இளைய சந்ததி..........................................................33

1. 7. திருச்சபை...............................................................................................................................35

## அத்தியாயம் 2

### நம்மிடம் எதிர்பார்க்கப்படும் சத்தியம் என்ன

2. 1. நம்முடைய பெற்றோருக்கு மதிப்பு அளித்தல்.............................................41

2. 2. நிபந்தனையின்றி பெற்றோரைக் கனம்பண்ணுதல்...............................44

2. 3. உங்கள் பெற்றோரை வெறுக்காதீர்கள்.............................................................47

2. 4. பெற்றோருக்குக் கீழ்படிதல்..........................................................................................49

2. 5. பெற்றோரைப் பிரியப்படுத்துதல்...........................................................................52

2. 6. பெற்றோரின் அறிவுரைக்கு செவிகொடுத்தல்............................................55

2. 7. பெற்றோரைப் புகழுதலும் வாழ்த்துதலும்......................................................58

2. 8. தவறுகளுக்கு மன்னிப்புக் கோருதல்.....................................................................60

2. 9. பெற்றோரை இழந்தவர்களுக்கு ஆலோசனைகள்...................................63

2. 10. பெற்றோருக்கு பரிசுகளை வழங்குதல்.......................................................65

2. 11. பெற்றோரின் நல் வார்த்தைகளால் ஆசீர்வதிக்கப்படுதல்..................67

## அத்தியாயம் 3

### பெற்றோரை அவமதிப்பதாலும் கனவீனம் பண்ணுதலினாலும் வரும் பலன்கள்


3. 1. சாபங்கள்......71

3. 2. அது கீழ்தரமான அடிமையாக ஆக்கும்......74

3. 3. நம்முடைய வாழ்நாளை அது குறுகப்பண்ணும்......78

3. 4. தீய தாக்குதல்களை அது வரப்பண்ணும்......81

3. 5. நம்மைப் பொல்லாத வித்தின் அறுவடையை அறுக்கப்பண்ணும்......90


## அத்தியாயம் 4

### பெற்றோருக்குக் கீழ்படிதலினாலும் அவர்களைக் கம்பண்ணுதலினாலும் விளையும் பலன்கள்


4. 1. நாம் ஆசீர்வாதங்களைப் பெறுவோம்......93

4. 2. நம்முடைய வாழ்நாளை அது நீட்டிக்கும்......97

4. 3. அது வெற்றியை கொண்டுவரும்......100

4. 4. நல்ல வித்தின் அறுவடையை அறுப்போம்......103


## அத்தியாயம் 5

### பெற்றோருடைய கடமைகள்


5. 1. எதிர்மறையான சொற்களை பிள்ளைகள்மேல் பயன்படுத்துவதால் வரும் பலன்கள்......108

5. 2. நேர்மறையான சொற்களை பிள்ளைகள்மேல் பயன்படுத்துவதால் வரும் பலன்கள்......111

5. 3. தேவனுடைய அறிவுரையின்படி பிள்ளைகளை
வளர்த்தல்....112

5. 4. தகப்பன்மார் பிள்ளைகளைக் கோபப்படுத்தக்கூடாது....116

5. 5. சரியான நடக்கைக்கு பிள்ளைகளை
ஊக்கப்படுத்துதல்....118

5. 6. தெய்வீக தயையோடே பிள்ளைகளை
ஆசீர்வதித்தல்....121


## அத்தியாயம் 6

### ஆவிக்குரிய பெற்றோரைக் கனப்படுத்துதல்

6. 1. தெய்வீக நடத்துதல் தகப்பனின் நடத்துதல்....125

6. 2. நம்முடைய வாழ்வில் தகப்பனாக
பணியாற்றினோரை அடையாளம் காணுதல்....129

6. 3. தலைமுறைக்கு பிதாக்களாக நின்று
பணியாற்ற அழைக்கப்பட்டோரை அங்கீரித்தல்....132

6. 4. தகப்பனாக பாத்திரம் வகிப்போரின் அசவசியம்....133

6. 5. தகப்பன்களா தலைவர்கள் மதிக்கப்பட வேண்டும்....135

6. 6. தகப்பன்கள் எச்சரிக்கையுடன் திருத்தப்படவேண்டும்....137

6. 7. நேர்மறையும் எதிர்மறையுமான தாக்கங்களை அடையாளம்
காணுதல்....139


6. 8. ஆவிக்குரிய தகப்பன்மாரின் ஆசீர்வாதத்தை தேடுதல்....140

முடிவுரை....143

நூற்பட்டியல்....143

# அத்தியாயம் ஒன்று

## எல்லாரும் அறியவேண்டிய சத்தியம்




நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்து விடுவேன்.

ஓசியா 4:6

அத்தியாயம் 1

# எல்லாரும் அறியவேண்டிய சத்தியம்

## 1. 1. அறிவைத் தரும் வார்த்தைகளுக்கு இருதயத்தைத் திறப்பது

நாம் அனைவரும் பிள்ளைப் பருவம் முதல் முதிர்ந்த பருவம் வரைக்கும் நம்முடைய வாழ்க்கை பயணத்தில் நிறைய ஏற்றத்தாழ்வுகளை அனுபவிக்கிறோம். அந்த அனுபவங்களி–ருந்து நம் பெற்றோர் மூலமாகவும், நம்முடைய சூழ்நிலைகளி–ருந்தும், ஒருவரிடமிருந்து ஒருவரும் நாம் ஏராளமான அறிவை அடைந்துள்ளோம். நமக்கு தற்போது இருக்கும் அறிவானது, நாம் இயற்கையாக பெற்ற ஒன்றல்ல. அது நம்மை சுற்றிய சூழ்நிலைகளி–ருந்து பெறப்பட்ட ஒன்றாக இருக்கிறது. மட்டுமல்லாமல், மற்ற வர்கள் கற்றுக்கொண்டதும், அவர்கள் சேர்த்துவைத்ததுமாகிய அறிவிலிருந்தே நமக்குக் காரியங்கள் கற்றுக்கொடுக்கப்பட்டன.

நம்மில் சிலர், ஒரு நிலை வரும்போது, தனக்குக் கிடைக்கப்பெற்ற அறிவே போதும் என்று எண்ணங் கொள்ளுகிறார்கள். வாழ்க்கையில் நாம் அறியவேண்டியது அவ்வளவுதான் என்று அவர்கள் நினை க் கிறார்கள். ஆதலால் இன்னும் அதிக அறிவை அடையவோ, தங்கள் சூழ்நிலை தெரிவிக்கும் காரியங்களுக்குமேல் எதையும் அறிந்துகொள்ளவோ அவர்களுக்கு ஆர்வம் இருப்பதில்லை.

அறிவானது அழிவில் இருந்து நம்மைத் தப்புவிக்க வல்லதாக இருக்கிறது. நம் அனைவரையும் பாதிக்கும் மாயையான காரியங்களிருந்தும், கனியற்ற ஓட்டங்களிருந்தும் அறிவு தப்புவிக்கும். ஆனால் அறிவின்மையோ, பாவம் எது? நீதி எது?என்று சரியாக தெரியாதபடி பார்வையை மங்கலாக்கிவிடும்.

நீ அறிவை வெறுத்தாய், ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்து விடுவேன்;

*ஓசியா 4:6*

மேற்கண்ட வேத பகுதி, இஸ்ரவேல் ஜனங்கள் பாவ சேற்றில் சிக்கி, தேவனுடைய சித்தத்தைவிட்டு தூரம் போயிருந்த சமயத்தில் அவர்களிடம் உரைக்கும்மாறு ஓசியாவின் மூலமாக சொல்லனுப்பப்பட்ட வார்த்தை. தம்முடைய மக்கள் பாவம் செய்வதற்கு அவர்களுடைய அறிவில்லாத தன்மையே காணரமாக இருக்கிறது என்பதை தேவனாகிய கர்த்தர் தெளிவாக வெளிப்படுத்துகிறார். பாவத்தின் கோர விளைவுகளைப் பற்றி தெரியாததினால் இஸ்ரவேல் மக்கள் பாவஞ்செய்வதாக இங்கே காண்கிறோம்.

அறிவில்லாமையின் மற்றொரு விளைவு என்னவென்றால், தேவனுடைய செய்தியை அறியும் ஆர்வத்தில் தொலைநோக்கு இல்லாமல் போவது ஆகும். இஸ்ரவேலின் ஆசாரியர்களால் தேவனுடைய கற்பனையின்படி தங்கள் ஊழியத்தை நிறைவேற்றக்கூடாமல் இருந்தது. தேவனுடைய வார்த்தையை ஜனங்கள் மனந்திரும்பத்தக்கதாக அவர்களுக்குப் போதிக்கும்படி பணிக்கப்பட்ட அவர்கள், அந்த வேலையை சரிவர செய்ய பெலனற்றவர்களாக இருந்து, தாங்களே தேவனுக்கு விரோதமாக அதிகமதி கமாக பாவம் செய்கிறவர்களாகவும் இருந்தார்கள்.

நம்முடைய நாட்களிலும் நினைத்துப்பார்க்க முடியாத அளவுக்கு இதுபோன்ற சூழ்நிலைகள் இருக்க தான் செய்கிறது. தம்முடைய மக்கள்மேல் தேவன் தலைவர்களாக ஏற்படுத்தினவர்கள் இது போன்ற கண்ணிகளில் சிக்குண்டிருக்கிறார்கள். சத்தியத்தை தேடி ஆராய்ந்து ஜனங்களுக்கு போதிக்கவேண்டிய அவர்கள், அப்படி செய்யாதிருக்கிறார்கள். தலைவர்கள், தங்கள் மக்கள் இன்னும் அதிக அறிவு வேண்டுமென்கிற தாகத்தோடேத் தேடிவரக் கூடியவர்களாக இருக்கும்படி அவர்களை உருவாக்க வேண்டும்.

உடனே சகோதரர் இராத்திரிகாலத்திலே பவுலையும் சீலாவையும் பெரோயா பட்டணத்துக்கு அனுப்பிவிட்டார்கள்; அவர்கள் அங்கே சேர்ந்து, யூதருடைய ஜெபஆலயத்திற்குப் போனார்கள். அந்தப் பட்டணத்தார் மனோவாஞ்சையாய் வசனத்தை ஏற்றுக்கொண்டு, காரியங்கள் இப்படியிருக்கிறதா என்று தினந்தோறும் வேத வாக்கியங்களை ஆராய்ந்துபார்த்ததினால், தெசலோனிக்கேயில் உள்ளவர்களைப்பார்க்கிலும் நற்குணசாலிகளாயிருந்தார்கள்.

*அப். 17:10,11.*

ஆசியாவின் மத்திய கிழக்கு பகுதியில் பவுலும் சீலாவும் ஊழியத்தில் ஈடுபட்டபோது, அவர்களை ஏற்றக்கொண்ட மக்களும் இருந்தார்கள், அவர்களுடைய அப்போஸ்தல பட்டத்தை ஏற்றுக்கொள் ளாதவர்களும் இருந்தார்கள். அதேபோல அவர்களை ஏற்றுக்கொண்ட பட்டணங்களும் இருந்தன அவர்களை ஏற்றுக்கொள்ளாத பட்டணங்களும் இருந்தன.

அப்போஸ்தல நடபடிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பெரெயா பட்டணம் மக்கெதோனியா மகாணத்தைச் சேர்ந்தது. அது தெசலோனிக்கே பட்டணத்திருந்து 80 கி.மீ. தூரத்தில் இருந்தது. முதலில் இந்த மாகாணத்து மக்கள் சுவிசேஷத்தை நிராகரித்தார்கள். ஆனால் பின்பு அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள். அவர்கள் தங்கள் உள்ளங்களைத் திறந்து, தேவனுடைய வார்த்தையை ஆராய துவங்கினார்கள். அவர்கள் மறுப்பு இல்லாமல் இந்த புதிய உபதேசத்தை ஏற்றுக்கொண்டபடியால், கர்த்தராகிய இயேசுகிறிஸ்து தம்மை ஏற்றுக்கொள்ளவும் விசுவாசிக்கவும் தக்க வாய்ப்பை அவர்களுக்குக் கொடுத்தார்.

பெராயா பட்டணத்தாருக்கும் தெசலோனிக்கேயா பட்டணத்தாருக்கும் கொடுக்கப்பட்டதுபோல வாய்ப்பு நமக்கும் கொடுக்கப்படும்போது நாம் சத்தியத்தை அறியவும், தேவனுடைய வார்த்தையைப் பற்றிய அறிவை அடையவும் நம்முடைய உள்ளங்களை நாம் திறந்திட வேண்டும். மேலும் இந்த வாய்ப்பைப் பெற்றிடாத மற்ற மக்களுடன் நாம் இந்த சுவிசேஷத்தைப் பகர்ந்திட ஆயத்தமாய் இருக்க வேண்டும். நாமும் பெராயா பட்டணத்து மக்களைப்போல நம்முடைய உள்ளத்தைத் திறந்து நம்மைச் சுற்றி இருக்கிற சூழ்நிலை வேதத்தின்படி இருக்கிறதா என்றும் அவை நம்மை எந்த விதத்தில் பாதிக்கின்றன என்றும் ஆராய்கிறவர்களாக இருக்கவேண்டும். நம்முடைய சுழல்களில் சத்துருவினுடைய மறைவான இரகசியங்கள் எதுவும் பதிந்திருக்கின்றனவா என்றும் சோதித்தறிகிறவர்களாய் இருக்கவேண்டும். அந்த மறைவான இரகசியங்களை நாம் மறுத்து தள்ளிவிட்டு தேவனுடைய வார்த்தையோடுகூட ஐக்கியங்கொள்ளுகிறவர்களாக ஆக வேண்டும்

.உங்களுக்கு நான் ஒரு எளிய கதை ஒன்றை சொல்லட்டும். கம்யூனிஸ்டுகள் எத்தியோப்பியாவை ஆண்டபோது, அதிலே சேவகம் புரிந்த இரண்டு தோழர்களில் ஒருவன் பின்நாட்களில் இயேசுவை ஏற்றுக்கொண்டான். இத்தனைநாள் வரை தேவன் இல்லை என்கிற கொள்கையை உறுதியாக நம்பி வந்த அவன் தன் பாவங்களை அறிக்கையிட்டு, தேவன் ஒருவர் உண்டு என்று

பகிரங்கமாக அறிக்கையும் செய்தான். ஒரு சபையிலும் அவன் அங்கத்தினன் ஆனான். இன்னும் நாத்தீகத்திலேயே உறுதியாய் இருந்த அவனுடைய நண்பன் அவனை நோக்கி, "இத்தனை நாள் தேவன் இல்லை என்று எல்லார் முன்பாகவும் சாதித்துவிட்டு இன்று தேவன் இருக்கிறார் என்று நீ போய் அவர்களிடம் சொன்னால் அது முரண்பாடாக இருக்காதா? அவர்கள் உன்னைப்பார்த்து சிரிக்க மாட்டார்களா?'' என்று கேட்டான்.

அதற்கு புதிதாக விசுவாசத்திற்குள் வந்த அந்த நபர், "தேவன் ஒருவர் இருக்கிறார் என்பதை அறிந்து கொண்ட நான், ஜன ங்களிடம் போய் தேவன் இருக்கிறார் என்று சொல்லுவதில் தவறு இல்லை. அப்படி சொல்லுவதற்கு நான் வெட்கப்படவும் இல்லை. மாறாக, இன்னும் தேவன் இல்லை என்கிற கோட்பாடிலேயே உறுதியாக இருக்க விரும்புகிற நீதான் உன் நிலையை கவனிக்க வேண்டும். தேவன் ஒருவர் இருக்கிறார் என்று தெளிவாக்கப்பட்டும் நீ கெட்டுப்போவது மட்டும் அல்லாமல், பிறரையும் வழித்தப்பப் பண்ணுகிறாய் என்பதை நீ உணர வேண்டும்.'' என்றான்.

கம்யூனிசத்திருந்து இரட்சிக்கப்பட்ட அந்த புதிய விசுவாசியைப்போலவே நாமும் நம்முடைய நிலையைக் கடின ப்படுத்திக்கொள்ளுவதற்கு பதிலாக, சற்று வளைந்துகொடுக்கும் பக்குவமுடையவர்களாக இருக்கவேண்டும். அப்படி வளைந்து கொடுக்கும்போது தான் நாம் புதிய காரியங்களைக் கற்றுக் கொள்ள ஏதுவாக ஆகும்.

நம்முடைய கிரியைகளில் சிலவற்றை நாம் சின்ன காரியங்கள் என்றும் தீங்கு இல்லாதவைகளென்றும் நினைத்து அவைகளுக்கு அதிக கவனம் செலுத்தாமல் போகிறோம். ஆனால் அவை தீங்கானவைகள் என்று பிற்பாடு உணருகிறோம். நாம் எப்போதும் விழிப்புள்ளவர்களாகவும், திறந்த மனதுள்ளவர்களாகவும் இருந்து அந்த கிரியைகளின் விளைவுகளை சோதித்தறிகிறவர்களாக இருக்க வேண்டும். அப்படியானால் பரந்த அறிவும் மற்றவர்களுக்கு போதிக்கும் சிலாக்கியமும் கொண்டவர்களாகிய நம்மில் சிலர், அதிக அறிவடைவதை தவிர்க்கவே கூடாது. மாறும் சூழல்களிருந்து காரியங்களைக் கற்றுக்கொள்ளுகிறவர்களாக நாம் இருக்கவேண்டும்.

தாய் தந்தையரை கனம்பண்ணுவதினால் விளையும் நன்மைகளைக் குறித்து நாம் இப்போது படிக்கப்போகிறோம். அவைகளை பின் வரும் அத்தியாயங்கள் நமக்குத் தருகின்றன.

## 1.2. தேவனுடைய கற்பனைகளைக் குறித்தஅறிவு

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக

*யாத்திராகமம் 20:12.*

மோசேயினிடம் தேவன் கொடுத்த கட்டளைகளில் பிரதான மானது பத்து கற்பனைகள் தான். இது இஸ்ரவேல் புத்திரரால் அதிகம் மதிக்கப்படுகிறதும், கட்டாயம் கைக்கொள்ளப்பட வேண்டியவை என்றும் மதிக்கப்படும் தேவ கட்டளையாக இருக்கிறது. அதில் ஒரு கற்பனையாகிய, உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாக என்கிற கற்பனை எல்லா தலைமுறை களுக்கும் முக்கிமானதாக இருக்கிறது. தாய் தகப்பன்மாரைக் கன ம்பண்ணவேண்டும் என்பது, உலகத்திருந்து தோன்றிய கட்டளை அல்ல. அது பாரம்பரிய சட்டமோ உலக தலைவர்களால் தீர்மானிக்கப்பட்ட சர்வதேச உடன்படிக்கையோ அல்ல. அது பல தலைமுறைகளுக்கு முன் ஏற்றப்பட்ட தேசிய சட்டமோ சர்வதேச சட்டமோ அல்ல. இது பிள்ளைகளுக்குக் கொடுக்கப்படும்படி பெற்றோர்களால் ஏற்றப் பட்ட சட்டமும் அல்ல. பத்து மாதம் சுமந்து பெற்றதாலும் பெற்ற பிள்ளையை பாதுகாத்து பராமரித்ததினாலும் தாய்க்கும் தகப்பனுக்கும் கொடுக்கப்பட்ட உரிமையும் அல்ல. இது தகப்பனுடைய உரிமையோ பெற்றெ டுத்ததால் தாய்க்கு உண்டாகும் உரிமையோ அல்ல. உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்று தேவன் கட்டளையிட்டிருப்பதால் மட்டுமே இந்த போதனை ஏற்படுகிறது. தேவனால் தரப்பட்ட இந்த கட்டளை மனுக்குலத்தைக் குறித்த தேவனுடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறது. ஆகவே நாம் கீழ்படிந்து பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும்.

தாய் தந்தையரைக் கனம்பண்ணவேண்டும் என்கிற கற்பனை தேவனுடைய பத்து கற்பனைகளில் முக்கியமான கற்பனை யாகக் கொடுக்கப்பட்டுள்ளது. எனவே ஒவ்வொரு சமுதாயத்தைச் சேர்ந்தவர் களும் அதனை அங்கீகரித்து புரிந்துகொள்ள வேண்டும். இது மிக முக்கியமான கற்பனையாக இருப்பதால், நாம் நம்முடைய தாய் தகப்பன்மாரைக் குறைவில்லாமல் கனம்பண்ணவேண்டும். அவர்களை கனம்பண்ணாமல் போனாலோ, அவர்களை அவமதித்தாலோ, அது கொலை கொள்ளை போன்ற குற்றங்களுக்கு சமானமாக இருக்கும். எனவே தேவனுடைய கட்டளைக்கு தேவன் சொன்னபடியே தவறாமல் கீழ்படிவது அவசியமாகிறது.

நாட்டு சட்ட திட்டத்தில் கொலை கொள்ளை போன்ற குற்ற ங்களுக்கு எதிராக சட்டங்கள் உண்டு. ஒருவன் அந்த கொடூர செயல்களில் ஈடுபட்டால், அந்த சட்டங்களின்படி தண்டிக்கப்படுகிற ான். இந்த சட்டங்களை சமுதாயத்தில் அமல்படுத்த அதற்கான அரசாங்க துறைகள் உண்டு. இருந்தாலும் எல்லா குற்றங்களுக்குக் காரணமே தகப்பனையும் தாயையும் கனம்பண்ணவேண்டுமென்கிற தேவனுடைய அடிப்படை கட்டளையை மனிதன் மதிக்காமல் போவதுதான். மக்கள் மத்தியில் நிகழ்த்தப்படும் அத்தனைக் குற்ற ங்களும் ஏதாவது ஒரு வகையில் குடும்ப சீர்கேட்டின் விளைவாகச் செய்யப்படுகிற செயலாக இருக்கிறது. கொலைகள், போதை பொருள் விற்பனை செய்தல், அல்லது சமுதா யத்தை பாதிக்கும் எந்த ஒரு குற்றமும் குடும்ப சூழல் காரணமாக எழும்புகிறதாக இருக்கும். அக் குற்றங்களில் ஈடுபடுவோர் தங்கள் தாய் தகப்பன்மாரை கன ம்பண்ணாதவர்களாக வளர்ந்து வந்திருப்பார்கள்.

தாய் தகப்பனை கனம்பண்ண வேண்டுவது குறித்து விரிவாக பார்ப்பதற்கு முன்பாக, அது தேவனுடைய கரத்திருந்து வந்த கட்டளை என்பதை நாம் அங்கீகரிக்கவேண்டும். எல்லா சட்டங்களும் சரிசமமானவை அல்ல. ஒருசில கட்டளைகள் லேசாக எடுத்துக்கொள்ளப்படலாம் மற்றவை அப்படி எளிதாக எடுத்துக்கொண்டுவிட முடியாது. சட்டத்தை ஏற்றியவர் யார் என்பதைப் பொறுத்துதான், அச்சட்டம் உறுதியானதா இல்லையா என்பது தீர்மானிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, பல்வேறு அரசு துறைகளின் சட்டம் இயற்றுவோர் அநேகம்பேர் இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறு அளவு அதிகாரம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். தேசத்தின் அரசியல் சாசனம் எல்லா சட்டங்களுக்கும்

மேலாக இருக்கிறது. அது பல விவாதங்களுக்குப் பின்பு அமலுக்கு வந்ததாகும். சட்டங்கள், பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்ட பின்பு ஏற்றப்படுகின்றன. அதன்பின்பு அவைகள் தேசத்தின் தலைவரின் ஒப்புதல்பேரில் அமுலுக்கு வருகின்றன. சில நாடுகளில் சட்டம் ஏற்றப்பட உள்ளாட்சிகளின் ஒப்புதலும் தேவைப்படும். இப்படி பெரும்பாலானவர்களின் ஒப்புதன்பேரில் சட்டம் ஏற்றப்பட்டாலும், ஏற்றப்படும் அந்த சட்டம், தேசத்தின் அரசியல் சாசனத்தை மிஞ்சிவிட முடியாது.

அதுபோலவே தகப்பனையும் தாயையும் கனம்பண்ணவேண்டுமென்கிற கட்டளையானது மனிதனிடத் திருந்து பிறக்காமல் தேவனிடத்திருந்து பிறந்த ஒன்றாய் இருக்கிறது (ஏனென்றால் இப்படியொரு கட்டளையை ஏற்றக்கூடிய அளவுக்கு மனிதனுக்குத் திறமை கிடையாது). அதனால் தான் இந்த கட்டளை தலைமுறை தலைமுறைக்கு நிலைத்திருக்கிறது.

தேசத்தின் அரசியல் சாசனத்தையும் பெற்றோருடைய விருப்பங்களையும் மீறி தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும் என்கிற கட்டளை பெரிதாக இருப்பதற்குக் காரணம், அது உன்னதமான தேவனும் கட்டளைகளுக்குக் காரணரும் அவைகளை செயல்படுத்துகிறவருமாகிய தேவனால் அருளப் பட்ட கட்டளையாக இருக்கிறது. எனவே சிருஷ்டிகரால் அருளப்பட்ட கட்டளையை மனித இனம் அல்லத்தட்டவே முடியாது.

## 1.3. சத்தியம் மீறப்படுவதுமில்லை ஒழிக்கப்படுவதுமில்லை

மோசேயினால் இஸ்ரவேல் புத்திரருக்குக் கொடுக்கப்பட்ட கட்டளைகள் மற்றும் பிரமாணங்களில் சில, பிற்காலத்தில் கடைபிடிக்கப்படவில்லை. இதை நாம் புதிய ஏற்பாட்டில் காண்கிறோம். எடுத்துக் காட்டாக: பழைய ஏற்பாட்டில் தீவிரமாகக் கைக்கொள்ளப்பட்ட ஓய்வுநாள் குறித்த கட்டளை புதிய ஏற்பாட்டில் முழுமையாகக் கடைபிடிக்கப்படவில்லை. யூதர்கள் மற்றும் ஏழாம் நாள் திருச்சபையார் இதற்கு அதிகம் முக்கியத்தாலும், மற்ற யாரும் அதனை பழைய ஏற்பாட்டில்

சொல்லப்பட்டபடி மற்ற நாட்களைவிட வேறுபட்ட நாளாக பார்ப்பதில்லை. கர்த்தர் வாரத்தின் முதலாம் நாளிலே உயிர்த்தெழுந்தார் என்பதுதால், கிறிஸ்தவர்கள் முதலாம் நாளை சபை கூடி வருகிற தினமாக ஆசரிக்கிறார்கள். ஏழாம் நாளை பழைய ஏற்பாட்டின் போதனையின்படி விசேஷித்துக்கொள்ள வேண்டுமென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவும் சொல்லவில்லை. ஆனால், தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும் என்கிற கட்டளையோ, அதுபோல பழை ஏற்பாட்டு போதனை என்று ஒதுக்கப்பட்டுப் போகாமல், மொத்த மனித இனத்துக்குமான போதனையாக தொடர்ந்தது.

அப்பொழுது, எருசலேமிலிருந்து வந்த வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவினிடத்தில் வந்து: உம்முடைய சீஷர்கள் முன்னோர்களின் பாரம்பரியத்தை ஏன் மீறி நடக்கிறார்கள்? கைகழுவாமல் போஜனம் பண்ணுகிறார்களே! என்றார்கள். அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவது தாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்.

*மத்தேயு* 15:1-6.

இயேசுவிடம் பரிசேயர் கேட்ட கற்பனைகளும் வழக்கங்களும் மோசேயினால் கொடுக்கப்பட்டவை அல்ல. அவை பாபிலோனிய சிறையிருப்பிருந்து திருப்பினபின்பு ஜனங்களை தங்கள் கட்டுக்குள் வைத்திருக்க மதத்தலைவர்கள் ஏற்படுத்தியவை. எனவே அவை மனுஷரால் ஏற்படுத்தப்பட்டவை. இயேசு ஊழியஞ்செய்த காலத்தில் அவை வாய்மொழியாய் சொல்லப்பட்டு பின்பற்றப்பட்ட

வழக்கங் களாக இருந்தன. ஆனால் அதற்குபின்பு அவை அவைத்து ஒன்று திரட்டப்பட்டு சுமார் கி.பி. 200ல் எபிரெய மொழியில் மக்களின் சட்டங்கள் என்று அர்த்தங்கொள்ளும் ‘மிஸ்னாவாக’ உருவாக்கப்பட்டது.

உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்குகிறீர்கள் என்று கர்த்தர் சொன்ன போது, யூதர்களின் தலைவர்களால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இதுபோன்ற சட்டங்களையே சுட்டிக்காடினார். இதுபோன்ற விவாதங்களை நாம் காணும்போது, தேவனுடைய வார்த்தையை கலப்படம் செய்யவோ மாற்றவோ மனுஷருக்கு உரிமையே இல்லை என்று அறிகிறோம். மனுஷனுடைய விருப்பு வெறுப்பின்படி வசனத்தோடே கூட்டவோ குறைக்கவோ செய்வதன் மூலமாக தேவ சத்தியத்தை ஒருநாளும் மாற்றிவிட முடியாது. குறிப்பாக தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும் என்கிற சத்தியத்தை மாற்றிவிட முடியாது. அது இன்றுவரை மாறாத தெய்வ கட்டளையாக நிலைத்திருக்கிறது.

பரிசேயர்கள் தேவனுடைய முக்கிய கற்பனைகளை அலட்சியப்படுத்தியதோடு அவைகளில் கலப்படம் செய்யவும் முயற்சி மேற்கொண்டனர். தேவனுடைய கட்டளைக்கு பதிலாக அவர்கள் மனுஷர் முன்பாக பெருமை கொள்ளதக்கதாக சாப்பிடுவதற்கு முன்பாகக் கைக்கழுவுதல் போன்ற சட்டங்களை அறிமுகப்படுத்தினார்கள். இத்தகைய செய்கையை இயேசு எதிர்த்தார். இன்றைய திருச்சபைகள் இது போன்ற கண்ணியில் அகப்பட்டுவிடுகின்றன. இயேசு அதுபோன்ற நடவடிக்கையை எதிர்த்தார் என்றால், அவர் இன்றைய சபை தலைவர்களையும் இந்த விஷயத்தில் எதிர்க்கிறவராகவே இருக்கிறார் என்று நாம் அறிந்துகொள்ளலாம். அவர்கள் தங்கள் வழியை மாற்றிக்கொள்ளவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அப்போஸ்தலரும் தங்கள் ஊழியத்தின்போது மாறாத தேவனுடைய சத்தியத்திற்கே முக்கியத்துவம் கொடுத்ததை நாம் காண்கிறோம்.

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது

*எபேசியர் 6:1–3.*

அப்போஸ்தலனாகிய பவுல் இங்கே சபையாருக்கு சொல்ல வருகிற காரியத்தின் பொருளை நாம் இங்கே காண்கிறோம். அவன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும் என்று பழை ஏற்பாடு சொல்லுவதை அவன் அழுத்தி சொல்லி, தேவன் தந்த இந்த பழம் கற்பனையை அலட்சியம் பண்ணக்கூடாது என்று போதிக்கிற ான். இதில் அவன் என்ன செய்யவேண்டும் என்று சொல்லுவதோடு, அப்படி செய்தால் என்ன பலன் கிடைக்கும் என்றும் காட்டுகிறான். பவுன் இதை செய் அதை செய்யாதே என்று போதிக்கும் போதனை யாகச் சொல்லாமல், அப்படி செய்தால் உங்கள் வாழ்நாள் நீடிக்கும் என்று சொல்லி அதை அதன் காரணத்தோடு சேர்த்து விளக்குகிற தை காண்கிறோம்.

ஆகவே இந்த முக்கியமான போதனை ஞாயிறு பள்ளியில் மேலோட்டமாகப் போதிக்கப்படுகிற போதனையாக நின்றுவிடக்கூடாது. பெற்றோரைக் கனம்பண்ணுதலை நாம் சாதாரண பாடமாக எடுத்துக்கொள்ளாமல், அதை பிள்ளைகள் ஆவிக்குரிய வாழ்வில் நல்ல வளர்ச்சியைக் காணத்தக்கதாக அதன் முக்கியத்துவத்தை அறிந்து கீழ்படிய கற்றுக்கொடுக்கப்படவேண்டும்.

## 1. 4. அதிகார வரையரையை அங்கீகரித்தல்

நம்முடைய தேவனாகிய கர்த்தர் தம்முடைய கிரியைகளில் செம்மையும் சீருமாய் இருப்பவர். சபைகளைக் குறித்தும்

குடும்பங்களைக் குறித்தும் அவர் தம்முடைய கடமைகளை நேர்த்தியாய் நிறை வேற்றுகிறார். தாம் செய்ய நினைத்ததை அவர் சற்றும் பிசகாமல் செய்து முடிக்கிறார்.

தம்முடைய அதிகாரத்தை வெளிப்படுத்த தேவன் சித்தம் கொள்ளும்போது, அவர் தம்முடைய திட்டத்தை நிறைவேற்ற சில மனிதரை தெரிந்தெடுத்து பயன்படுத்துகிறார். இஸ்ரவேல் புத்திரரை எகிப்து தேசத்திருந்து கானானுக்குக் கொண்டுசெல்ல கர்த்தர் தீர்மானித்தபோது அவர் இஸ்ரவேல் புத்திரரின் மூப்பரைக் கூடிவரச்செய்து, அதை எப்படி செய்யலாம் என்று கலந்தாலோசிக்கவில்லை. அதை நிறைவேற்ற கர்த்தருக்கு அவர்களது அலோசனையோ ஒப்புதலோ அவசியமாய் இருக்க வில்லை. அவர் தாம் எகிப்திருந்து இஸ்ரவேலரை அழைத்து வரும்போது செய்யவிருப்பதை தம்முடைய தாசனாகிய மோசேயிடம் மட்டும் பேசினார். வாக்குதத்த தேசத்தில் அவர்கள் சுதந்தரிக்கப் போகும் நம்பிக்கையைக் குறித்து அவர் மோசேக்கு மட்டுமே வெளிப்படுத்தினார்.

குடும்பம் என்னும் அமைப்பின் அடிப்படை கட்டமைப்பை நிறுவிய தேவன், தம்முடைய கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் பிள்ளைகள் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணி அவர்க ளுக்குக் கீழ்படிந்திருக்கும்படி குடும்பத்திலே அதிகாரத்தை ஏற்படுத்திருக்கிறார். தங்களுடைய பிள்ளை களை போதித்து வளர்க்கவும், சந்தர்ப்பத்திற்கு தக்க அவர்களை ஆசீர்வதிக்கவும் சபிக்கவும் தேவன் பெற்றோருக்கு அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார். ஆகவே பெற்றோர் குடும்பத்தின் தலைவர்களாக இருக்கும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிறார்கள்.

சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான்,அதற்குச் சந்தேகமில்லை

*எபிரெயர் 7:7.*

பிள்ளைகளை பெற்றோர் பெற்றெடுத்தபடியால் அவர்களைப் பொறுத்தவரையில் இவர்கள் அதி முக்கியமானவர்களாக ஆகிற ார்கள். குடும்பத்தில் மட்டும் அல்லாமல் சபையிலும் சமுதாயத்திலும்,

சரியான தாக்கத்தை ஏற்பத்தும்படிக்கு, இவர்கள் முந்நிலை வகிக்க ஏற்படுத்தப்பட்டுள்ளார்கள். தேவன் தம்முடைய ஜனத்தின் மத்தியில் இத்தகைய அதிகார வரையயையும் திட்டத்தையும் ஏற்படுத்தி யிருப்பது ஏன் என்று பார்க்கும்போது இது தேவனுடைய சித்தம் என்பதை நாம் உணர்ந்துகொள்ள முடியும்.

நீங்கள் மனுஷருடைய கட்டளைகள் யாவற்றிற்கும் கர்த்தர் நிமித்தம் கீழ்ப்படியுங்கள். மேலான அதிகாரமுள்ள ராஜாவுக்கானாலுஞ்சரி, தீமைசெய்கிறவர்களுக்கு ஆக்கினையும் நன்மைசெய்கிறவர்களுக்குப் புகழ்ச்சியும் உண்டாகும்படி அவனால் அனுப்பப்பட்ட அதிகாரிகளுக்கானாலுஞ்சரி, கீழ்ப்படியுங்கள்.

*1 பேதுரு 2:13–14.*

## *1. 5. சர்வதேச இயக்கங்களின் தாக்கம்*

இந்த இடத்திலே உலக சமுதாய பொருளாதார மற்றும் அரசியல் ஒன்றோடு ஒன்று எப்படி இடைபடுகின்றன என்று பார்த்து அவைகளுக்கிடையே இருக்கும் உறவு எத்தகையது என்பதை நாம் காணப்போகிறோம். தேவனுடைய வார்த்தைகளோடு உலக சம்பவங்களை ஒப்பிட்டு பார்த்து, அவைகள் ஏன் அப்படி சம்பவிக்கின்றன என்பதையும் பார்க்க போகிறோம்.

சமீப காலத்திலே ஏராளமான இயக்கங்கள் தோன்றி அநேகருடைய வாழ்க்கையில் பல்வேறு பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றன. சர்வதேச சமூகத்தை பாதித்த இந்த இயக்கங்களில் சில, பெண் ஆணுக்கு சமமானவள் என்றும், மனித உரிமை என்கிற போர்வையில் குழந்தைகளின் உரிமை முன்னிறுத்துவது போன்ற சில கருத்துக்களை முன்வைத்து போராட துவங்கியுள்ளன. மனித உரிமைக்கு இவர்கள் முக்கியத்துவம் கொடுத்து போராடுகிற ார்கள். சமுதாயத்தில் தாழ்த்தப்பட்டவர்களின் உரிமைக்காக இவர்கள் குரல் கொடுத்து எடுக்கும் முயற்சிகள் பாராட்டப்பட வேண்டியவையே.

இருந்தாலும், மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்கிற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. உலக ஞான த்தினால் தோன்றும் ஒவ்வொரு இயக்கத்தையும் நாம் ஏற்றுக்கொள்ள துவங்கினால், அவைகள் கொண்டுவரக்கூடிய பாதிப்பை நாம் காணத் தவறிவிடுவோம். ஆகவே அவைகளை நாம் வகையறுத்துப்பார்த்து, தனிப்பட்ட மனிதனுக்கோ சமுதாயத்துக்கோ அது விளைவிக்கக்கூடிய பாதகமான விளைவுகள் இருப்பின் அவைகளை நாம் நிராகரிக்கவேண்டும்.

இந்த இயக்கங்களின் அடிப்படை அம்சங்கள், ஆரம்பப்பள்ளி நிலையிலேயே பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுக்கப்படுகின்றன. அத்தனை சிறிய வயதிலேயே பிள்ளைகளுக்கு அவற்றைக் கற்றுக் கொடுப்பதன் நோக்கம், சின்னஞ்சிறு வயதிலேயே பிள்ளையையும் அவனுடைய பெற்றோரையும் அந்த சமுதாயத்தையும் வசப்படுத்திக்கொள்ளுவதே ஆகும். பிள்ளைகளுக்கு அத்தனை இளம் பிராயத் தில் அந்த போதனைகளைக் கொடுப்பதால், தேவனுடைய கட்டளைகளுக்கும் நியமங்களுக்கும் ஏற்ப அவர்களை ஆவிக்குரிய ரீதியில் வளர்க்கவேண்டும் என்று எடுக்கப்படும் பெற்றோருடைய முயற்சிகள் பயனற்றவையாக ஆக்கப்படுகின்றன.

இங்கேக் குறிப்பிடப்படவேண்டிய முக்கியமான காரியம் என்ன வென்றால், இந்த இயக்கங்களில் சில, பிள்ளைகள் விளையாட கூடிவரும் இடங்களிலும் அவர்கள் பங்குபெறும் சங்கங்களின் கூட்டத்தி லேயும் போய் அவர்களிடம், “உங்கள் பெற்றோர் உங்களுக்குத் தொல்லை கொடுக்கிறார்களா?” “உங்கள் பெற்றோர் உங்களைத் தண்டிக்கிறார்களா?” என்று விசாரிக்கிறார்கள். இப்படி அவர்கள் செய்வது பெற்றோர் பிள்ளை வளர்ப்பதில் எடுக்கும் முயற்சிகளை முறிய அடிக்கிறவையாக ஆகி விடுகின்றன. இந்த செயல்கள், பிள்ளைகளுடைய வாழ்க்கையில் பெற்றோரைவிட பெரிய அதிகாரம் ஏதோ ஒன்று இருக்கிறது போன்ற எண்ணத்தை பிள்ளைக்குள் தோற்றுவிக்கிறது.

பிள்ளைகளை திருத்த பெற்றோருக்கு இருக்கும் அதிகாரத்திற்கு எதிரான சவால்கள் எழும்பி வருகின்றன. பிள்ளைகளுக்கு இருப்பதாக சொல்லப்படும் அந்த உரிமை மீறல்களை காவல்துறை க்கு தொலை பேசி மூலம் உடனடியாகத் தெரிவிக்கும்படி பிள்ளைகள் பள்ளிகளிலும் மற்ற இடங்களிலும் போதிக்கப்படுகின்றன ர்.பிள்ளைகள் கொடுமைப்படுத்தப்படும் சந்தர்ப்பங்களில் இத்தகைய ஏற்பாடு நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

ஆனால் கொடுக்கப்படும் புகார்களில் பெரும்பாலானவை தவறான வையாகவே இருக்கின்றன. இந்த சூழ்நிலையில் பெற்றோர் பிள்ளைகளைக் கண்டிக்க அச்சப்பட்டு தயங்குகின்றனர். காரணம் காவல்துறை நடவடிக்கை என்று வந்துவிட்டால், பெற்றோரை விட்டு பிள்ளைகள் பிரிக்கப்படலாம்.

மனித உரிமை, பிள்ளைகளின் உரிமை, போன்றவற்றின் நோக்கம் அப்பாவி பிள்ளைகள் கொடுமைக் குள்ளாவதை தவிர்ப்பதாகும். இது நல்ல காரியமாக இருந்தாலும், அதன் செயல்பாடு தீர்க்கமான கண்காணிப்பின்கீழ் இருப்பது அவசியம். அது ஒருநாளும் பிள்ளைகளை மனரீதியிலும் ஆவிக்குரிய ரீதியிலும் வளர்க்க பெற்றோர் எடுக்கும் முயற்சிக்கு முட்டுக்கட்டையாக ஆகிவிடக்கூடாது.

எந்த விதமான நம்பிக்கையும், விஞ்ஞான தத்துவமோ எதுவானாலும் தேவனால் ஏற்படுத்தப்பட்ட நியமத்தை ஒருநாளும் திருத்தவோ மாற்றவோ முடியாது. தேவ நியமத்துக்கு எதிராக இருக்கும் எந்த மனித முயற்சியும் சிக்கலுக்குத் தீர்வாக ஒருபோதும் அமையாது. தேவனுடைய நடத்துதலுக்கு ஒத்துப் போகும் செயல்களே பாதிக்கப்பட்ட தலைமுறைக்கு நல்ல விளைவுகளை ஏற்படுத்தும்.

தேவனுடைய நியமத்துக்கு எதிராக போதிக்கும் போதனைகளைக் கேட்கும் பிள்ளைகள் குழப்ப மடைந்து, தேவனுடைய கற்பனைகளை அசட்டை செய்து, சமுதாயத்தில் தாண்டக்கூடாத சிவப்புக் கோட்டைத் தாண்டிவிடுகிறதை நாம் சில சமயங்களில் காண்கிறோம்.

இந்த இளம் பிள்ளைகள் (எல்லாரும் அல்ல) ஒருவர் மற்றவரைப் பார்த்து இன்னும் அதிகமாக கேடான காரியங்களில் ஈடுபட்டு கெட்டுப்போவதால் அந்த இளம் தலைமுறையின் எதிர்காலமும், அதன் விளைவாக மொத்த சமுதாயத்தின் எதிர்காலமும் கேட்டுக்குள்ளாகக் கொண்டுபோகப்படுகிறது. சமுதாயத்துக்குத் தீங்கு விளைவிப்பது அந்நிய தேசத்திருந்து எழும்பிவருகிற தீமையாக இராமல் இப்போதெல்லாம் உள்ளூரிலேயே பிள்ளைகளை தாறுமாறாக வளர்த்ததன் விளைவாக வருகிறதை பார்க்கிறோம். 2012 ஆம் ஆண்டு அமெரிக்காவின் கனெக்டிக்கட் மாகாணத்தின் நியூடவுன் என்கிற ஊரிலுள்ள சான்டி ஹுக் என்னும் ஆரம்ப பள்ளியில் நடந்த சம்பவம் இதற்கு நல்ல எடுத்துக் காட்டாக இருக்கிறது. அங்கு துப்பாக்கியுடன் நுழைந்த ஒருவன் ஐந்தி–ருந்து பத்து வயதுக்குட்பட்ட குழந்தைகளில் இருபதுபேரை

நம்பிக்கைகளையும் நீதிகளையும் மக்கள் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று போதிக்கின்றன. இதையெல்லாம் பார்க்கும்போது, வரும்முன் காப்பதே நலம் என்று நமக்கு தோன்ற செய்கிறது! இதுபோன்ற சவால்களை முறிய அடிக்க வேண்டுமானால், இளம் சந்ததியார் பெற்றோரை கனம்பண்ணவேண்டும் என்கிற தேவனுடைய அடிப்படை நியமனத்தை கைக்கொள்ளத் துவங்குவதே ஒரே வழியாக இருக்கும். பெற்றோரைக் கனம்பண்ணவேண்டுவதைப் பற்றிய பிரசங்கங்களையும் போதனைகளையும் நாம் அலட்சியம் செய்யாமலும் இருக்கவேண்டும். காரணம் இந்தத் தலைமுறை யானது குழந்தைகளின் உரிமைகள் பற்றிய காரியங்கள் மற்றும் தொழில்நுட்பம் வாயிலாக வந்த நூதன யோசனைகளை அதிகம் பெற்று சிதைந்துபோன சந்ததியாக இருக்கிறது. ஆகவே, சபையின் தலைவர்களும் சமுதாயத்தின் தலைவர் களும் பாதிப்படைந்துள்ள இந்த இளம் தலைமுறையினர் மத்தியில் நல்ல மாற்றத்தை ஏற்படுத்தும் முயற்சியில் முனையவேண்டும். மேலும் மெய்யான தேவனுடைய வார்த்தையை எதிர்க்கும் சக்திகள் கொடுமைகளைக் கட்டவிழ்த்து விடும் காரியங்களும் நடைபெற துவங்கியுள்ளன. இவைகள் கட்டுக் கடங்காத நிலையை அடையும் முன்பு அந்த சக்திகளுக்கு எதிரான போராட்டத்தில் நாம் இறங்க வேண்டும்.

இளைஞர்களால் செயல்படுத்தப்படும் வன்முறைகள் உலகில் எல்லா பகுதியிலும் அதிகமாக நடை பெறுகிறது. 2011 ஆம் ஆண்டு இங்கிலாந்து நாட்டில் ஒருசில நாட்களில் பொருளாதாரத்துக்கும் பொது சொத்துக்கும் பெரும் இழப்பை ஏற்படுத்திய தாக்குதல் ஞாபகத்திற்கு வருகிறது. அப்போது பேசிய இங்கிலாந்து நாட்டு பிரதம மத்திரி டேவிட் கேம்ரூன், குடும்பத்தின் அதிகாரங்கள் பெலவீனப் பட்டிருப்பதை ஒப்புக்கொண்டவராக, தேசம் சமாதான மும் ஸ்திரத்தன்மையும் கொண்டதாக இருக்க, குடும்பங்கள் சட்டத்திற்கு உட்பட்டு பிள்ளைகளை சரியாகக் கையாளவேண்டும் என்று அறிவுறுத்தினார். குடும்பம் சார்ந்த போதனைகளுக்கு முக்கியத்தும் குறைந்து போகிறதும், பிள்ளைகளுக்கு எதிர் மறையான போதனைகள் கொடுக்கப்படுவதற்குமான நல்ல எடுத்துக்காட்டாக இது இருக்கிறது. சிறு பிராயத்திலேயே பிள்ளைகளுக்கு தெய்வீக நீதிகள் போதிக்கப்படுவது முதலாவது குடும்பத்திற்கும் அடுத்து சமுதாயத்திற்கும் பிற்பாடு முழு தேசத்திற்குமே பயன் அளிப்பதாக இருக்கும்.

## 1. 6. நம்முடைய தேசத்தின் இளைய சந்ததி

உன் ஆடுகளின் நிலைமையை நன்றாய் அறிந்துகொள்; உன் மந்தைகளின்மேல் கவனமாயிரு

*நீதிமொழிகள் 27:23.*

தேவன் கொண்டுள்ள திட்டத்தை இளம் பிராயத்திலேயே பிள்ளைகளுக்கு நாம் தெரிவிப்பதற்குக் காரணம் இருக்கிறது. அப்போதுதான் அவர்களால் தங்களுக்கு நேரிடப்போகிற ஆபத்துகளிருந்து தங்களை தற்காத்துக்கொள்ள முடியும். சந்ததியை கர்த்தருக்குள் சீர்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகிற அதே சமயம், இந்த சந்ததியை பாதிக்கிற காரியங்களைப் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டும்.

இந்த சந்ததிக்கும் அதற்கு முந்தின சந்ததிக்கும் பெருத்த வித்தியாசம் இருக்கிறது. இவ்விரு சந்ததியாருடைய நடக்கையை நாம் கவனித்தால் அந்த வித்தியாசம் தெரியும். முந்தின சந்ததியாருக்கு வேத சத்தியங்களின் ஆழம் அதிகம் தெரியாதிருந்தாலும் அவர்கள் தங்கள் பெற்றோரை இந்த சந்ததியை விட அதிகமாகவே கனம்பண்ணுகிறவர்களாக இருந்தார்கள். பொதுவாகவே பெரியவர்களையும் தங்களுக்கு முந்தின சந்ததியாராகிய பெற்றோரையும் மதிப்பது என்பது அந்த சந்ததியார் மத்தியில் நிலவிவந்த வழக்கமாக இருந்ததை பார்க்கிறோம். அதுபோன்ற வழக்கங்கள் பல காலமாகவே சமுதாயத்தின் கலாச்சாரத்தின் அங்கமாக இருந்துவந்தது. இன்றைய சமுதாயத்தில் இளம் தலைமுறையினர் எந்த மொழியை சார்ந்தவராக இருந்தாலும் மரியாதைக்குரிய வார்த்தைகளைப் பயன்படுத்துவதை பார்ப்பது அரிதாகிவிட்டது.

நம்முடைய முற்பிதாக்களின் காலம் முதல் பாரம்பரியத்தில் மையமாக்கப்பட்டிருந்த மதிப்புகளும் பண்புகளும் நம்முடைய கண்களுக்கு முன்பாகவே கொஞ்சம் கொஞ்சமாக கறைந்து மறைந்து

போகிறதை நாம் காண்கிறோம். புதிய தலைமுறையினர் பள்ளியின் விதிமுறைகளை மீறுகிறார்கள். காரணம் அவர்கள் ஆசிரியர்களையோ பெரியவர்களையோ, மதிப்பதில்லை. அவர்கள் வீட்டிலேயும் யாரையும் மதிப்பதில்லை, வெளியிலேயும் யாரையும் மதிப்பதில்லை. திருச்சபையிலும் பரிசுத்த ஸ்தலங்களிலேஆசான்களும் போதகர்களும் மதிப்பிற்குரிய தேவதாசர்களாகக் கருதப்படுவதில்லை. மேல் அதிகாரிகள் அவர்களுக்குக் கீழ் பணிபுரிகிறவர்களால் மதிக்கப்படுவதில்லை. பெருமையை மையமாகக் கொண்ட ஆதாயத்தையே அநேகர் முக்கியப்படுத்த ஆரம்பித்துவிட்டார்கள்.

பாரம்பரிய மரபுகளும் மதிப்பீடுகள் ஆவிக்குரிய வழிநெறிகள் மீறப்படுவதும், ஆசிரியர்களும் தலைவர்களும் சமுதாயத்திர் பெரியவர்களும் அலட்சியம் பண்ணப்படுவதும், தாய் தகப்பனை கனம் பண்ண வேண்டும் என்கிற கற்பனையின் அடிப்படையில் கட்டப்படாத குடும்பத்திருந்து தோன்றுகிற காரியங்களாய் இருக்கிறது. இந்த சந்ததியார் பெற்றோருடைய போதனையும் ஆசீர்வாதமும் அளிக்கப்படாத வெறுமையிலேயே வளர்க்கப்பட்ட சந்ததியாக இருப்பது பரிதாபமான காரியம்.

உலகத்திற்குள் பிரவேசிக்கும் குழந்தைக்கு அதனுடைய வீடும் பெற்றோரும்தான் முதல் நுழைவாயிலாக இருக்கிறது. அதனுடைய வீடு தான் அது அன்பு, மதிப்பு, அதிகார நிலைகள் மற்றும் கீழ்படிதல் ஆகிவையை கற்றுக்கொள்ளும் முதல் பள்ளிக்கூடமாக இருக்கிறது. பெற்றோருடன் இப்படிப்பட்ட உறவுக்கு உட்படாத பிள்ளைகள் பெரிதும் பாதிக்கப்பட்டவர்களாக ஆகிறார்கள். அவர்களை உருவாக்கும் சரியான சூழ்நிலையை அவர்கள் பெறவில்லையென்றால், அவர்கள் தங்களைக் கெடுக்கக் கூடிய தவறான பாதிப்புகளினால் தாக்கப்பட வாய்ப்பு ஏற்படுகிறது. அதன் விளைவாக அவர்கள் எதிர்க்கிறவர்களாக ஆகி, மரியாதை அற்றவர்களாகவும், காழ்ப்புணர்வுள்ளவர்களாகவும் கீழ்படியாத வர்களாகவும் உருவாகிறார்கள். அவர்கள் தங்களைப்போன்ற .வர்களோடு கூடிக்கொண்டு, சட்ட விரோத காரியங்களிலும் ஈடுபடுகிறவர்களாக மாறி, சமுதாயத்திற்கு புறம்பானவர்களாக ஆகிறார்கள்

இந்த விஷயத்தில் உலகத்தால் அங்கீகரிக்கப்படவேண்டிய காரியம் ஒன்று இருக்கிறது. அது என்னவென்றால், பெற்றே ார்எப்போதுமே பெற்றோராகவே தான் இருக்கிறார்கள் என்பது.

பிள்ளை குழந்தையாக இருந்தாலும், வளர்ந்து பெரியவர்களான ாலும், அவர்கள் திருமணம் செய்து பிள்ளைகளைப்பெற்று அவர்களே பெற்றோராக ஆனாலும், பெற்றோர் பெற்றே ாராகவேதான் இருப்பார்கள். இவர்கள் அவர்களுடைய பிள்ளைகள் தான். தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும் என்கிற போதனையில் வளர்க்கப்பட்ட பிள்ளைகள், அதை கடைபிடிக்கிற வர்களாக வளர்ந்தால், பெற்றோருடைய வழிநடத்துதல் மற்றும் ஜெ பத்தினால் வளர்க்கப்பட்டு கடைசியில் குடும்பத்திற்கு நற்பெயரைக் கொண்டுவருவதோடு தேசத்திற்கும் நல்ல குடி மக்களாய் திகழுவார்கள்

இதனிமித்தமே பெற்றோரும் சபைகளும் சபைத்தலைவரும் பெற்றோரையும் பெரியவர்களையும் மதிக்கும் தலைமுறையையும், சமுதாயத்தின் ஆளுகையையும் அதிகாரத்தையும் அங்கீகரிக்கும் தலைமுறையையும் உருவாக்குவதில் கவனம் செலுத்தவேண்டும். இதிலே பெற்றோருடைய பங்கின் முக்கியத்துவத்தை யாரும் மறுக்க முடியாது.

தனிப்பட்ட நபர்களும், எழுத்தாளர்களும், ஆசான்களும், ஜெ பக்குழுக்களும், கிறிஸ்தவ ஆலோசகர்களும், அரசாங்கமும் மற்றும் பொறுப்புகளில் இருக்கும் யாவரும் சமுதாயத்தின் நலனுக்காக பெரியவரையும் பெற்றவர்களையும் மதிக்கும் சந்ததியை உருவாக்க முனைய வேண்டும்.

## 1. 7. திருச்சபை

முன்பெல்லாம் ஞாயிறு பள்ளிகளும் சாதாரண சபை ஆராதனைகளுமே தெய்வ பக்தியுள்ள மக்களை ஊக்கப்படுத்தவும் நீதியினால் கட்டப்படும் தலைமுறையை உருவாக்கவும் போதுமான தாக இருந்தது. இதை செய்த முந்தைய தலைமுறையின் முயற்சிகளை பாராட்டதான் வேண்டும்.

இன்று நம்முடைய நோக்கம் தற்போதைய தலைமுறையை தேவனுடைய கற்பனைகளுக்கு பயப்படுகிற ஒன்றாக ஆக்குவது. திருச்சபையும் ஆவிக்குரிய ஸ்தாபனங்களும் அரசாங்கமும் இந்த முயற்சியில் அதிக முனைப்பைக் காட்ட வேண்டியுள்ளது. கிறிஸ்தவ

வீடுகளில் வளரும் பிள்ளைகள் தேவ பக்தியுள்ள தங்கள் பெற்றே ாரால் மற்றவர்களுக்கு முன்மாதிரிகளாக வளர்க்கப்பட வேண்டும்.

ஆனால் உண்மையில் பார்க்க போனால், விசுவாசிகளின் வீடுகளில் தேவனுக்கோ, குடும்பத்திற்கோ பெற்றோருக்கோ கனமும் இல்லை, முக்கியத்துவமும் இல்லை. பெற்றோருக்குக் கீழ்படிவது என்பது தேவனுக்குக் கீழ்படிகிறதாய் இருக்கிறது என்பதை நாம் மனதில் கொள்ளவேண்டும. யோவான் 1:12 ல் இப்படியாக சொல்லப்பட்டிருக்கிறது,"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் கும்படி அவர்களுக்கு அதிகாரங்கொடுத்தார்." தேவனுடைய பிள்ளையாகும்படி அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்று இந்த வசனம் கூறுகிறது என்பதால், அவர்மேல் விசுவாசம் வைத்தவுடன் தேவன் அவனுடைய பிதாவாக ஆகிவிடுகிறாரென்றும் அவன் தேவனுடைய பிள்ளையென்கிற நிலையை அடைகிறான் என்றும் காண்கிறோம்.

மனித இனத்தை தம்முடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் மூலமாக நித்தியஜீவனில் தம்முடன் பங்குபெற தேவன் அழைப்பு விடுப்பதே அவர் அருளின மற்ற சிலாக்கியங்களிலும் மேலான சிலாக் கியமாக இருக்கிறது. இது தேவன் தம்முடைய பிள்ளைகளுக்குத் தரும் ஈவுகளில் இது மேன்மையாக ஈவாக கருதப்படுகிறது. தம்முடைய குமாரன்மேல் விசுவாசம் வைப்போருக்கு தேவன் பாராட்டும் தயவு எத்தனை பெரிது என்பதை இது காட்டுகிறது. தேவனுடைய வார்த்தையின் உண்மையின்படி அவர் நம்முடைய ஆவிக்குரிய பிதாவாக இருப்பதை நாம் அங்கீகரிக்கவேண்டும். உலக பிரகாரமான கரணங்களுக்காகவோ சாக்கு போக்குகளுக்காகவோ இந்த மகத்துவமான அன்பை நாம் அலட்சியம் பண்ணிவிடாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

யோசனையின்மையும், பெற்றோருக்குக் கீழ்படியாமையும், அநேக கிறிஸ்தவ வாலிபர்களின் அர்த்த மற்ற வாக்கியங்களில் இன்று வெளிப்படுகிறதை நாம் காண முடிகிறது. "என் மாம்சீக தகப்பன் எனக்கு சரியில்லையென்றாலும், எனக்காக அக்கரையெடுக்கும் பரம தகப்பன் எனக்கு இருக்கிறார்" என்று அவர்கள் சொல்லுவதை நாம் கேட்க முடியும். வேறு சிலர், "என் பெற்றோருக்கு மாற்றாக எனக்காக கரிசனைகொள்ளும் ஆண்டவராககி தேவன் எனக்கு இருக்கிறார்" என்பார்கள். இன்னும் சிலர், "எல்லாவற்றையும்விட

பரம தகப்பனை திருப்திப்படுத்துவதே என் விருப்பம்" என்றோ "என் தேவைகளை அவர் சந்திக்க நான் காத்திருக்கிறேன்" என்றோ சொல்லுவதை நாம் கேட்க முடியும். தேவனுடைய தயவையும் உண்மையான அன்பையும் தவறாக புரிந்துகொண்டு, பெற்ற தாயையும் தகப்பனையும் மதிக்காமல் போகும் இவர்கள் பேசும் பேச்சு, உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற தேவனின் முக்கியமான கட்டளையை அவமாக்குகிறதாக இருக்கிறது.

தங்களுக்கு இருக்கும் அறைகுறை அறிவு அல்லது தாங்கள் பெற்ற தவறான வழிநடத்துதன் நிமித்தமாக இளம் சந்ததியார் பெற்றோரை மதிக்காமல் போகிறார்கள். பெற்றோரைக் கனம்பண்ண வேண்டு மென்கிற தேவனுடைய கற்பனைக்கு மாற்றே இல்லை. பெற்றோரை மதித்து அவர்களுக்குப் பிரியமாக நடந்துகொள்ள எப்போதும் முயலுகிறவர்களாக நாம் இருக்கவேண்டும். நாம் அவர்களை மதிக்காமல் போகும்போது, அவர்களை நம்முடைய செயல்களினால் வருத்தப்படுத்துகிறவர்களாக இருப்போம். அப்படி அப்படி செய்யும்போது, நம்முடைய மீறுதலுக்காக அவர்கள் நமக்காக முழுமனதோடு வேண்டுதல் செய்யக்கூடாதபடி அவர்களை பலவீனப்படுத்திவிடும். அதன் விளைவாக நாம் நம்முடைய பாவங்களில் விழுந்துகிடக்கிறவர்ளாக இருப்போம். இப்படியே நாம் தேவனுடைய வார்த்தையை மீறி தகப்பனையும் தாயையும் கனம்பண்ணாமலேயே இருந்தால், நாம் தேவனுடைய வார்த்தையை மீறி நடக்கிறபடியால், அவரும் நம்முடைய நெருக்கங்களில் நம் பட்சத்திருக்க மாட்டார்.

பெற்றோரை மதிக்கவேண்டும் என்கிற இந்த காரியத்தை வலுப்படுத்தாத மற்றொரு காரியம் என்ன வென்றால் சபைகளிலே மற்ற அநேக காரியங்களுக்கு முக்கியத்துவம் கொடுத்துவிட்டு, இதற்கு இரண்டாம் பட்ச மதிப்புக் கொடுக்கப்பது ஆகும். இளம் சந்ததியாருக்கு உள்ள பற்பல நிகழ்ச்சிகள் தகப்ப னுக்கும் தாய்க்கும் கனம் கொடுப்பதைப் பற்றியதாக இருப்பதில்லை. இதைப் பார்க்கும்போது, பரிசேயரை பார்த்து ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து மத்தேயு 15:3–6 –ல் சொன்ன வார்த்தைகள்தான் நம்முடைய ஞாபகத்துக்கு வருகிறது: அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக: நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே

தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்? உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்றும்; தகப்பனையாவதுதாயையாவது நிந்திக்கிறவன் கொல்லப்படவேண்டும் என்றும், தேவன் கற்பித்திருக்கிறாரே. நீங்களோ, எவனாகிலும் தகப்பனையாவது தாயையாவது நோக்கி: உனக்கு நான் செய்யத்தக்க உதவி எது உண்டோ, அதைக் காணிக்கையாகக் கொடுக்கிறேன் என்று சொல்லி, தன் தகப்பனையாவது தன் தாயையாவது கனம்பண்ணாமற்போனாலும், அவனுடைய கடமை தீர்ந்ததென்று போதித்து, உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை அவமாக்கிவருகிறீர்கள்.

*இயேசுவின் நாட்களில் இருந்த பரிசேயர்கள் மாய்மாலக்காரராய் இருந்தார்கள். அவர்களுடைய சீடர்கள் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட சட்ட திட்டங்களையே கைக்கொண்டார்கள். மோசேயினுடைய கற்பனையைக் கைக்கொள்ளுகிறவர்கள்போல இருந்துகொண்டு, தங்களுக்கு சித்தமானதையே செய்து தேவனுடைய கற்பனையை மீறி நடக்கிறவர்களாக இருந்தார்கள்.*

*இந்த நாட்களில் சபைகளில் நடைபெறும் காரியங்கள் அந்நாளில் பரிசேயர் செய்த காரியங்களுக்கு அதிகம் வித்தியாசமானதாக இல்லை. பெற்றோர் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்களாக இருப்பதால், அவர்களைக் கனம்பண்ணுவது அடிப்படை கற்பனை யாக இருக்கிறது. தாழ்மையுடன் பெற்றோருக்குக் கீழ்படிந்திருப்பது மற்ற ஊழியங்களுக்கு எந்த விதத்திலும் குறைவானது இல்லை. என வே இதற்கு நாம் அதிக கவனம் கொடுக்கவேண்டும்.*

*சமுதாயத்திலே பிள்ளைகள்மேல் பெற்றோருக்கு இருக்கும் அதிகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கவேண்டும். பெற்றோர் இந்த காரியத்தை நிறைவேற்ற சபையின் நிகழ்ச்சியை சற்று ஒத்திப் போட நேரிட்டாலும், ஒத்திப்போட வேண்டும். பெற்றோருக்குக் கீழ்படிவதை தவிர்த்துவிட்டு பிள்ளைகள்*

சபையின் நிகழ்ச்சிகளில் பங்கேர்க்க ஓடுகிறார்கள். அதற்கு அவர்கள் “நாங்கள் எங்கள் பரம தகப்பனின் நிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறோம்” என்று பதில் சொல்லுகிறார்கள்.,

இந்த காரணத்திற்காகதான், ஆவிக்குரிய நிகழ்ச்சிகளையும் வாலிப நிகழ்ச்சிகளையும் அதிகம் குறை கூறாமல் பெற்றோருடைய போதனைகளுக்குக் கீழ்படிவதும் அதிகம் முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அறிவுறுத்த விரும்புகிறோம். திருச்சபையின் நிகழ்ச்சிகளுக்கு பெற்றோர் அனுமதி மறுத்தாலும், முதலாவது அவர்களுடைய கட்டளைகளுக்குப் பிள்ளைகள் கீழ்படிவது அவசியம். பெற்றோர் சொல்லுவதற்கு தான் பிள்ளைகள் முதலாவது கீழ்படியவேண்டும், சபை சொல்லுவதற்கு அதற்கு பிற்பாடுதான் கீழ்படியவேண்டும். அப்படி செய்வதன் மூலமாக நாம் தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம் என்பதை மற்றவர்களுக்கு காட்ட முடியும்.

பெற்றோருக்குக் கீழ்படியாமல் போவது இக்காலத்திலே நாம் கூடி வரும் சபைகளிலும் நாம் வசிக்கும் சமுதாயத்திலும் மிகவும் அதிகமாக பெருவிட்டது. பெரியவர்களை மதிப்பதும் பெற்றோரைக் கனம் பண்ணுவதும் இல்லாமல் போவதற்கான காரணம், பெற்ற வர்களோடே நல்ல உறவு இருக்கவேண்டும் என்கிற தேவனுடைய கற்பனை மீறப்படுவதால்தான். ஆகவே நாம் ஒவ்வொருவரும் இந்த உறவுகள் பலப்படுவதற்கான முயற்சியில் இறங்கவேண்டும். அப்போது, சமுதாயத்தை ஒன்றாகக் கட்டுவதற்கு தேவன் தந்துள்ள கற்பனையை நிலைநாட்டுகிறவர்களாக ஆகுவோம். அப்படி செய்வதன் மூலமாக இந்த சமுதாயத்தின்மேல் வரவிருக்கும் தேவ கோபத்தை தவிர்த்திடவும் முடியும்.

# அத்தியாயம் இரண்டு

## நம்மிடம் எதிர்பார்க்கப்படும் சத்தியம் என்ன




ஆதலால், ஒருவன் நன்மைசெய்ய அறிந்தவனாயிருந்தும், அதைச் செய்யாமற்போனால், அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.

*யாக்கோபு4:17*

அத்தியாயம் 2

# நம்மிடம் எதிர்பார்க்கப்படும் சத்தியம் என்ன

## 2. 1. நம்முடைய பெற்றோருக்கு மதிப்புஅளித்தல்

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

*யாத்திராகமம் 20:12*

வெமக்ளின்டாக் மற்றும் ஸ்டிராங் கலைக்களஞ்சியத்தின் படி "கனம்பண்ணுதல்' என்கிற வார்த்தைக்கு மதிப்பு, பணிவு, உதவுதல் மற்றும் அவர்கள் தேவைகளைப் பூர்த்தி செய்தல் என்று அர்த்தம் கொடுக்கப்பட்டுள்ளது. "கனம்பண்ணுதலை' "விருப்பத்தோடு இசைதல்'; "கீழ்படிதல்'; "தாழ்மையோடு அர்ப்பணித்தல்'; 'கவனம் செலுத்துதல்'; "வாய்ப்பளித்தல்'; "கவனித்துக் கேட்டல்' என்பவைகளையும் அர்த்தங்களாக சொல்லலாம். நம்முடைய பெற்றோரை இந்த அர்த்தங்களின்படி எந்த அளவுக்கு கனம்பண்ணியிருப்போம் என்று நாம் பார்க்கவேண்டும். பணிவான சமர்ப்பணத்துடன் முழு கீழ்படிதலோடு அவர்கள் கனம்பண்ணப்பட்டிருக்க வேண்டும். தேவன் அப்படி கட்டளையிட்டிருக்கிறபடியால் நாம் அதை உதாசீனம் பண்ணமல், அவர்களை கனம்பண்ண வேண்டும்.

அநேகம் சமயம் பெற்றோரிடம் நாம் அர்ப்பணிப்பைக் காட்டுவதில்லை. சொல்லப்போனால் அரசியல்வாதிகளுக்கும் வேலை ஸ்தலத்திருக்கும் மேலதிகாரிகளுக்கும் கொடுக்கும் அளவுக்குக்கூட நாம் நம்முடைய பெற்றோருக்கு கனத்தைக் கொடுப்பதில்லை. நம்முடைய வாழ்வில் இருக்கக்கூடிய மற்ற எல்லாரையும்விட

நம்முடைய பெற்றோர் அதிக கனத்துக்குரியவர்களாக இருக்கிற ார்கள். அதிகாரிகளுக்கும் மேற்பார்வையாளருக்கும் நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டிதன் காரணங்கள் அநேகம் இருக்கலாம். அந்த காரணங்களையெல்லாம் அல்லாமல், பெற்றே ாரைக் கனம்பண்ண வேண்டியது என்பது தேவன் கட்டளையிட்ட தேவ கற்பனையாக இருக்கிறது என்பதை நாம் உணர்ந்து, அதற்கு முதலாவது கீழ்படிய வேண்டும்.

தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும் என்பதை முக்கியப்படுத்தும் பாரம்பரியங்களும் வழக்கங்களும் அநேகம் உண்டு. அதே சமயம் பெற்றோருக்குக் கனத்தைக் கொடுப்பதற்கு பதிலாக மற்ற அதிகாரங்களுக்கு முக்கியத்துவத்தைக் கொடுக்கும் பழமொழிகளைக் கொண்ட கலாச்சாரங்களும் உண்டு.

தாயை நிந்திக்கிறதும் தூற்றுகிறதுமாகிய வழக்கச் சொற்களை நான் கேட்டிருக்கிறேன். வேறு சில கலாசாரங்களில் ஒருவரை ஒருவர் நிந்திக்கிறதற்கு அவர்களுடைய தாயாரை கொடுமையான வார்த்தைகளால் சர்வ சாதாரணமாக வர்ணிப்பார்கள். அந்த நிந்தையை அந்த நபர்கள் பெரிதாக எடுத்துக் கொள்ளாவிட்டாலும், ஒரு தாய் அங்கே நிந்திக்கப்பட்டார் என்பதை மறுத்திட முடியாது.

வேறு சில சமுதாயங்களில் தாய்க்கு நல்ல மரியாதை உண்டு. இந்தியாவிலுள்ள சில சமுதாயங்களில் பிள்ளைகளுக்கு தங்கள் பெற்றோர்மேல் நல்ல மதிப்பு உண்டு. அவர்களுடைய பெற்றே ார் தொலை பேசியில் அவர்களை அழைத்தால், அவர்கள் மிகுந்த மரியாதையுடன் பதில் அளிப்பார்கள். நேரம் காலம் பார்க்காமல் அவர்கள் தாங்கள் செய்துகொண்டிருந்ததை எல்லாம் விட்டுவிட்டு பெற்றோரின் கட்டளைக்கு இணங்கி அவர்கள் சொல்லுக்குக் கீழ்படிவதை நாம் பார்க்க முடியும். பிள்ளைகள் பெற்றோரின் சொல்லுக்குக் கீழ்படிவது மட்டுமல்லாமல், பெற்றோர் கூப்பிடும்போது அவர்கள் அருகில் விரைந்து சென்று அவர்கள் சொல்வதை மரியாதையுடன் கேட்பார்கள்.

எத்தியோப்பியாவிலும் சில சமுகங்களில் பெற்றோருடைய வார்த்தையை மதிப்பு கொடுப்போருண்டு. அதுபோன்ற சமுதாயத்திருந்து வருபவர்கள் மற்றவர்களைவிட வித்தியாசமாக இருப்பது வெளிப் படையாகவே தெரியும். அவர்கள் தாழ்மையுள்ளவர்களாகவும், வேலையில் கெட்டிக்காரராகவும், உண்மையும் நேர்மையுமானவர்களாகவும் இருந்து,

தாங்கள் பெற்றோருக்கு அதிக பட்ச மரியாதை கொடுக்கிற சமுதாயத்திருந்து வந்திருக்கிறோமென்று சாட்சி பகருவார்கள்.நாம் வேத வசனத்தைக் கவனமாக பார்த்து, நம்முடைய பெற்றோருடன் நமக்கு தற்போது இருக்கும் உறவு மற்றும் கடந்த காலத்தில் இருந்த உறவு ஆகியவற்றை வேத வசனங்களுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், ஏதாவது ஒரு வகையில் நாம் நம்முடைய பெற்றோரை மதிக்க வேண்டிய விதத்தில் மதிக்காமல் போனோம் என்பதைக் காண முடியும்.

கடந்த காலத்தில் இந்த உறவில் இருந்திருக்கும் குறையை நாம் அடையாளம் கண்டு அதை தேவனுடைய கற்பனைகளின்படி சரி செய்யும் வேளை வந்திருக்கிறது. விசுவாசத்தின்படி நாம் நம்முடைய பெற்றோரை கனம்பண்ணினால், நமக்காக தேவன் வாழ்நாளில் ஏற்படுத்தியிருக்கும் நன்மைகள் எத்கையது என்பதை நாம் எதிர்பார்த்து ஜீவித்திட முடியும் என்பதால், வேதத்தில் கற்றுக்கொடுக்கப்பட்டுள்ளபடி நாம் நம்முடைய பெற்றோருக்கு மதிப்புக்கொடுக்க துவங்கவேண்டும்.

ஆகையால் யாவருக்கும் செலுத்தவேண்டிய கடமைகளைச் செலுத்துங்கள்; எவனுக்கு வரியைச் செலுத்த வேண்டியதோ அவனுக்கு வரியையும், எவனுக்குத் தீர்வையைச் செலுத்தவேண்டியதோ அவனுக்குத் தீர்வை யையும் செலுத்துங்கள்; எவனுக்குப் பயப்படவேண்டியதோ அவனுக்குப் பயப்படுங்கள்; எவனைக் கனம்பண்ண வேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்.

*ரோமர் 13:7*

குடும்பத்திலே சிறியவராக இருப்பவர் மட்டும் பெற்றோரிடம் மரியாதையாக நடந்துகொள்ளுவது என்கிற வழக்கம் நம் மத்தியில் காணப்படக்கூடாது. மாறாக குடும்பத்தில் உள்ள அனைவருமே இந்த குணம் உடையவர்களாக இருக்கவேண்டும். அதன் மூலமாக இந்த குணம் சமுதாயத்தில் பிரதிபக்க வேண்டும். இது என்றோ ஒருமுறை செய்கிறதாக இல்லாமல், நம்முடைய வாழ்கையின் வழக்கமாக ஆக வேண்டும்.

## 2. 2. நிபந்தனையின்றி பெற்றோரைக் கனம்பண்ணுதல்

உயர்ந்த குலத்திலோ, பணக்கார குடும்பத்திலோ, ஞானவான்களின் குடும்பத்திலோ பிறப்பது என்பது நம்முடைய கைகளில் இல்லை. நாம் எந்த குடும்பத்தில் பிறக்கவேண்டும் என்பதை நம்மைக் குறித்த அநாதி திட்டத்தின் அடிப்படையில் தேவன் தேர்வு செய்கிறார். இதன் காரணமாக நாம் தேவனைப் பார்த்து என்னை ஏன் இந்த பெற்றோருக்குப் பிள்ளையாகப் பிறக்கச் செய்தீர் என்கிற அர்த்தமற்ற கேள்வி கேட்க முடியாது.

நம்முடைய பெற்றோர்களில் நமக்குப் பிடிக்காத ஒரு சில காரியங்கள் இருக்கலாம். சில சமயம் நமக்கிருக்கும் அவர்களுடைய ஜாடை நாம் விரும்பாததாக இருக்கலாம். இதுபோன்ற காரியங்களினால் ஒருவேளை நாம் அவர்களை கனம்பண்ணாதே போயிருக்கலாம். இருந்தாலும் தேவனுடைய கட்டளையை மீறுவதற்கு உலக பிரகாரமான எந்த காரியமும் காரணமாக இருக்க முடியாது என்பதை நாம் உணரவேண்டும். நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத்தோட்டத்தை நாட்டினான். அவன் திராட்சரசத்தைக் குடித்து, வெறிகொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப்படுத்திருந்தான். அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான் என்று *ஆதியாகமம் 9:20–22* கூறுகிறது.

அதிக பட்சமான திராட்சரசத்தைக் குடித்தபடியினாலே நோவா மயங்கியிருந்தான். தான் நிர்வான மாகக் கிடப்பதை அறியாத அளவுக்கு அவன் மயங்கி கிடந்தான். இது அவனுடைய பிள்ளைகளுக்கு சரியான முன்மாதிரியாக இல்லாதிருந்தாலும், அவன் தன்னுடைய பிள்ளைகளுக்கு தகப்பன் என்பதில் மாற்றம் இல்லாதிருந்தது. அதேபோல சமுதாயத்தால் புறக்கணிக்கப்படும் அளவுக்கு குடிபழக்கத்திற்கு அடிமைப்பட்டுள்ள தகப்பனோ தாயோ இருக்கக்கூடும். நோவா எந்த நிலையில் கிடந்தாலும் அவன் தகப்பன் தான் என்பதுபோல, தகப்பனோ தாயோ எந்த நிலையிருந்தாலும் அவர்கள் பெற்றோர் தான்.

தன்னுடைய தகப்பன் குடித்திருக்கிறார் என்பதைக் கண்டபோது காம் செய்த தவறு, அவனுடைய நிர்வாணத்தை மூடிப்போடாமல் போனது. அதற்கு பதிலாக அவன் போய், இந்த சங்கதியை தன்னு டைய சகோதரரோடு பகிர்ந்துகொண்டான். அவனுடைய இந்த செய்கை அவனுக்கு பயங்கர சாபத்தைத் தேடி தந்தது. பெற்றோரைக் கனம்பண்ணுவதில் அவர்களுடைய பெலவீன ங்களை வெளிப்படுத்தாமல் மறைக்கிறதும் அடங்கும்.

நோவா மற்றும் அவன் குமாரரை பற்றிய இந்த சம்பவத்தின் மூலமாக நாம் அநேக காரியங்களை கற்றுக்கொள்ள முடியும். எடுத்துக்காட்டாக, தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவதற்கு மாற்றே இல்லை என்பதை இது காட்டுகிறது. அவர்கள் குடிகாரராக இருந்தாலும், ஏழைகளாகவோ படிப் பறிவு இல்லாதவராகவோ இருந்தாலும், நாம் பேசக்கூடிய பற்பல மொழிகளைப் பேசக் கூடாதவராக இருந்தாலும், உடல் ஊனமானவராகவோ சுகவீன மானவராகவோ இருந்தாலும் நாம் அவர்களைக் கனம்பண்ண வேண்டும். தேவன் தம்முடைய ஞானத்தினாலே நம்முடைய வாழ்கையில் நாம் அடைந் திருக்கும் நிலைக்கு அவர்களை ஊற்றுக்கண்ணாக ஏற்படுத்தியுள்ளார். பெற்றோரைக் கனம்பண்ண மால் போவதைக் குறித்து ஒரு உதாரணத்தை உங்களுக்குக் கொடுக்க விரும்புகிறேன். ஒரு பெண்ணினுடைய தாயார் தீக்காயத்தால் பாதிக்கப்பட்ட முகத்தை உடையவராக இருந்தார். கோரமான முக தோற்றத்தைக் கொண்ட அவரை தன்னுடைய தாய் என்று சொல்க்கொள்ள அந்த அழகான பெண் வெட்கப்பட்டாள். தன் தாயுடன் நெருங்கி பழக அவள் விரும்பவில்லை. நடந்துபோன ாலும் அவரோடுகூட சேர்ந்து நடக்கமாட்டாள். அவரை யார் என்று மற்றவர்கள் கேட்டால், “அது என் வேலைக்காரி” என்று அந்தப் பெண் சொல்விடுவாள். அவள் இப்படி சொல்லுவது அந்தத் தாய்க்குக் கோபத்தை ஏற்படுத்தியது. ஒருநாள் அவர் தீ விபத்திற்கு முன்பாக எடுக்கப்பட்ட தன்னுடைய புகைப்படம் ஒன்றை எடுத்து தன் மகளிடம் காட்டி இந்த பெண்மணி யார் என்று கேட்டார். “இந்த படத்தில் உள்ளவர் அழகாக இருக்கிற ாரே” என்று சொன்ன அந்த பெண், “இவர் என் ஜாடையாகவே இருக்கிறாரே” என்றும் வியந்தாள். அப்பொழுது அந்தத் தாய், “அது நான்தான். அந்த தீ விபத்தில் உன் உயிரைக் காப்பாற்ற நான் முயன்றபோது என் அழகை நான் இழந்தேன்.” என்று கூறினாராம்.

நடந்த சம்பவத்தை அவர் கண்ணீர் மல்க தன் மகளுக்கு சொன்னார். “நீ குழந்தையாக இருந்தபோது உன்னை படுக்கையில் கிடத்திவிட்டு நான் விறகு பொறுக்கப்போனேன். நான் திரும்பி வந்தபோது, வீடு தீ பற்றி எறிந்து கொண்டிருந்தது. எரிகிற வீட்டிற்குள் நுழைந்து உன்னைக் காப்பாற்றுவதற்கு அயலகத்தார் பயந்தார்கள். ஆனால் நானோ படுக்கையறைக்குள் பாய்ந்துபோய், உன்னை பத்திரமாக வெளியே கொண்டுவந்தேன். ஆனால், அந்த முயற்சியின்போது தீ என் முகத்தை பாதித்துவிட்டது. தீக்காயங்கள் ஆறினபோது என்னுடைய முகம் சுருங்கிபோய் இப்போது இருக்கிற விதமாய் விகாரமாக ஆகிவிட்டது. உன் உயிரைக் காப்பாற்றினேன் ஆன ால் என் அழகை நான் இழந்துவிட்டேன். அதினிமித்தமாக இன்று நீ உலகத்தாரிடம் என்னை உன் வேலைக்காரி என்று அறிமுகப்படுத்தும் அவமானத்தையும் அடைந்தேன்.’’ என்ற ார். தாய் சொன்னதைக் கேட்ட அந்த மகள் அழுதாள். அவள் அழுது தன் தாயிடம் தன் நடக்கைக்கு மன்னிப்புக் கேட்டாள். தாயும் தன் மகளை மன்னித்தார். அதன் பின்பு அந்த பெண் ஒருநாளும் தன் தாயைக்குறித்து வெட்கப்பட்டதே இல்லை.

பெற்றோரின் குறைகளைக் குறித்து வெட்கப்படும் வா-பர்களைக் குறித்து ஏராளமான உதாரணங்களைக் கொடுக்கமுடியும். மேலே குறிப்பிட்ட சம்பவத்தில் வந்ததுபோலதான் இந்த பெற்றோரும் தங்கள் சுகத்தையும் வாழ்வையும் தன் பிள்ளை நன்றாக இருக்கவேண்டும் என்பதற்காக செலவழித்து இந்த நிலையை அடைந்திருக்கிறார்கள். நம்முடைய நிலையில் இன்று நாம் இருப்பது நம்முடைய பெற்றோர் செய்த தியாகத்தின் விளைவே என்பதை நாம் மறந்துபோகக் கூடாது.

ஒருமுறை பெற்றோரைக் கனம் பண்ணவேண்டும் என்பதை பற்றி பிரசங்கத்தைக் கேட்ட மனிதன் ஒருவர், “என்னுடைய தகப்பன் குடிகாரராக இருந்து சமுதாயத்தில் அவமான த்தைக் கொண்டுவருகிறவராக இருந்தபடியால் நான் அவரை மதிக்காதவராக இருந்தேன். ஆனால் இந்த பெண்ணின் கதையைக் கேட்டபின்பு, எங்களுடைய வழக்கத்தின்படி ஒரு செம்மறி ஆட்டை வாங்கிக்கொண்டு அவர் முன்பாகப் போய் மண்டியிட்டு மன்னிப்புக் கேட்க தீர்மானித்து, அப்படியே செய்தேன்” என்று சொன்னார். நம்மை நாமே பரிசோதித்தோமானால், பெற்றே ாரரைக் கனம்பண்ணதிருப்பதற்கு நமக்கும் இதேபோல காரணங்கள் இருக்கிறதை நாம் காணமுடியும். எப்படி இருந்தாலும், நாம் அதற்கு மன்னிப்புக் கேட்டு, பெற்றோரைக் கனம்பண்ண துவங்கவேண்டும்.

பெற்றோரைக் கனம்பண்ணுவதற்கு தடையாக இருக்கக்கூடிய மற்றொரு காரியம் என்னவென்றால், இன்றைய தலைமுறையினர் பெறும் கல்வியும், அடையும் உத்தியோகமும் பெறும் வருமானமும், அதனால் கிட்டும் வாழ்க்கைத் தரமும் ஆகும். அவர்களின் பெற்றோர் தங்களுடைய வாலிப காலத்தில் இவைகளில் எதையுமே அனுவியாதவர்களாக இருப்பார்கள். பெற்றோரைக் கனம் பண்ணுவதில் இதுபோன்ற காரியங்கள் தடையாக ஏற்படுவதை நாம் அனுமதிக்கக்கூடாது. பெற்றோருக்குக் கீழ்படிந்து மதிப்பு கொடுப்பதை செய்யாமல் போகும் பட்சத்தில் விளையும் பலனை நாம் நன்றாக கவனித்திருந்தால், நாம் தேவனுடைய கட்டளையின்படி செய்ய நம்மை ஒப்புக் கொடுப்போம். அதினால், பெற்றோரின் ஆசீர்வாதத்தினால் வரக்கூடிய அனைத்து நன்மைகளையும் தடை பண்ணுகிற காரியத்தை நாம் எடுத்துப்போடுவோம்.

## 2. 3. உங்கள் பெற்றோரை வெறுக்காதீர்கள்

ஞானமுள்ள மகன் தகப்பனைச் சந்தோஷப்படுத்துகிறான்; மதியற்ற மனுஷனோ தன் தாயை அலட்சியம் பண்ணுகிறான்.

*நீதிமொழிகள் 15:20*

உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன்தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டை பண்ணாதே.

*நீதிமொழிகள் 23:22*

மேலே கொடுக்கப்பட்டுள்ள வேத வசனங்களை தேவனுடைய கற்பனைகளுடன் சேர்த்து பார்க்கும் போது, பெற்றோருடனான உறவில் இருக்கும் காரியங்களில் எதுவும் சிறிதானதோ அற்பமானதோஇல்லை என்பது விளங்கும். பெற்றோருடன் கருத்து வேறுபாடு வராமல் இருப்பதற்கு நாம் நம்முடைய நடவடிக்கையில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். மரியாதையும் மதிப்பும் கொடுப்பவர்களாக இருக்க என்னவெல்லாம் செய்யவேண்டுமோ அத்தனையும் நாம் செய்யவேண்டும். தேவனுடைய வார்த்தையின் கண்ணோட்டத்தில் பெற்றோரைக் கனம்பண்ண வேண்டிய அவசியத்தை நாம் பார்க்க கற்றுக்கொண்டோமானால் அவர்களை வெறுப்பதை நாம் தவிர்க்கிறவர்களாக இருப்போம். நாம் நம்முடைய பெற்றோரை வெறுத்தால், தேவனுடைய கற்பனையை மீறுகிறவர்களாக ஆகி, தேவனையே எதிர்த்து நிற்கிறவர்களாக காணப்படுவோம். நாம் நம்முடைய பெற்றோரை வெறுத்து மதிக்காமல் போனால், நாம் அவர்களை மட்டுமல்ல, அவர்களை தம்முடைய சித்தத்தை நிறைவேற்றும் ஸ்தானாபதிகளாக ஏற்படுத்திய தேவனையே வெறுத்து மதிக்காமல் போகிறோம் என்று ஆகிவிடும்.

நாம் நாவடக்கமில்லாமல், கட்டுப்பாடின்றி பெற்றோரைக் குறித்து பேசும் காரியங்கள் அவர்களை மிகவும் நோகடிக்கிற மற்றொரு காரியமாக இருக்கிறது. இதுபோன்ற குணத்தை நம்முடைய பெற்றோர் நமக்கு சிறுவயதிலே கற்றுக்கொடுக்கவில்லை. நம்முடைய பெற்றோரைவிட நாம் நல்ல நிலையில் உன்னோம் என்கிற எண்ணத்தினாலோ என்னவோ இதுபோன்ற வார்த்தைகள் வாயிருந்து தெரிந்தோ தெரியாமலோ புறப்படுகின்றன. தேவனுடைய வார்த்தைக்கு மீறி நடப்பதை நாம் தவிர்க்கவேண்டும்.

எந்த சூழலும் தகப்பனையும் தாயையும் மதிக்காமல் போகிறவன் மூடனும் நம்பகத்தன்மை அற்றவ னுமாக இருக்கிறான் என்று வேதம் கூறுவதை நினைவில் கொள்ளவேண்டும். குடும்பத்தைக் குறித்த தேவனுடைய திட்டத்தை கெடுக்கக்கூடிய வார்த்தையோ கிரியையோ எப்போதுமே தவிர்க்க வேண்டும்

## 2. 4. பெற்றோருக்குக் கீழ்படிதல்

கீழ்படிதல் என்கிற வார்த்தை தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவதில் முக்கிய அங்கம்வகிக்கிறது. காரணம், கீழ்படிதல் என்பது தன்னை அதிகாரத்துக்கு சமர்பிப்பதாக இருக்கிறது. எனவே கீழ்படிதலும் கனம்பண்ணுதலும் பிரிக்க முடியாத காரியங்களாக இருக்கின்றன. நம்முடைய பெற்றோருடனான உறவில் பல்வேறு அங்கங்கள் இருந்தாலும் நாம் எல்லாருமே நாம் நம்முடைய பெற்றோருக்குக் கீழ்படிந்தோம் என்று நிச்சயம் சொல்லுவோம். நம்மில் சிலர் கண்டிப்பான வளர்ப்பையும் வேறு சிலர் பெற்றோருடைய கோபத்தையும் தண்டனைகளையும் பெற்று கீழ்படியப் பண்ணப்பட்டவர்களாக இருக்கலாம். அப்படிப்பட்ட வளர்ப்பினால் ஏற்படும் பாதிப்பை தங்களுக்குள் இன்னும் சுமந்துகொண்டிருக்கும் அநேகர் உண்டு

இந்த அத்தியாயத்தில் சொல்லப்படும் கீழ்படிதலானது பெற்றோரின் கோபத்தினாலும் தண்டனைக ளாலும் வற்புறுத்தி செய்யப்படும் கீழ்படிதல் அல்ல. இது பெற்றோர் தேவனுடைய தீர்மானத்தினால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரமாய் இருக்கிறார்கள் என்பதை உணர்ந்து, தேவன்மேலும் பெற்றோர் மேலும் இருக்கும் அன்பின் அடிப்படையிலும் மதிப்பினிமித்தமும் தாமாகவே முன்வந்து தன்னைத் தானே சமர்ப்பிக்கும் கீழ்படிதல் ஆகும். தேவனுக்கும் பெற்றோருக்கும் கீழ்படிகிறது என்பது கர்த்தர் நமக்காக ஏற்படுத்தியிருக்கும் நன்மைகளை நாம் சுதந்தரிப்பதற்கு வழி செய்யும் ஒன்றாக இருக்கிறது.

என் மகனே, உன் தகப்பன் கற்பனையைக் காத்துக்கொள்; உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே.

*நீதிமொழிகள் 6:20*

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம்.

*எபேசியர் 6:1*

இந்த வசனங்கள் பெற்றோருக்குக் கீழ்படிதல் என்பது தேவனுக்குக் கீழ்படிவதாக இருக்கும் என்று காட்டுகின்றன. அவர்களுக்கு நாம் கீழ்படியாமல் போனால் அறிந்தோ அறியாமலோ நாம் தேவனுக்குக் கீழ்படியாமல் போகிறோம். இந்த காரியத்தை இஸ்ரவேல் புத்திருக்குக் கற்றுக்கொடுக்க கர்த்தர் ரேகாபியரை முன்மாதிரியாக காட்டுகிறார்.

பின்னும் எரேமியா ரேகாபியருடைய குடும்பத்தாரை நோக்கி: நீங்கள் உங்கள் தகப்பனாகிய யோனதாபின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து, அவனுடைய கற்பனைகளையெல்லாம் கைக்கொண்டு, அவன் உங்களுக்குக் கட்டளையிட்டபடியெல்லாம் செய்துவந்தீர்களென்று, இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லு கிறார். ஆதலால் சகல நாட்களிலும் எனக்கு முன்பாக நிற்கத்தக்க புருஷன் ரேகாபின் குமாரனாகிய யோன தாபுக்கு இல்லாமற்போவதில்லையென்று இஸ்ரவேலின் தேவனாகிய சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்றான்.

*எரேமியா 35:18,19*

முற்பிதாக்களின் கட்டளைக்குக் கீழ்படிந்து கட்டுப்பட்டு நடக்கும் ரேகாபியரின் குடும்பத்தை கர்த்தர் பாராட்டுகிறதை நாம் இங்கே காண்கிறோம். முற்பிதாக்கள் கட்டளையிட்டிருக்கிறபடியால் அவர்கள் திராட்சரசத்தை பானம்பண்ணாதவர்களாக இருந்தார்கள். ரேகாபியருக்கு இந்த கீழ்படிதல் அவசிய மானதாக இருந்தது. அவர்களுடைய இந்த நிலைபாட்டை கர்த்தர் பாராட்டி, சகல நாட்களிலும்

எனக்கு முன்பாக நிற்கத்தக்க புருஷன் ரேகாபியருக்கு இல்லாமல் போவதில்லை என்று வாக்கு பண்ணுகிறார். இது ஏதோ பிள்ளைகள் தங்கள் தயாளத்தினால் வழக்கமாக செய்கிற காரியம் அல்ல, இது தேவனாலேயே பாராட்டப்படும் கீழ்படிதலாகும். இந்த வரலாற்று சம்பவத்திருந்து பெற்றோருக்குக் கீழ்படிவது தேவனுக்கு உகந்தது என்பதை கிறிஸ்தவ குடும்பங்கள் அறிந்து, தங்கள் பிள்ளைகள் பெற்றவர்களுடைய வார்த்தைகளைக் கேட்டு கீழ்படிகிற பிள்ளைகளாக வளர்க்க வேண்டும்.

நமக்கு வாய்ப்பு கிட்டும் போதெல்லாம் நாம் தேவனை பிரியப்படுத்த வேண்டும். தேவனை பிரியப்படுத்தக்கூடிய காரியங்களில் ஒன்று தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவது. எனவே நாம் சூழ் நிலைகளைப்பற்றி கவலைப்படாமல் நம்முடைய பெற்றோரை கனம்பண்ணுவோமாக. அப்படி செய்யும்போது தேவனும், நம்முடைய பெற்றோரும் மகிழ்ச்சியடைவார்கள்.

நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.

யோவான் 14:15

நாம் தேவனிடத்தில் அன்பாய் இருந்தால், அதை அவருடைய கற்பனைகளுக்குக் கீழ்படிவதன் மூலம் கிரியையில் வெளிப்படுத்திட வேண்டும். தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவது கைக்கொள்ளப்பட வேண்டிய கற்பனைகளில் ஒன்று.

சில சமயங்களில் சிக்கல்கள் எழும்பலாம். உதாரணத்துக்கு நம்முடைய பெற்றோர் நம்முடைய கர்த்தரும் இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவை மறுதக்க சொல்லலாம் அல்லது ஏதாவது ஒரு பாவ செயலைச் செய்யச்சொல்லலாம். அதுபோன்ற சமயங்களில் கற்பனையைக் கொள்ளுவதற்காக அவர்களுக்குக் கீழ்படிந்து அவர்கள் சொன்னபடி செய்யலாமா? இது கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான காரியந்தான். அவர்கள் வார்த்தைக்குக் கீழ்படியவில்லையென்றால் வேதத்தின்படி குற்றமாக ஆகும் போது, இந்த மாதிரியான சிக்கலான சூழலுக்குத் தீர்வு என்ன?

தீர்வு வேத வசனங்களிலே தெளிவாகவே உள்ளது. பெற்றோருடைய கட்டளைகளை தேவனுடைய கற்பனைகள் நியமங்களின்

அடிப்படையிலேயே நிதானிக்க வேண்டுமென்று தேவன் கட்டளையிட் டிருக்கிறார். தேவனுடைய கட்டளைகளையோ கற்பனைகளையோ மீற சொல்லி சொல்லும் எந்த கட்டளையையும் தேவனே நிராகரிக்கிறவராக இருக்கிறார். கிறிஸ்துவை மறுதக்க சொல்லும் எந்த கட்டளையையும் தேவன் ஏற்றுக்கொள்ளுகிறதில்லை. இதுபோன்ற சிக்கல்கள் உண்டாகும்போது, பெற்றோரிடம் கோபமும் கசப்பும் காட்டுவதற்கு பதிலாக, ஏன் அந்த கட்டளைக்குக் கீழ்படியவில்லை என்பதை அவர்களிடம் மரியாதையுடன் விளக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறார்.

## *2. 5. பெற்றோரைப் பிரியப்படுத்துதல்*

பெற்றோரைப் பிரியப்படுத்த எடுக்கும் முயற்சி அவர்களைக் கனம்பண்ணுவதில் ஒருவிதம் ஆகும். நாம் அன்புகூருவோரின் மனம் புண்படாதபடிக்கு ஜாக்கிறதையாக நடந்துகொண்டு அவர்களுக்கு மதிப்பு கொடுக்கிறவர்களாய் நாம் இருக்கவேண்டும். நீடித்திருக்கும் நட்புடன் பழகுவது அன்புகூர்ந்து கனம் பண்ணுதன் அங்கமாகும். அப்படியானால், அவர்களை வேதனைப்படுத்துவதைத் தவிர்த்து அனுதினமும் அவர்களை சந்தோஷமாக வைத்திருக்க முயற்சி செய்யவேண்டும். இதை வேத வசனம் இப்படியாக சொல்லுகிறது:

> நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான். உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்; உன்னைப்பெற்றவள் மகிழுவாள்.
>
> *நீதிமொழிகள் 23:24,25*

பிள்ளையினுடைய தாழ்மையும் நேர்மையுமான நீதியின் கிரியைகள் தகப்பனையும் தாயையும் சந்தோஷப்படுத்தும். நாம் நேர்மையாய் நடக்க ஜாக்கிறதையாக இருக்கவேண்டும் என்று இவ்வேளையில் அறிகிறோம். நாம் நம் பெற்றோரை வீட்டிலே மதிக்கிறவர்களாகவும் வேத வாக்கியங்களின்படி அவர்களைப் பிரியப்படுத்துகிறவர்களாகவும் இருந்துவிட்டு, வெளியிலே சரியில்லாத நடக்கை உள்ளவர்களாக இருந்தால், வீட்டிற்குள் நாம் காண்பித்த நீதியுள்ள நடவடிக்கை ஒன்றுமில்லாததாகி நாம் பெற்றோரை மனமுறிய பண்ணுகிறவர்களாகவே இருப்போம்.

புத்தியில்லாத மகனையும் கொண்ட பெற்றோர் சந்தோஷமாக இருக்கமுடியாது. அவர்கள் அந்த பிள்ளைகள் நிமித்தம் வெட்கப்படுவார்கள். பெற்றோருக்கு இப்படிப்பட்ட ஏமாற்றத்தைத் தரும் பிள்ளைகளின் நடவடிக்கை அவர்களது வாழ்வில் வெற்றியை அடைவதற்கு தடைகளாக மாறி போகும்.

எனவே பெற்றோருக்கு ஏதாவது ஒரு வகையில் ஏமாற்றத்தைக் கொடுத்ததும், முன்நாட்களில் அவர்களுடைய போதனைகளை மீறி நடந்ததுமான நம்முடைய தாறுமாறான நடவடிக்கைகளை நாம் முற்றிலுமாக விட்டுவிட்டு, இனி அவர்களின் கற்பனைகளின்படி நடக்க நம்மை அர்ப்பணிக்க வேண்டும்.

அதை எனக்குப் பிரியமாயிருக்கிற ருசியுள்ள பதார்த்தங்களாகச் சமைத்து, நான் புசிக்கவும், நான் மரண மடையுமுன்னே என் ஆத்துமா உன்னை ஆசீர்வதிக்கவும், என்னிடத்தில் கொண்டுவா என்றான்.

*ஆதியாகமம் 27:4*

ஏசாவை ஆசீர்வதிக்க வேண்டுமென்று ஏற்கனவே ஈசாக்கு தீர்மானித்திருந்தாலும், அதை அவன் சாராணமாக செய்ய விரும்பவில்லை. தான் விரும்பின உணவால் திருப்தியடைந்த நிலையில் வாயைத் திறந்து சொல்லும் ஆசீர்வாதமே நிலைத்திருக்கிற தாய் இருக்கும் என்று ஈசாக்கு உணர்ந்தான். அந்த ஆசீர்வாதங்களை கொடுப்பதற்கு முன்பு அவன் சாதாரணமான உணவை அல்ல விசேஷமான உணவை உண்ண விரும்பினான்.

நம்முடைய பெற்றோரும்கூட அதேபோல திருப்தியடைய விருப்புகிறார்கள். அவர்களுக்கு இனிப்பு வேண்டும். அவர்களுக்கு மரியாதையும் கனமும் என்கிற இனிப்பு, அங்கீகாரம் என்கிற இனிப்பு, ஏற்றுக்கொள்ளுதல் என்கிற இனிப்பு ஆகியவை வேண்டும். இனிப்பற்ற காரியங்கள் கசப்புக்கும் சந்தோஷமின்மைக்கும் காரணமாக அமைந்துவிடும். அவர்கள் சந்தோஷமில்லாதிருக்கும்போது கசப்பான வார்த்தைகள்தான் வெளிப்படும். அவைகள் நம்மை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கிறவையாக இருக்கின்றன. காலப்போக்கில் பெற்றோரின் சந்தோஷமின்மையே வாழ்க்கையில் நாம் காணும் தோல்விக்குக் காரணமாக அமைந்துவிடக்கூடும். ஆகவே நம்முடைய இனிமையான நடவடிக்கைகளால் அவர்களை சந்தோஷப்படுத்த நாம் எப்போதும் கவனம் செலுத்தவேண்டும்.

ஈசாக்கு தான் விரும்பின உணவை சமைத்துவர சொன்னான். தன்னுடைய மகனை அவன் சந்தோஷ மற்ற நிலையில் ஆசிர்வதிக்க விருப்வில்லை. இஸ்ரவேன் முற்பிதாக்கள் தேவனைப் பிரியப்படுத்து வதின் நல்ல விளைவுகளை அறிந்தவர்களாக இருந்தார்கள். அதேபோல தங்களுடைய பிள்ளைகளும் தங்களைப் பிரியப்படுத்தி ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று விரும்பின ார்கள். அவர்கள் தேவனைப் பிரியப்படுத்தவும் அவருடைய பிரசன்ன த்தை தேடவும் விலைமதிப்புள்ள மிருகங்களை பலியாக செலுத்தின ார்கள். அதேபோல தங்கள் பிள்ளைகளை ஆசீர்வதிக்கும்போது தாங்களும் மனமகிழ்ச்சியோடே அதை செய்ய அவர்கள் விரும்பின ார்கள். “மற்றவர்களெல்லாம் எப்படி சாப்பிடுவார்களோ அப்படி எனக்கு ஆயத்தம்பண்ணு” என்று ஈசாக்கு சொல்லவில்லை மாற ாக, “எனக்கு பிடித்த வகையிலே ஆயத்தப்படுத்து” என்று சொன்ன ான். அதுபோல நாமும் பொதுவாக காரியங்களைச் செய்வதற்கு பதிலாக நம்முடைய பெற்றோர் விரும்பும்படி செய்ய வேண்டும்.

எல்லாருக்கும் பிடிக்கும் காரியம் நம்முடைய பெற்றோருக்கும் பிடிக்கும் என்று ஆகாது. நமக்குப் பிடித்தமானதுகூட பல சமயம் அவர்களுக்குப் பிடிக்காததாக இருக்கக்கூடும். அவர்களுடைய விருப்பு வெறுப்பு மன விருப்பங்கள் அணுகுமுறைகள் பழக்கங்கள் நம்மைவிட வித்தியாசமாக இருக்க முடியும் என்பதால், ஒரு பரிசு கொடுக்க வேண்டுமென்றாலும் எது அவர்களுக்குப் பிடித்தாக இருக்குமென்று கருத்தாக பார்த்து கொடுக்க வேண்டியிருக்கும். நாம் கொடுக்கும் பொருள் அவர்களுக்கு ஏமாற்றத்தையோ கோபத்தையோ ஏற்படுத்தி அவர்கள் மனநிறைவோடு நம்மை ஆசீர்வதிக்கிற சூழ்நிலையைக் கெடுத்துவிடக்கூடாது. ஆகவே

பெற்றோரைப் பற்றி காரியம் என்று வரும்போது நாம் அஜாக்கிரதையாய் செயல்பட்டுவிடாதபடி அவர்களுடைய விருப்பங்களை அறிந்து செயல்பட எச்சரிக்கையோடு செயல்படவேண்டும்.

தன்னுடைய தகப்பனை சந்தோஷப்படுத்துவதே ஏசாவினுடைய சிந்தையாக இருந்தது. வேட்டைக்காரனாக இருந்த ஏசா கண்ணில் பட்டதெல்லாம் கொல்லுகிறவனாக இருந்திருக்க முடியாது. அவன் தான் வேட்டையாடப்போகும் மிருகத்தை ஜாக்கிற தையாகத் தெரிந்தெடுத்திருப்பான். ருசியான உணவு வேண்டும் என்றுகேட்ட தன் தகப்பனுடைய விருப்பத்தை மனதில் கொண்டுதான் வேட்டையாடியிருப்பான். அது அத்தனை லேசான காரியம் கிடையாது. இருந்தாலும் ஏசா அப்படி செய்தான். தன் தகப்பனுடைய வாயிருந்து புறப்படப்போகும் ஆசீர்வாதங்கள் தன் வாழ்கையிலும் தன் பின்னடியாரின் வாழ்விலும் எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியது என்று அறிந்திருந்தான்.என வே அவன் அதற்காக சற்று பிரயாசப்பட வேண்டியிருந்தாலும் தயங்காமல் முயற்சி செய்தான். இதுபோன்ற சத்தியங்களை வேதத்திருந்து தெரிந்துகொள்ள வாய்ப்புப் பெற்ற நாமும் அவர்களைப் போல நம்முடைய பெற்றோரை பிரியப்படுத்த முயற்சிகளை தொடர்ந்து மேற்கொள்ளவேண்டும். பெற்றோருடன ான உறவில் மன கசப்பையும் மன நோவையும் ஏற்படுத்தக்கூடிய அத்தனையையும் நாம் தவிர்க்க வேண்டும்.

## 2. 6. பெற்றோரின் அறிவுரைக்கு செவிகொடுத்தல்

பெற்றோரைக் கனப்படுத்துவதில் செய்யப்படவேண்டிய முதல் காரியம் அவர்களது சொல்லுக்கு செவிகொடுக்க ஆயத்தமாயிருப்பது. அப்படி செய்தால் பெற்றோரின் பரிவைப் பெறமுடியும். நம்முடைய வாழ்வை நாம் சரியாக அமைத்துக் கொள்ளவேண்டுமாயின், பெற்றோர் தங்கள் வாழ்நாள் அனுபவத்தை நம்மோடு பகிர்ந்துகொள்ளக்கூடிய அளவுக்கு அவர்களோடு சந்தோஷமான நல்லுறவு கொண்டிருக்க வேண்டும். நீதிமொழிகளில் சாலொமோன் இப்படியாக சொல்லுகிறான்:

புத்திமதிகளைத் தள்ளுகிறவன் தரித்திரத்தையும் இலச்சையையும் அடைவான்; கடிந்துகொள்ளுதலைக் கவனித்து நடக்கிறவனோ கனமடைவான்.

*நீதிமொழிகள் 13:18*

பெற்றோரின் அறிவுரையை ஏற்றுக்கொள்ள மறுத்து தன் இஷ்டப்படி ஜீவிக்க விரும்புகிறவர்களின் வாழ்வு பிற்காலத்திலே துக்கத்திலேயும் அவமானத்திலேயுமே முடியும்.

என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும்.

*நீதிமொழிகள் 1:8,9*

கவனித்துக் கேட்கிறவர்களுக்கு பெற்றோருடைய அறிவுரை எத்தனை பிரயோஜனமாய் இருக்கிறது என்பதை இந்த வசனங்கள் நமக்குக் காட்டுகிறது. அதைக் காது கொடுத்து கேட்க விரும்பாதோருக்கு அது வெறும் சப்தமாக தொனிக்கும். பெற்றோரை கனம்பண்ணுவதை முக்கியமான காரியமாக நாம் கருதினால், பெற்றோர் என்னதான் நம்மைவிட தாழ்ந்த நிலையில் இருந்தாலும் அவர்களின் அறிவுரையை நாம் ஆர்வமாகவும் கவனமாகவும் கேட்கிறவர்களாக இருப்போம். அவர்களுடைய அடிப்படை போதனைகளை நாம் கைவிடவே கூடாது. அவர்களது அறிவுரைகள் நம்மை பாதிக்க அல்ல, பாதுகாக்கவே கொடுக்கப்பட்டன. அந்த நல்ல நோக்கத்தோடு அவர்கள் அதை செய்கிற படியால் அவர்கள் அந்த காரியத்தை செவ்வனே செய்ய நாம் வாய்ப்பளிக்க வேண்டும். மேலும் அவர்கள் செய்யும் அந்த காரியம் தேவனால் அவர்கள் பணிக்கப்பட்ட காரியம் என்பதால், சொல்லப்படும் காரியங்களை நாம் சரியாக புரிந்துகொள்ள வேண்டும் என்பதற்காக, அவர்கள் சொன்னதையே எத்தனை முறை திரும்ப திரும்பச் சொன்னாலும், அதிலே தவறு ஏதும் இருக்காது.

நம்முடைய வாலிப நாட்களில் பெற்றோர் நமக்குக் கொடுத்த உபதேசங்களைக் கேளாமல்போனதன் விளைவாகவே நம்முடைய வாழ்வில் தீமைகளை விளைவிக்கும் பல காரியங்கள் எழும்பி நம்மை உலகத்தில் அழிவிலே மூழ்கடிக்க முயலுகிறதை காண்கிறோம். இதன ால்தான் நாம் அவர்களுடைய வார்த்தைகளுக்கு செவிகொடுக்கிறது அவசியமாகிறது. அவர்கள் கொடுக்கும் உபதேசங்கள் அவர்களு டைய வாழ்நாளின் அனுபவத்தில் இருந்து வருபவை என்பதால், அவை நம்மைத் தாக்கி தகர்க்கக் காத்திருக்கும் சக்திகளிடமிருந்து நம்மைத் தப்புவிக்க வல்லமையுள்ளனவாய் இருக்கின்றன. ஆகவே பெற்றோரின் உபதேசங்களுக்கு செவிகொடுக்க நாம் ஆயத்தமாயிருக்க வேண்டும்.

செவிகொடுப்பதன் முக்கியத்துவம் பின் வரும் உதாரணம் நன்றாக விளக்குகிறது. இந்த கதை அநேகர் கேட்ட கதையாக இருக்கக்கூடும். ஆனால் இது எத்தியோப்பியாவின் தொலைக்கோடியில் நடந்த சம்பவமாக இருக்கிறது. ஒரு மனிதனுக்கு பன்னிரண்டு குமாரர் இருந்தார்கள். அந்த மனிதன் தன் பன்னிரண்டு குமாரரையும் காட்டுக்கு சென்று ஆளுக்கு இரண்டு கொம்புகளைக் கொண்டுவருமாறு சொன்னான். அவர்கள் அப்படியே செய்தார்கள். பின்பு அவன் அவர்களை ஒவ்வொருவரும் தன்னிடம் உள்ள இரண்டு கொம்புகளில் ஒன்றை தரையிலே வைக்குமாறு சொன்ன ான். அப்படியே ஒவ்வொருவருடைய இரண்டு கொம்புகளில் ஒன்று தரையிலே வைக்கப்பட்டது. அவரவர் தன்தன் கையிருக்கும் கொம்மை உடைக்குமாறு அந்த மனிதன் சொன்னான். பன்னிரண்டு குமாரரும் எளிதாக தன் தன் கொம்புகளை உடைத்துவிட்டனர். அடுத்ததாக அவன் தரையில் உள்ள பன்னிரண்டு கொம்புகளையும் எடுத்து ஒரே கட்டாகக் கட்ட சொன்னான். இப்போது இந்த கொம்புகளின் கட்டை யாரால் உடைக்க முடியும் என்று பார்க்க சொன்னான். ஒவ்வொருவராக முன்றார்கள், யாராலும் அதை முறிக்க முடியவில்லை. பல முயற்சிகளுக்கு பின்பு அந்த மனிதன் தன் குமாரர் அனைவரையும் ஒன்றாக சேர்ந்து அந்த கட்டை உடைக்க சொன்னான். அவர்கள் எல்லாரும் சேர்ந்து முயற்சித்தும் அந்த கட்டை உடைக்க முடியவில்லை.

ஒன்றாக சேர்ந்து வாழுவதும் உழைப்பதும் குறித்த போதனை யை அந்த தகப்பன் இதன் மூலமாக தன் பிள்ளைகளுக்குக் கற்றுக்கொடுத்தான். ஒற்றுமைமே பலம் என்றும், ஒன்றுபட்டிருந்தால் சத்துருக்களை மேற்கொள்ள முடியும் ஆன ால் பிரிந்துகிடந்தால் சத்துருக்கள் உங்களை ஒவ்வொருவராக

எளிதில் மேற்கொண்டுவிடுவார்கள் என்றும், அவன் விளக்கின ான். மேலும், என்னுடைய மரணத்திற்கு பின்பு ஒருவருக்கொருவர் பாதுகாவலாக இருக்கும்படிக்கு ஒற்றுமையாக இருங்கள். நீங்கள் ஒன்றாக யோசித்து ஒற்றுமையாக செயல்பட்டால், ஒவ்வொருவரும் தனித்திருந்து அடையகூடிய நிலையைவிட மேன்மையான நிலையை அடைவீர்கள். நீங்கள் பிரிந்து இருந்தால் அந்த கொம்பு களைப்போல நீங்கள் விழுந்துபோவீர்கள். ஆனால் கட்டாகக் கட்டப்பட்ட கொம்புகளைப்போல ஒன்றாய் இருக்கும்போது, உங்கள் ஒற்றுமையினிமித்தம் நீங்களும் உங்கள் கையின் கிரியைகளும் பாதுகாப்பாக இருக்கும். என்று சொல் ஆலோசனை வழங்கின ான். இது ஒரு உண்மையான கதை. அவருடைய மரணத்திற்கு பின்பு தகப்பனுடைய ஆலோசனையின்படி அந்த குமாரர்கள் அனைவரும் சமுதாயத்தில் பலமுள்ளவர்களாக இருந்தார்கள்.

இந்த கதையை வாசிக்கும் ஒவ்வொருவரையும் உங்கள் பெற்றோருக்கு முடிந்தவரையிலும் கீழ்படிந்து நடக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள் சொல்லும் உபதேசத்தை கவன மாய் கேட்பது நம்முடைய கடமை. அதை தேவன் உங்களோடு மறைமுகமாக பேசினதாக எடுத்துக்கொள்ளுங்கள். பெற்றோரைக் கனம்பண்ணுவது உங்களுடைய மதிப்பாக இருக்கிறது என்பதை கவனத்தில் கொள்ளுங்கள்.

## 2. 7. பெற்றோரைப் புகழுதலும் வாழ்த்துதலும்

நாம் உருவாக்கப்பட்ட விதத்தை சற்று நிதானித்தால், தேவனுக்கு அடுத்தது நம்முடைய பெற்றோருக்கு தான் கனம் கொடுக்கவேண்டும் என்பது தெளிவாகும். நாம் தேவனுடைய அநாதி தீர்மானத் தின்படி உண்டானவர்கள் என்றாலும், இந்த பெற்றோரைக் கொண்டுதான் தேவன் தம்முடைய திட்டத்தை நிறைவேற்றியிருக்கிறார். பிறப்புக்கும் முதிர்ச்சி வரையிலான வளர்ச்சிக்கும் அவர்களே காரணமாக இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக தேவனுடைய திட்டம் நிறைவேறுவதால், அவர்களு டைய கடைசி மூச்சு வரைக்கும் தேவன் அவர்களுக்கு செவிகொடுக்கிற வராக இருக்கிறார். இந்த மறுக்க முடியாத உண்மையை ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப நடந்துகொண்டால் நமக்கு அதிக பயனுள்ளதாக இருக்கும்.

> தங்கள் தகப்பனைச் சபித்தும், தங்கள் தாயை ஆசீர்வதியாமலும் இருக்கிற சந்ததியாருமுண்டு. தாங்கள் அழுக்கறக் கழுவப்படாமலிருந்தும், தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு.
>
> *நீதிமொழிகள் 30:11,12*

மேற்கண்ட நீதிமொழிகளில், ஞானியாகிய சாலொமோன் தன்னுடைய பார்வைக்கு சுத்தமாக இருக்கும் சந்ததி ஒன்று எழும்பும் என்று ஆவிக்குரிய தரிசனமாக காண்கிறான். தாங்கள் என்னதான் செய்தாலும் தாங்கள் குற்றமில்லாதவர்கள் என்றே இவர்கள் கருதுகிற ார்கள். அவர்களைப் பொருத்த வரையில் அவர்கள் பிழையற்றவர்கள்.

தேவனுடைய சத்திய வழிகளிலும் நியமங்களின்படியே சிந்திப்பதும் செயல்படுவதும்தான் ஞானம் ஆகும். சாலொமோன் காணும் இந்த சந்ததியார் உண்மையிலேயே குற்றமற்றவர்களாக இருக்கக்கூடும். அதாவது மற்றவர்களுடனான அவர்களுடைய உறவு சரியானதாக தவறு ஏதும் இல்லாததாக இருக்கக்கூடும். அதன ால் அவர்கள் குற்றமற்றவர்களாக ஆகிவிடுவதில்லை. அவர்களிடம் சாலொமோன் காணும் குற்றம் அவர்கள் தங்கள் தந்தையை சபிக்கிற ார்கள் அதாவது அவர்களைக் கடின மான வார்த்தைகளைக் கொண்டு பேசுகிறவர்களாய் இருக்கிறார்கள். அநேகமாக சிர்குலைந்த உறவின் விளைவாக இத்தகைய பேச்சு வெளிப்பட்டிருக்கலாம். தேவன் நம்மை சபிக்க அல்ல ஆசீர்வதிக்கவே அழைக்கிறார்.

தங்கள் தாயை ஆசீர்வதியாமல் இருப்பது அதாவது அவர்களைப் புகழாது இருப்பது அவர்கள் செய்யும் மற்றொரு குற்றமாகும். இவர்கள் தங்கள் தாய்மாரை கடின வார்த்தைகளைக் கொண்டு பேசவில்லை என்றாலும் அவர்களுடைய நல்ல தன்மையை புகழாமலும் அங்கீகரியாமலும் இருக்கி றார்கள். நம்முடைய வாழ்வில் தாய்மார் செய்த நல்ல காரியங்களுக்கு அவர்கள் புகழப்பட வேண்டும்.

அவர்கள் செய்த காரியங்களில் நாம் அவர்கள் கருவிருந்த ஒன்பது மாத கால அளவும் நம்மைப் பாதுகாத்து நமக்குத் தேவையான ஊட்டச்சத்தை நமக்குக் கொடுத்து நம்மைப் பராமரித்தது ஆகும்.

மேலும் நாம் நல்லது கெட்டது அறியாதிருந்த காலத்தில் நம்மை எல்லாத் தீங்கிற்கும் விலக்கிப் பாதுகாத்தது தாய் தான். நமக்கு

அவர்கள் செய்த நன்மைகளையெல்லாம் நாம் அறிந்தோமானால் நிச்சயமாய் அவர்களை வாய்விட்டு புகழுவோம். அவர்கள் நமக்கு செய்த நன்மைகளை நாம் எந்த அளவுக்கு உணர்ந்திருக்கிறோம் என்பதை தாய்மார்களுக்கு நாம் தெளிவாக தெரிவிப்பது அவசியம்.

நம்முடைய வாழ்நாள் முழுவதும் தேவன் நமக்குப் பாராட்டிய தயவுக்காகவும் நன்மைகளுக்காகவும் நாம் எப்போதும் அவரைத் துதிக்கப்பட வேண்டும். தேவனுடைய நேர்முக மற்றும் மறைமுக வழி நடத்துதன்படி நம்முடைய வாழ்வை ஏற்படுத்திக்கொடுத்த நம்முடைய பெற்றோரும் புகழப்பட வேண்டியவர்கள்தான். அவர்கள் நம்மைக் கருதரிக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, கருவிலேயும், சிறுபிராயத்திலேயும், நாம் வளர்ந்து பெரியவர்கள் ஆகும் வரையிலேயும் நம்மை பாதுகாத்தார்கள்.

## 2. 8. நம்முடைய தவறுகளுக்கு மன்னிப்புக் கோருதல்

தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவதால் உண்டாகும் பலன்களை எடுத்துரைப்பது மட்டும் இந்த பகுதியின் நோக்கம் அல்ல. அதையும் கடந்து தேவ நடத்துதலின் பாதையில் உங்களை அழைத்து செல்வது அதன் முக்கிய நோக்கமாக இருக்கிறது. இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட அறிவுரைகளை எல்லாம் தங்கள் வாழ்விலே ஏற்கனவே கடைபிடித்து வருபவர்கள் இருப்பார்களான ால், அவர்கள் செய்துவருகிற நல்ல காரியங்களைத் தொடர்ந்து செய்யவேண்டுமென்று உற்சாகப்படுத்துகிறோம். என்னதான் செம்மையாக வாழ்ந்தாலும், இன்னும் செய்யவேண்டிய காரியங்கள் இருக்கக்கூடும் என்பதால், பெற்றோரை வருத்தத்திற்குள்ளாக்கும் காரியம் ஏதாவது நமக்குள் மறைந்திருக்கிறதா என்று நாம் நிதானிக்க வேண்டும்.

நாம் சரியாக நடப்பாதாக தோன்றினாலும், நம்மிலே ஏதாவது ஒரு விதத்திலே பெற்றோரை கனம் பண்ணவேண்டிய விதத்திலே நாம் குறைவுபட்டு போயிருக்கிறோமா என்பதை நாம் தீவிரமாக நிதானிக்கவேண்டும். எப்படி இயேசுகிறிஸ்துவுக்கு நான் கொஞ்சம்கூட குறையில்லாமல் முற்றிலுமாக கீழ்படிந்திருக்கிறேன் என்று உலகத்திலே யாராலும் சொல்ல முடியாதோ அதுபோலவே என் பெற்றோருக்கும் குறையில்லாமல் முற்றிலுமாகக் கீழ்படிந்திருக்கிறேன் என்று யாராலும் சொல்ல முடியாது. ஆகவே நாம் எந்த வகையிலே அவர்கள் சொல்லைக் கேளாமல் போய் அவர்களுக்கு மன நோவு

உண்டாக்கியிருந்தோம் என்பதைக் கண்டறிந்து அவர்களிடம் போய் மன்னிப்புக்கோரி ஒப்புரவு செய்துகொள்ள வேண்டும்.

பெற்றோரின் உபதேசத்தைப் புறக்கணித்தது மற்றும் சின்ன சின்ன காரியங்கள் என்று கருதப்படுபவைகளாகிய ஏற்ற கனம் கொடுக்காதது, கீழ்படியாதது, செய்யக்கூடாததை செய்து மன நோவை ஏற்படுத்தியது, அவர்கள் வேலையிருந்து ஓய்வுபெற்றப்பின் அவர்களை கவனித்துக் கொள்ளாதது, குடும்பக் காரியங்களை கலந்தாலோசிக்கும்போது அவர்களுக்கு அதிலே இடங்கொடாமல் போனது, மற்றும் அவர்களை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கக்கூடிய மற்ற காரியங்கள் ஆகிய இவை அனைத்தும் நம்முடைய கவனத்தில் வராத மீறுதல்களாக இருக்கக்கூடும். அவைகளுக்கும் நாம் மன்னிப்புக் கேட்கவேண்டும்.

சொல்லப்பட்ட இந்த காரியங்களையெல்லாம் கவனிக்கும்போது, இவை பெற்றோரை இன்னும் உயிரோடு கொண்டவர்களுக்கு தான் பொருந்தும் என்பது தெளிவாகும். அப்படி இருக்கும்போது, அவர்கள் கால தாமதம் பண்ணமல் பெற்றோரிடம் மன்னிப்புக் கேட்டு அவர்களுடன் சீர்பொருந்தும் முயற்சியில் இறங்கவேண்டும். மன்னிப்புக் கேட்டு சீர்பொருந்துவதன் முக்கிய நோக்கமே பிளவு பட்டு கிடக்கும் உறவுகளை (சில உறவுகள் பல வருஷங்களாக பிளவு பட்டனவாக இருக்கக்கூடும்) மறுபடியும் சீர்படுத்துவது ஆகும். பெற்றோருடனான உறவு சீர்படுவதால் சமாதானமும் சவுக்கியமும் உண்டாகும். கடந்தகால தவறுகளை சரிசெய்ய மன்னிப்புக் கேட்டு மன்னிக்கப்பட்ட புதிய வாழ்வோடு புதிய துவக்கத்தை ஆரம்பிப்பதே ஒரே வழியாகும்.

மனந்திரும்பி நான் எப்படி பெற்றோரிடமிருந்து ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்டேன் என்கிற என்னுடைய சொந்த ஆவிக்குரிய அனுபவத்தை இங்கே உங்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். நான்கு வருடங்களுக்குமுன்பு நான் என்னுடைய பெற்றோரை சந்திக்கப் போயிருந்தேன். அப்போது நான் பெற்ற அனுபவமே இந்த பாடத்தில் உள்ள அதிகமான காரியங்களைக் கற்று கொடுத்தது. நான் என்னுடைய சகோதர சகோதரிகளையும் என் பெற்றோர் விட்டுக்கு வருமாறு அழைத்திருந்தேன். நாங்கள் எல்லாரும் ஒன்றாக அங்குக் கூடினோம். அங்கு நாங்கள் ஒவ்வொருவரும் எங்களுடைய கடந்தகால அனுபவங்களையும் பெற்றோருடனான எங்கள் கடந்தகால உறவையும் பற்றி மனந்திறந்து பேசினோம்.

எல்லாரும் பேசி முடித்தபின்பு நாங்கள் அனைவரும் எங்கள் பெற்றோருக்கு முன்பாக மண்டியிட்டு எங்களுடைய குற்ற ங்களையும் வயதான காலத்திலே போதுமான அளவுக்கு அவர்களை கவனியாமல் போன எங்கள் தவற்றையும் சொல் மன்னிப்புக் கோரினோம். அதுமட்டுமல்லாமல் நாங்கள் ஒவ்வொருவரும் எங்கள் பெற்றோரின் பாத்திலே எங்கள் பணத்தை வைத்து அவர்கள் எங்கள் வருமானத்தையும் குடும்பத்தையும், வாழ்வையும் எங்கள் சுகத்தை யும் வாழ்க்கையையும் அசீர்வதிக்க வேண்டுமென்று கோரினோம். எங்கள் மன்னிப்பை எங்கள் பெற்றோர் ஏற்றுக்கொண்டு எங்களை ஆசீர்வதித்தபோது சந்தோஷமும் மன நிறைவும் கொண்டவர் களாக எழுந்து எங்கள் இல்லங்களுக்குப் புறப்பட்டோம்.

இந்த மனந்திரும்புதலும் அதனால் விளைந்த மன்னிப்பும் கொண்ட அந்த நிகழ்ச்சி என்னுடைய வாழ்விலும் என் உடன் பிறந்தவர்களுடைய வாழ்விலும் அநேக மாற்றங்களைக் கொண்டுவந்தது. அது என் வாழ்வையும் தேவனை சேவிக்க விரும்பும் என் ஆவலையும் உயர்த்தியது. என் உடன் பிறந்த வர்கள் தங்கள் பள்ளிகளிலும் அலுவகங்களிலும் வீடுகளிலும் இதன் ஆசீர்வாதத்தை கண்டடைந்தார்கள்.

ஆனால் என்னுடைய சகோதரரில் ஒருவர் அந்த நிகழ்ச்சியில் கலந்துகொள்ள முடியாமல் போய் விட்டது. அவருக்கு வர விருப்மில்லாததினால் சாக்கு போக்கு சொல்லி நிகழ்ச்சியில் பங்கேர்ப்பதை தவிர்த்துவிட்டார். அதன் விளைவான அவர் வாழ்க்கையில் அவர் கஷ்டங்களை அனுபவிக்கிறவராக ஆன ார். முதலாவது அவரது தொழில் பெரும் நஷ்டத்தைக் கண்டார். அவர் செய்த சிறிய பெரிய தவறுகளுக்கு அவர் அடுத்த இரண்டு ஆண்டுகளில் மீண்டும் மீண்டும் சிறை செல்ல நேரிட்டது. கடைசியாக பல காலமாக வசித்துவந்த வீட்டைவிட்டு அவர் வெளியேற நேரிட்டது.

அன்பான வாசகர்களே, பெற்றோருக்கு விரோதமான மீறுதல்களுக்கு அவர்களிடம் மன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுவது பெரிய காரியம் ஆகும். நம்முடைய பெற்றோருடனும் உறவினரோடும் நல்ல உறவு இருக்குமாறு நாம் எப்போதும் பார்த்துக்கொள்ள வேண்டும். அவர்கள் நமக்கு விரோதமாக மனதிலே கசப்பு ஏதும் கொள்ளாதபடிக்கு நாம் நம்மைத் தாழ்த்தி அவர்களுக்கு மனதைத் திறக்க வேண்டும்.

## 2. 9. பெற்றோரை இழந்தவர்களுக்கு ஆலோசனைகள்

எல்லா மீறுதல்களுக்கும் விளைவுகள் உண்டு என்றும் அதை நம்முடைய வாழ்வில் சாபத்தைக் கொண்டுவரும் என்றும் தேவனுடைய வார்த்தை சொல்லுகிறது. மீறுதல்களின னால் விளையும் சாபங்கள் நம்மை எப்போது கெடுத்து நாசம் பண்ணலாமென்று சமயம் பார்த்துக்கொண்டிருக்கும். அதாவது கடன்காரன் கொடுத்ததையெல்லாம் வசூக்க நம் பின்னாலேயே சுத்துகிறதுபோல இந்த சாபங்கள் நமக்கு பின்னால் திரிகின்றன வாக இருக்கும்.

நாம் பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இருக்கும் பலவித உறவுகளைப்பற்றி பார்த்தோம். அதிலே பெற்றோர் உயிரோடு இருக்கப்பெற்ற பிள்ளைகள் தங்கள் தப்பிதங்களுக்கு மன்னிப்புக்கேட்டு பிராயச் சித்தம் செய்துகொள்ள வாய்ப்பு இருக்கிறது என்றும் பார்த்தோம்.

இதனால் பெற்றோரை இழந்த நிலையில் இருப்பவர்களின் நிலை சங்கடமாக ஆகிவிடுகிறது. அதிலும் குறிப்பாக அவர்கள் பெற்றோருக்கு விரோதமாக பெரிய தப்பிதங்களைச் செய்து அதினிமித்தம் குற்ற வுணர்வு கொண்டவர்களாக இருப்பார்களான ால், மன்னிப்புக்கேட்டு தவற்றை சரிசெய்துகொள்ள முடியாத நிலையைக் கண்டு அவர்கள் நிலை இன்னும் அதிக வருத்தமான தாக ஆகிவிடும். அந்த நிலையிலுங்ளவர்களுக்கு இந்த ஆலோசனை வழங்கப்படுகிறது. நீங்கள் நம்பிக்கையற்று போனவர்களாக ஆகாதபடிக்கு நீங்கள் தேவனிடத்தில் மன்னிப்புக்கேட்டு, அன்று நீங்கள் உங்கள் பெற்றோருக்கு விரோதமாக செய்த தப்பிதங்களை சரிசெய்து கொள்ளலாம் என்று உங்களுக்கு சொல்லி உங்களை உற்சாகப்படுத்த விரும்புகிறேன்.

பெற்றோர் உயிரோடு இல்லை என்பதினாலே அவர்களிடம் உங்கள் தப்பிதங்களுக்கு மன்னிப்பு கேட்கும் வாய்ப்பு உங்களுக்கு இல்லாமல் போகிறது. நீங்கள் ஏற்கனவே அவர்களுக்கு கீழ்படியாமலும் அவர்களை மதிக்காமலும் இருந்து அவர்களை புண்படுத்திவிட்டீர்கள். இந்த தப்பிதங்களையெல்லாம் நீங்கள் உங்கள் பெற்றோருக்கு விரோதமாக மாத்திரம் அல்ல தேவனுக்கு விரோதமாகவும் செய்தீர்கள். பாதிக்கப்பட்ட உங்கள் பெற்றே ார் இப்போது உயிரோடு இல்லை என்றாலும் அவர்கள் பாதிக்கப் பட்டதை பார்த்துக்கொண்டிருந்த சிருஷ்டிகராகிய

தேவன் இருக்கிறவராகவே இருக்கிறார். எனவே நீங்கள் உங்கள் தப்பிதங்களுக்கு தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்டு காரியத்தை சீர் செய்ய முடியும்.

பெற்றோரிடம் நேரடியாக மன்னிப்புக்கோரி மன்னிப்பு பெற்றுக்கொள்ள முடியாவிட்டாலும், பரலோக தந்தையிடம் மன்னிப்புக்கேட்டு காரியத்தை சீர் செய்துகொள்ள முடியும் என்று இதை சொல்லலாம். நாம் உண்மையான மனந்திரும்புதலோடு தேவனை அணுகினோமானால் அவர் நம்முடைய குற்றங்களை நமக்கு மன்னித்து, எல்லா குற்ற வுணர்வுகளை நம்மைவிட்டு நீக்கிப்போடுகிறவராக இருக்கிறார்.

பெற்றோருக்கு விரோதமான குற்றங்களை செய்ததைக் குறித்து நாம் தொடர்ந்து குற்றவுணர்வுள்ள நிலையில் நீடிக்காமல் இருக்க, திற ந்த மனதுடன் தேவனை அணுகி, நம்முடைய மீறுதலுக்கு இரக்கம் கேட்பதுதான் ஒரே வழி. நம்மிலே சிலர் மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொண்டபோது நாளிலே பெற்ற பாவ மன்னிப்பே போதும் என்கிற எண்ணத்தில் இருக்கக் கூடும். ஆனால் பெற்றோரை கனம்பண்ணாமல் போனதற்கு ஏற்படும் குற்றவுணர்வை ஒழித்தே ஆக வேண்டும் என்பதை கீழ் காணும் வேத பகுதிகள் நமக்குக் காட்டுகின்றன.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

*நீதிமொழிகள் 28:13*

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

*1 யோவான் 1:9*

நம்முடைய இரட்சிப்பின் நாளிலே நாம் பாவத்தின் மொத்த தாக்கத்தையும் முழுமையாக உணர்ந்திருக்க முடியாது. மேற்கண்ட வசனங்கள் நம்முடைய வாழ்வில் புதையுண்டிருக்கும் பாவங்களையும் அவற்றின் குற்ற உணர்வுகளையும் பற்றி கூறுகின்றன. நம்மை அறியாமல் கடந்தகால பாவங்களை தேவனிடம் அறிக்கையிடாமல் நாம் மறைத்துவிட்டிருக்கலாம். நாம் வேதத்தை வாசிக்க வாசிக்க, பரிசுத்த ஆவியானவரின் இடைப்படுதனால் அவைகள் நமக்கு வெளிப்பட ஆரம்பிக்கும்.

அப்போது நாம் அந்த பாவங்களுக்காக பாவ மன்னிப்புக் கேட்கவேண்டும். பாவ மன்னிப்புக் கேட்பது என்றால், செய்த பாவத்தை ஒப்புக்கொண்டு அவைகளை வாய்விட்டு அறிக்கையிடுதலை உள்ளடக்கியது ஆகும்.

நாம் பெற்றோருக்குப் பிரியமில்லாத வழியில் நடந்திருந்தால், அதன் பலனை அனுபவிக்கப்போவது நிச்சயம். அதினால் பாவம் சாபம் என்கிற வட்டத்தில் இருந்து நாம் தேவனுடைய கிருபையை தேடி விடுதலைப்பெற்றாக வேண்டும். இதை வாசித்துக் கொண்டிருக்கிறவர்களில், அவ்வாறு பாவ மன்னிப்பு கோர வாய்ப்பை பெற்றவர்கள், அந்த வாய்ப்பை இழந்துவிடாமல் பயன்படுத்திக்கொண்டு பாவ மன்னிப்புக்கோரி தேவ கிருபையை அடைய நாடுங்கள். “தேவனே நான் உம்முடைய கற்பனை யை மீறிவிட்டேன். என்மேல் கிருபையாயிரும்.” என்று கேட்டுக்கொள்ளுவதின் மூலமாக நாம் விடுதலை அடைய முடியும்.

## 2. 10. பெற்றோருக்கு பரிசுகளை வழங்குதல்

பெற்றோரைக் கனம்பண்ணுவதைக் குறித்து இந்த புத்தகத்தில் தரப்பட்டுள்ள ஆலோசனைகளை படித்தவர்களுக்கு உடனடியாக அவைகளின்படி செயல்பட நல்ல வாய்ப்பு இருக்கிறது. பெற்றே ாருட னான புதிய உறவை ஏற்படுத்திக்கொள்ள இது வழிவகுக்கிற தாய் இருக்கிறது. புதிய உறவை ஏற்படுத் தும் முறைகளில் ஒன்று, பெற்றோருக்கு வாய்ப்பு உண்டாகும் போதெல்லாம் பரிசுகளைக் கொடுத்து மகிழ்விப்பது ஆகும். கனம்பண்ணுவது போலவே பரிசுகள் கொடுப்பதும் பெற்றோரை மகிழ்விக்கிற காரியமாக இருக்கிறது.

ஆகையால், நீ உன் ஆயுதங்களாகிய உன் அம்பறாத்தூணியையும் உன் வில்லையும் எடுத்துக்கொண்டு வனத்துக்குப்போய், எனக்காக வேட்டையாடி,

*ஆதியாகமம் 27:3*

வேட்டையாடி பிடிக்கப்பட்ட மான் ஒன்றை தன் மகனிடம் பரிசாக ஈசாக்குக் கேட்டான். அது போலவே நாமும்கூட வேர்வை சிந்தி சம்பாதிக்கப்பட்ட பரிசுகளை பெற்றோருக்குக் கொடுக்க வேண்டும்.

கடின உழைப்பினால் பெறப்பட்ட பொருட்களால் பெற்றோருக்கு பரிசுகளைக் கொண்டு வருவோரை நாம் உற்சாகப்படுத்த வேண்டும். தங்களுடைய பெற்றோர் நல்ல நிலையில் வசதியாக இருக்கிறார்கள் அவர்களுக்கு பரிசு கொடுக்கப்பட வேண்டியதில்லை என்றோ அவர்கள் பரிசுகளை எதிர்பார்ப்பதில்லை என்றோ சிலர் நினைப்பதுண்டு. பெற்றோர் என்னதான் நல்ல நிலையிருந்தாலும் பிள்ளைகளின் கையினால் பரிசுகளைப்பெற அவர்கள் எப்போதுமே ஆசைப்படுவார்கள். எனவே அவர்களை மகிழ்விக்கும் வண்ணமாக அவர்களுக்கு ஏற்ற பரிசுகளை வாங்கி வழங்குவோமாக.

பணமோ பொருளோ தேவை என்கிற நிலையில் இருப்போர் தங்கள் பிள்ளைகளால் எப்போதுமே தாங்கப்பட வேண்டும். அவர்களது அன்றாட தேவைகளை சந்திப்பது மட்டுமல்லாது, அவர்களுக்கு பரிசுகளை வாங்கிக்கொடுக்க வேண்டும். அப்படி செய்யும்போது அது நம்முடைய அன்பையும் பரிவையும் எடுத்துக் காட்டி அவர்களது மனமார்ந்த ஆசீர்வாதத்தை நமக்குப் பெற்றுத் தருகிறதாய் அமையும்.

## 2. 11. பெற்றோரின் நல் வார்த்தைகளால் ஆசீர்வதிக்கப்படுதல்

சிறியவன் பெரியவனாலே ஆசீர்வதிக்கப்படுவான், அதற்குச் சந்தேகமில்லை.

எபிரெயர் 7:7

உலகிலே நடைபெறும் நன்மையும் தீமையும் நல்ல அல்லது தீமையான வார்த்தைகளைப் பேசினதின் விளைவாக வருபவையாகவே இருக்கின்றன. எல்லா நன்மைக்கும் ஊற்றாகிய நம்முடைய தேவன் நமக்கு நன்மையை செய்ய பல வழிகளை வைத்திருக்கிறார். நமக்கு நன்மையை கொண்டுவர தேவன் வைத்திருக்கும் வழிகளில் ஒன்று, நம்முடைய பெற்றோர் நமக்காகப் பரிந்து செய்யும் மன்றாட்டு ஜெபமாகும். எனவே நம்முடைய பெற்றோர் ஜெபத்திலே உதிர்க்கும் நல்ல வார்த்தைகளாக இருந்தாலும் சரி, கோபத்தினால் பேசும் சாப வார்த்தைகளாக இருந்தாலும் சரி, அந்தந்த வார்த்தைகள் நம்மை அந்தந்த வகையில் நிச்சயம் பாதிக்கிறதாய் இருக்கின்றன.

இப்படி பெற்றோர் வாயிருந்து புறப்படுகிற நல்ல ஆசீர்வாத வார்த்தைகளுக்கும் கெட்ட சாப வார்த்தைகளுக்கும் நம்முடைய வாழ்க்கையில் பாதிப்பு ஏற்படுத்தும் தன்மை இருப்பதால், அவர்கள் வாயிருந்து புறப்படுகிறது எத்தகைய வார்த்தை என்பதைக் குறித்து நாம் கவனம் கொள்ளுகிறவர்களாக இருக்கவேண்டும். நம்மை சபிக்கவோ ஆசீர்வதிக்கவோ அவர்கள் அதிகாரம் பெற்றவர்களாக இருப்பதால் நாம் இதிலே ஜாக்கிறதையுள்ளவர்களாக இருக்கவேண்டும். தேவன் அவர்களுக்கு இந்த அதிகாரத்தைக் கொடுத்திருக்கிறார் என்பதை மனதில் கொண்டவர்களாக எப்படியாவது அவர்கள் வாயிருந்து நம்மைக் குறித்து நல்வார்த்தைகள் புறப்படத்தக்கதாக நாம் நடந்துகொள்ள வேண்டும்.

ஒருவேளை பெற்றோருக்கு நல்ல கிரியைகளை செய்ததன் விளைவாக ஆசீர்வாதங்களை பெற்று அனுபவிக்கிற வர்களாக இருப்போமானால், அந்த ஆசீர்வாதத்தின் வரவு தடைபட்டுவிடாதபடிக்கு எத்தனை வேலை பழு இருந்தாலும் இதுவரை செய்துவந்த நல்ல கிரியைகளைத் தொடர்ந்து அவர்களுக்கு செய்கிறவர்களாய் இருக்கவேண்டும். பெற்றோருடைய ஆசீர்வாதமான வார்த்தைகள் பொன்னையும் வெள்ளியையும்விட அருமையானவையாக இருப்பதால், அவர்களுடன் நல்ல உறவை வைத்துக்கொண்டு, அவர்களுக்கு பரிசுகளைக் கொடுத்து அவர்களை தொடர்ந்து மகிழ்விக்க வேண்டும். பெற்றோருடைய ஆசீர்வாதத்தை அதிலும் குறிப்பாக அவர்கள் முதிர்வயதாக இருக்கும் போது பெற்றுக்கொள்ள நாம் அதிக முயற்சி எடுக்கவேண்டும்.

ஏசா தன் தகப்பனை நோக்கி: என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதம் மாத்திரமா உம்மிடத்தில் உண்டு? என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்று சொல்லி, ஏசா சத்தமிட்டு அழுதான்.

*ஆதியாகமம் 27:38*

வாழ்கையிலே ஆசீர்வாத வார்த்தையினுடைய முக்கியத்துவத்தை அறிந்தவர்கள் அதனை வாஞ்சித்துத் தேடுவார்கள் என்பதை ஏசாவினுடைய செய்கையிருந்து அறிந்துகொள்ளுகிறோம். ஆசீர்வாத வார்த்தைக்காக அதிக பிரயாசப்பட்ட பின்பு அவ்வார்த்தைகளுக்காக ஏசா ஆவலோடே காத்திருக்கிறான். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக அதே ஆசீர்வாதத்திற்காக முயற்சி மேற்கொண்ட யாக்கோபு அந்த ஆசீர்வாத வார்த்தைகளை அடைந்துவிட்டான். ஆசீர்வாதங்கள் யாக்கோபுக்குப் போய்விட்டன என்பதை ஏசா அறிந்தவுடன் வருத்தப்படுகிறான். காரணம் தகப்பனின் ஆசீர்வாதம் இல்லாமல் தன்னுடைய வாழ்க்கை நன்றாக இருக்காது என்பதை ஏசா நன்கு அறிந்திருந்தான். அதினிமித்தம் அவன் சத்தமிட்டு அழுதான் என்று வேதம் கூறுகிறது.

பெற்றோர் சொல்லும் ஆசீர்வாத வார்த்தைகள் நம்முடைய வாழ்க்கையில் நன்மைகளைக் கொண்டு வரும் என்பதை நாம் உணர்ந்தோமானால், அந்த ஆசீர்வாதங்களுக்காக அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ளுவோம்.

பெற்றோருடைய ஆசீர்வாதத்தின் முக்கியத்துவத்தை அறிந்துகொண்ட நாள் முதல் நான் என் பெற்றோரை அடிக்கடி பரிசுகளுடன் போய் சந்திப்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளேன். அவர்கள் தங்கள் மனதுக்குள்ளேயே என்னை ஆசீர்வதிப்பதைவிட அவர்கள் வாய் திறந்து என்னை ஆசீர்வதிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுவேன். அவர்களோடுள்ள உறவுக்கு நான் முக்கியத்துவம் கொடுப்பது அவர்களை என்னை அதிகமாக ஆசீர்வதிக்கச் செய்கிறதாக இருக்கிறது.

பிற கலாச்சாரங்களில் உள்ளது போலவே எத்தியோப்பியாவிலும் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைக் குறித்து தீமையான காரியங்களை பழக்க தோஷத்தினிமித்தமாக சொல்லுவதுண்டு. தந்தையும் தாயும் சாப வார்த்தைகளை உதிர்க்கும் சூழல்தான் பெரும்பாலானவர்கள் வளர்ந்து வந்தோம். பிள்ளைகளைக் பார்த்து தீய வார்த்தைகளைச் சொல்லுவதால் விளையும் பலனை எடுத்துக் காட்டி இந்த வழக்கத்தை நாம் மாற்ற முடியும். இந்த தீய வார்த்தைகளை சரியான உரையாடல்களுடனும் நல் வார்த்தைகளின ாலும் அகற்றிவிட முடியும். எடுத்துக் காட்டாக, “நீ சீக்கிரமாக செத்துப்போவாய்” என்று சொல்லுகிற பெற்றோரை, “நீ நீண்ட நாள் வாழ்வாயாக” என்று சொல்ல பழக்கவேண்டும். இப்படியே தங்கள் வாழ்நாளெல்லாம் பேச அவர்கள் கற்றுக்கொள்ளவேண்டும். அவர்களுக்கு பிரியமாக நடந்துகொள்ளுவதன் மூலமாக நமக்கு வேண்டிய நற்காரியங்களை நாம் பெற்றுக்கொள்ள முடியும். தீய சொற்களை எப்போதுமே தவிர்க்க வேண்டும். அவர்கள் தவறி போய் தீய வார்த்தைகளைச் சொன்னாலும் நல்ல வார்த்தைகளையே சொல்லும்மாறு நாம் அவர்களை ஞாபகப்படுத்த வேண்டும்.

தன் தந்தையிடமிருந்து ஆசீர்வாதங்களை பெற்றுக்கொண்டு போன யாக்கோபை வாழ்வில் மேன்மை அடைந்தான். அவனுடைய மாமனாகிய லாபான் அவனுடைய சம்பளத்தைப் பத்துமுறை மாற்றினா லும் அவன் இரு பரிவாரங்களுடையவனாக திரும்புவதை யாராலும் தடுக்க முடியவில்லை.

இதனால்தான் பெற்றோர்கள் தேவனுடைய வார்த்தைகளுக்கு எற்ப ஆசீர்வாதங்களை கொடுக்க வேண்டும். தேவன் நம்முடைய வாழ்வில் உயர்ந்தவர். ஆதலால் நம்முடைய பெற்றோர்கள் நல்ல ஆசீர்வாத வார்த்தைகளை சொல்லும்படி ஊக்குவிக்கப்பட வேண்டும். நம்முடைய வாழ்விலும் நம் பின்னடியாரின் வாழ்விலும் நம்முடைய பெற்றோரின் ஆசீர்வாதங்களுக்குக் காரணராக இருக்கப் போகிற கர்த்தர்மேல் நாம் விசுவாசம் வைக்கவேண்டும்.

# அத்தியாயம் மூன்று

## பெற்றோரை அவமதிப்பதாலும் கனவீனம் பண்ணுதனாலும் வரும் பலன்கள்

"However, if you do not **obey** the Lord your God **and** do not **carefully follow all his commands** and decrees I am giving you today, all these curses will come on you and overtake you." Deuteronomy 28:15a NIV




இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளை களின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்

*உபாகமம் 28:15*

## அத்தியாயம் 3

# பெற்றோரை அவமதிப்பதாலும் கனவீம் பண்ணுதலினாலும் வரும் பலன்கள்

### 3. 1. சாபங்கள்

'சாபம்' என்கிற வார்த்தை நமக்குப் பிடிக்காததும் நாம் கேட்க விரும்பாததுமான வார்த்தை. அப்படியிருந்தும் பழைய ஏற்பாட்டின்படி சாபமானது தலைமுலை தலைமுறையாக வருகிற ஒன்றாக இருக்கிறது என்று சிலர் கருதுகின்றனர். அந்த பழைய ஏற்பாட்டு தத்துவம் தற்காலத்திற்கான ஒன்றல்ல என்பது உண்மையாக இருந்தும் இந்த கருத்து நம்மத்தியில் நிலவுகிறது.

அதுமட்டுமல்லாது சாபம் என்பது ஆசீர்வாதத்திற்கும் வெற்றியுள்ள வாழ்க்கைக்கும் எதிர்மறையான ஒன்று என்றும் கருதப்படுகிறது. நம்முடைய வாழ்வில் நாம் வெற்றி அடைய கூடாமல் தவிப்பவர் களாய் இருப்போமானால், அது நாம் ஏதோ ஒரு சாபத்திற்கு உட்பட்டுவிட்டோம் என்கிற என்கிற முடிவுக்கு வந்துவிடுகிறோம்.

> அடைக்கலான் குருவி அலைந்துபோவதுபோலும், தகைவிலான் குருவிபறந்துபோவதுபோலும், காரணமில்லாம லிட்ட சாபம் தங்காது.
>
> *நீதிமொழிகள் 26:2*

யாரோ நம்மீது எதிர்மறையான வார்த்தைகளை சொல்விட்டால், அந்த சாபங்கள் எல்லாம் நம் மேல் பலிதத்துவிடாது என்பதை இந்த வசனத்திருந்து அறிகிறோம். கீழ்படியாமை என்னும் பாவத் தின் விளைவால் ஏற்படும் சாபமே நம்மை பாதிக்கக்கூடிய உண்மையான சாபமாகும். கீழ்படியாமையினாலும் தேவன் கனப்படுத்த சொன்ன வர்களை கனப்படுத்த தவறுவதினாலும் இந்த சாபம் நம்மீது வருகிறது.

கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்.

*ஆதியாகமம் 9:25*

தகப்பனைக் கனவீனப்படுத்துவதன் விளைவாக சாபம் வருகிறது என்பதை மேற்கண்ட வசனம் காட்டுகிறது. கானானின் தகப்பாகிய காம் தன் தகப்பனின் நிர்வானத்தைப் பார்த்தபோது அதை மூடிவிடுவதற்கு பதிலாக அதை தன் சகோதரருக்கு அறிவித்தான். நோவா விழித்துக்கொண்டபோது தன் இளைய குமாரன் தனக்கு செய்தததை அறிந்தபோது அவனை சபித்தான். இது காம் மரிக்கும் பரியந்தம் அவனுடைய வாழ்வில் தடைக்கலாக ஆகிப்போனது. அதுபோலவே நாமும் நம்முடைய பெற்றோரை கனம் பண்ணாமல் போகும் பட்சத்தில் நம்முடைய வாழ்வில் தோல்விகளை சேர்க்கிற வர்களாக ஆகிவிடுவோம்.

நன்றாக படித்திருந்தும், கடின உழைப்பை கொடுத்தும் முன்னேறாதிருக்கிற அநேகருடைய வாழ்வு இதற்கு உதாரணமாக இருக்கிறது. இவர்கள் தங்களுக்குச் சேர்த்துக்கொண்ட சாபங்களில் சிக்கிக் கொண்டு அதிருந்து மீளுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு தோற்றுப்போகிறவர்களாக இருக்கிறார்கள்.

வாழ்க்கையிலே சவால்களை சந்தித்த அநேகருக்கு, போதகராகவும் தேவ ஊழியனாகவும் ஜெபிக்கும் வாய்ப்பு எனக்கு அதிகம் கிடைப்பதுண்டு. அவர்களில் பெரும்பாலான வர்கள் தங்கள் இருதய வாஞ்சை நிறைவேற முடியாமல் போன தைக் குறித்து கசந்துகொள்ளுவார்கள். "நான் கடின முயற்சி மேற்கொண்டு பணத்தை சம்பாதித்தும் ஏதாவது ஒரு இழப்பு

ஏற்படுவதால் கடைசியில் கையில் மிஞ்சுவது ஒன்றுமில்லை என்கிற நிலை ஏற்படுகிறது." என்று புலம்புவார்கள். இவைகள் எல்லாமே பெற்றோருக்குக் கீழ்படியாததினால் வந்த வினைகள்தான் என்று ஒட்டுமொத்தமாக சொல்விட முடியாது என்றாலும், இவைகளில் அநேகம் அந்த வகையை சேர்ந்ததாகவே இருக்கிறது என்பதையும் மறுக்க முடியாது.

இன்று நான் உனக்கு விதிக்கிற உன் தேவனாகிய கர்த்தருடைய எல்லாக் கற்பனைகளின்படியும் கட்டளைகளின்படியும் நடக்கக் கவனமாயிருக்கிறதற்கு, அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும்

*உபாகமம் 28:15*

ஏற்கனவே சொன்னதுபோல, பெற்றோரை நிபந்தனையின்றி கனம்பண்ணுவது தேவனுடைய கற்பனைகளில் ஒன்றாக இருக்கிறது. இந்த கற்பனையை நாம் மீறும்போதெல்லாம் தேவன் நம்மை சபிப்பதில்லை. மாறாக அவர்களை கனவீனம் பண்ணுவதால் ஏற்படும் விளைவுக்குள்ளாக நாம் நாளடை வில் சிக்கிக்கொள்ளுகிறோம்.

நம்மேல் கோபம் கொள்ளும்போதும் வெறுப்படையும்போதும் பெற்றோர் உச்சரிக்கும் கோப வார்த் தைகளுக்கு நம்முடைய வாழ்க்கையில் பலன் உண்டு. மற்றவர்கள் நமக்கெதிராக கூறக்கூடிய கசப்பான வார்த்தைகளைவிட இவர்களின் வார்த்தைகளுக்கு பாதிப்பு அதிகம். காரணம், தேவனால் ஏற்படுத்தப்பட்டவர்கள் கூறும் வார்த்தைகளுக்கு மட்டுமே பலன் உண்டு. பெற்றோரை அவமதித்தும் கனவீனம் பண்ணியும் ஜீவித்தோருடைய

வாழ்க்கைகள் நாசமடைந்து கிடப்பது இந்த உண்மைக்கு சான்ற ாகும். பெற்றோரைக் கனவீனம்பண்ணுதல் தடைகள், கருச்சிதைவு வீழ்ச்சி மற்றும் தோல்வி போன்ற சாபங்களுக்கு வழிவகுக்கும்.

## *3. 2. அது கீழ் தரமான அடிமையாக ஆக்கும்*

> கானான் சபிக்கப்பட்டவன், தன் சகோதரரிடத்தில் அடிமைகளுக்கு அடிமையாயிருப்பான் என்றான்.
>
> *ஆதியாகமம் 9:25*

அடிமையாக இருப்பது என்பது ஆழுகை செய்யப்படுவது அல்லது மற்றவர்களுக்குக் கீழ் இருப்பது என்பதாகும். மேற்கண்ட வசனத்திருந்து கானானின் தகப்பனாகிய காம் இந்த பெரிய குடும்மபத்தில் உள்ள தன்னுடைய உரிமை அனைத்தையும் இழந்து விட்டான் என்று அறிகிறோம். தன்னுடைய மற்ற சகோதரரால் அடிமைப்படுத்தப்படும்படி மாற்ற முடியாத சாபத்தை நோவா தன் மகனுக்குக் கொடுத்து விட்டான். இப்படி ஒரு சாபத்தை நோவா தன் மகனுக்குத் தருவானேன் என்று அறிந்துகொள்ள வேண்டுமான ால், இந்த பகுதிக்கு வேத விரிவுரையாளர் ஒருவர் தரும் பின் வரும் விளக்கத்தை நாம் படிக்க வேண்டும்:

அக்காலத்து நாகரீகத்தில் தகப்பனுடைய நிர்வாண சரீரத்தை காணுவது குடும்ப ஒழுக்கத்திற்கு மாறானது. அந்த காரியத்தின ால் குடும்பத்தின் பரிசுத்தம் குலைந்துபோய், தகப்பன் பெலன் இல்லாதவராக ஆகி, பரியாசத்திற்குரிய நபராக ஆகிவிடுகிறார். காம் தற்செயலாகதான் தகப்பனுடைய நிர்வாணத்தைப் பார்த்தான். ஆனால் அவன் வெளியேபோய் ஏதோ தன் தகப்பனை தான்

மேற்கொண்டாகிவிட்டதுபோல அதைத் தன்னுடைய மற்ற இரண்டு சகோதரருக்கு அறிவித்தான்.

பழங்கால நாகரீகத்தில் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணுவது என்பது குடும்ப பாரம்பரியத்தை உடைக்கும் செயலாகும். அது குடும்ப பெருமைக்கு இழுக்கு உண்டாக்கி தகப்பனை பெலவீனப் படுத்தி மதிப்பை இழக்கச் செய்கிறது.

காம் தற்செயலாகதான் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைப் பார்த்தான். அவன் வேண்டும் என்றே அப்படிச் செய்யவில்லை. குடும்ப பாரம்பரியத்தை மீறினதாக இருக்கும் காமினுடைய செயல் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டது அல்ல, அதை மற்றவர்களுக்கு போய் அறிவித்தது ஆகும். காமின் மூலமாய் தகப்பனுடைய நிலையைப் பற்றி கேள்விப்பட்ட அவனுடைய சகோதரர்கள் அந்த காட்சியைக் காணத் துணியவுமில்லை, அதை போய் மற்றவர்களுக்கு காமைப்போலச் சொல்லவுமில்லை. மாற ாக அவர்கள் தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்.

அப்பொழுது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள்மேலும் போட்டுக் கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை.

*ஆதியாகமம் 9:23*

நோவா தெளிவடைந்தபோது தன்னை அவமானப்படுத்திய காமின் செயலுக்காக அவனை சபித்தான். தன் தகப்பனை அவமானப்படுத்தினபடியால் காம் குமாரன் என்கிற ஸ்தானத்தை

இழந்து இலச்சைய டைந்தான். ஆளும் உரிமையை சுதந்தரித்திருக்க வேண்டிய காம், வேலைக்காரருக்கு வேலைக்காரனான்.

ஒருவனும் தனக்கு நெருங்கின இனமாகிய ஒருத்தியை நிர்வாணமாக்கும்படி அவளைச் சேரலாகாது; நான் கர்த்தர்.
*லேவியராகமம் 18:6*

தாய் தகப்பன்மாருக்கு ஏமாற்றத்தை கொடுப்பவராகவும் அவர்களைக் கனவீனம்பண்ணுகிறவர்களாகவும் இருத்தல் சமுதாயத்திலே இகழ்ச்சியைக் கொண்டுவருகிற காரியமாக இருக்கிறது. தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரமாகிய பெற்றோருக்கு அடங்க நாம் மறுக்கும்போது அது நம்மை நாம் வேலை செய்யும் இடத்திலும் நாம் வாழும் பகுதியிலும் நம்மை தரம் குறைந்தவர்களாக ஆக்கி விடுகிறது. தேவன் பெற்றோர்மேல் வைத்திருக்கும் அதிகாரத்திற்கு இணங்க மறுக்கும்போது இந்த சம்பவத்தில் நாம் பார்ப்பதுபோல நாம் நம்முடைய தகுதியைகூட இழக்க நேரிடும்.

நல்ல தகுதியும் உயர்ந்த கல்வியும் கொண்டவர்கள் தங்களைவிட தகுதியிலும் கல்வியிலும் குறைவாக இருக்கும் மற்றவர்களுக்குக் கீழ் வேலைப்பார்க்கும் ஏராளமான உதாரணங்களை நாம் காண முடியும். அதிலும் குறைந்த தகுதியும் கல்வியும் கொண்ட அந்த மேல்அதிகாரிகள் இவர்கள் கொடுக்கும் ஆலோசனைகளை சரியல்ல என்று ஒதுக்குவது இன்னும் கொடுமையாக இருக்கும். அப்படிப்பட்ட சூழலில் நாம் வர நேர்ந்தால், நாம் நம்முடைய பெற்றோருடனான நம்முடைய உறவை நாம் சீர் தூக்கிப்

பார்க்கவேண்டும். உடனடியாக நாம் பெற்றோரின் அதிகாரத்திற்கு நம்மைநாமே கீழ்படுத்திட ஒப்புக்கொடுக்கவேண்டும். பெற்றோருடனான உறவு நம்முடைய அநுதின வாழ்வின் காரியங்களை பாதிக்கிறது என்பதில் ஐயமே இல்லை.

தன்னைத்தானே குறைவாக மதிப்பிட்டுக்கொள்ளும் தன்மையால் மற்றவர்களின் அதிகாரத்தின்கீழ் போகும் மனப்பான்மையும்கூட இந்த சாபத்தின் விளைவால் இருக்கக்கூடும். இதற்காக எல்லா பதவி இறக்கங்களும் எல்லா பதவி உயர்வுகளும் பெற்றோருடனான உறவின் தன்மையை பொறுத்தே இருக்கிறது என்று எடுத்துக்கொள்ளக்கூடாது. நாம் சொல்ல வருவது என்னவென்றால் வாழ்க்கையின் வெற்றிகள் பெற்றோரைக் கனப்படுத்தத் சாபத்தினால் பாதிக்கப்படக்கூடும் என்பதுதான். அந்த சாபங்களுக்கு மன்னிப்பு என்னும் பரிகாரம் செய்யப்படவில்லை என்றால், உங்களுடைய சாதனைகளை மேல்அதிகாரிகள் அசட்டைபண்ணும் செயல் தொடர்ந்து அதனால் உங்களுடைய வாழ்வின் எதிர்காலம் மங்கிவிட முடியும்.

பெற்றோரை மதிக்காததினால் விளையும் எதிர்மறையான வினைகள் வாழ்க்கையில் நிரந்தரமான பாதிப்பை ஏற்படுத்தக்கூடும். நம்முடைய சமூக வாழ்வில் அவைகள் நெருக்கத்தையும் பொருளாதார வாழ்வில் இழப்பையும் குடும்ப வாழ்வில் சிக்கல்களையும் ஏற்படுத்தக்கூடும். எனவே நம்முடைய பெற்றோரை பிரியப்படுத்துவதற்காக மட்டும் அல்ல, நம்முடைய சொந்த நலனுக்காகவும் நாம் பெற்றோருடனான உறவில் சீராக இருக்கவேண்டும்.

## 3. 3. நம்முடைய வாழ்நாளை அது குறுகப்பண்ணும்

நாம் எல்லாருமே நீடித்து வாழ வேண்டுமென்றும் வளமையுடன் வாழ வேண்டுமென்றுமே விரும்புகிறோம். அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட வேண்டுமென்றோ சீக்கிரத்தில் மரணமடைய வேண்டுமென் றோநல்ல மன நிலையிருக்கும் யாரும் விரும்புவதில்லை. பணக்காரராக இருப்போரும்கூட இளமையில் மரிக்க விரும்புவதில்லை.

இன்றைய உலகிலே விபத்துக்கள், வியாதிகள் மற்றும் தற்கொலைகள் போன்றவற்றால் அநேக இளம் வயதினர் மரித்து போகிறதை நாம் காண்கிறோம். மரித்து போகிறவர்களை நாம் காணும்போது, அவர்களுடைய காலம் நிறைவேறிவிட்டது என்றோ தேவன் அவர்களுக்கு இப்படி நிர்ணயித்திருக்கிற ார் என்றோ நாம் சொல்விடுகிறோம். ஆனால் இவ்விதமான சாவுகளுக்கு மன்னிப்பினால் பரிகாரம் தேடப்படாத பெற்றோரின் சாபங்கள் காரணமாயிருப்பதை நாம் காண தவறுகிறோம்.

தேவனால் ஏற்படுத்தப்பட்ட தேவ ஊழியரின் ஊழிய காலம் குறுகிவிடுவது மற்றோரு துக்ககரமான விஷயமாகும். தேவனால் குறிப்பிட்ட ஊழியத்தை நிறைவேற்ற ஏற்படுத்தப்பட்டவர்கள் சில காலத்திலேயே அந்த ஊழியத்தைவிட்டு வெளியேறிவிடுகிறார்கள். இதனால் நெடுநாள் ஊழியம் செய்யும்படி தேவன் யாரையும் ஏற்படுத்தவில்லையோ என்கிற எண்ணம் நமக்கு ஏற்படுகிறது. இப்படி நீடிக்காமல்போன தேவ மனிதர்களின் வாழ்க்கைக்கோ ஊழியத்திற்கோ நாம் அநேக காரணங்களை சொல்லுகிறோம்.

தேவனுடைய நேரடியாக இடைபாட்டின் வினைவாகவே இந்த துக்ககரமான காரியம் நிகழ்ந்தன என்பதை நாம் உணராமல் போகிறோம். இவைகள் நடக்கும்போதெல்லாம் நாம் எல்லாம் வழக்கம் போல நடக்கின்றன என்று சொல் அவைகளுக்கு அநேக காரணங்களை சொல்விடுகிறோம்.

காரணங்கள் என்னவென்று பார்த்து அவைகளுக்கான வேதாகமம் சார்ந்த விளக்கங்களைக் காண நாம் முற்படுவதில்லை. தேவனுக்கு அர்ப்பணித்தோரின் வாழ்விலும் பகுதிநேர ஊழியம் செய்வோருக்கும் ஏன் இப்படிபட்ட காரியங்கள் நிகழுகிறது என்று நாம் கண்டு ஆராய்வதில்லை. நீடித்த நாட்களால் ஆசீர்வதிக்கப்பட்டிருக்க வேண்டிய அவர்களில் வாழ்வு ஏன் சொற்ப ஆயுசில் முடிவடைகிறது? நீடித்த நாட்கள் வாழ்ந்து வாழ்க்கையை அனுபவித்திருக்க வேண்டியவர்கள் ஏன் காலத்துக்கு முன்னரேயே மரித்துப்போனார்கள்? நம்முடைய யோசனை யை நாம் சற்றுநிறுத்தி, ஏன் இது மாதிரியான காரியங்கள் நடைபெறுகின்றன என்று யோசிக்கவேண்டும். அதற்கான பதில் நித்தியராகிய தேவனுடைய வார்த்தையில் இருக்கிறது என்று நான் நம்புகிறேன். எச்சரித்துக்கொண்டே இருக்கும் தேவனுடைய வைகளை நாம் மீறிக்கொண்டே இருந்தால், நம்முடைய வாழ்க்கை நிச்சயம் குறுகிப்போகும். அதேபோல நாம் அவைகளுக்குக் கீழ்படிந்தால், அதற்கான ஆசீர்வாங்கள் நம்மை குறையில்லாமல் வந்தடையும்

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

*யாத்திராகமம் 20:12*

உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும்

*எபேசியர் 6:2*

தேவனாகிய கர்த்தர் மனிதனை சிருஷ்டித்து அவருடைய இந்த பூமியிலே குறிப்பிட்ட வாழ்நாள் காலம் வாழும்படி வைத்திருக்கிறார். அந்த குறிக்கப்பட்ட வாழ்நாள் காலத்தை முழுமையாக பூமியிலே வாழ்ந்து முடிக்க கடைபிடிக்கப்பட வேண்டிய நீதிகளையும் கொடுத்திருக்கிறார். தேவன் அப்படி வைத்திருக்கிறபடியால், அந்த நீதிகளைக் கைக்கொள்ளாமல் போகும்போது, வாழ்நாள் குறைவுபட்டுதான் போகும். இது தேவன் நிர்ணயம் பண்ணின நியதி.

சொல்லப்பட்ட இந்த காரியத்தின் வெளிச்சத்திலே நம்முடைய நிலை என்னவாக இருக்கிறது என்பதை நாம் நிதானித்துப் பார்க்கவேண்டும். நீடித்த நாள் வாழுவதற்கு தேவன் நிர்ணயித்த நியதியின்படி பெற்றோரைக் கனம்பண்ணும் விஷயத்தில் நாம் எந்த அளவுக்கு தகுதி அடைந்திருக்கிறோம் என்று பார்க்கவேண்டும். அப்படி குறைவுபடுகிறவர்களாய் இருக்கிறோம் என்று நாம் கண்டால் உடனேயே அந்த உறவை சீர்செய்து வாழ்நாள் குறுகிப்போவதை தடுத்திட வேண்டும்.

இப்படி இருக்கும்போது, தங்கள் பெற்றோரை சரிவர மதிக்காதவர்களுக்கு நீண்ட ஆயுசும் வளமான வாழ்க்கையும் அமைவது ஏன் என்கிற கேள்வி எழும்பலாம். பெற்றோரைமதிக்காது இருக்கும் சிலருடைய வாழ்க்கை அப்படி வளமாய் இருப்பது உண்மைதான். ஆனால் மிஞ்சின துஷ்டத்தனம் வாழ்நாளை குறுகிட செய்யும் என்றும் வேதம் கூறுகிறது.

மிஞ்சின துஷ்டனாயிராதே, அதிக பேதையுமாயிராதே; உன் காலத்துக்குமுன்னே நீ ஏன் சாக வேண்டும்?

*பிரசங்கி 7:17*

கொடிய பலவந்தனான ஒரு துன்மார்க்கனைக் கண்டேன்; அவன் தனக்கேற்ற நிலத்தில் முளைத்திருக்கிற பச்சைமரத்தைப்போல் தழைத்தவனாயிருந்தான். ஆனாலும் அவன் ஒழிந்து போனான்; பாருங்கள், அவன் இல்லை; அவனைத் தேடினேன், அவன் காணப்படவில்லை.

*சங்கீதம் 37:35,36*

## *3. 4. தீய தாக்குதல்களை அது வரப்பண்ணும்*

*நம்மேல் தீய தாக்குதல் ஏதும் வரவேண்டும் என்று நாம் யாரும் விரும்புவது இல்லை. மாறாக வாழ்நாளின் இறுதிவரை நமக்கு நல்ல காரியங்கள் வராதா என்றே நாம் காத்திருக்கிறோம். அதனால் தீய தாக்குதல்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்களை நாம் தவிர்க்கிறோம். அப்படி இருக்கும்போது, நாம் நல்லதை எதிர்பார்த்து காத்திருக்கும்போது, நாம் எதிர்பாராத தீமையான காரியம் நமக்கு வந்து நேரிட்டு சில சமயங்களில் நம் வாழ்வின் அஸ்திபாரத்தையே அசைக்கிறனவாக ஆகி விடுகின்றன. அந்தத் தீய தாக்குதல்கள் எங்கிருந்து வருகின்றன என்பதை காட்டுவது இந்த புத்தகத்தின் நோக்க மாகும். தீய தாக்குதல்கள் புறப்படும் இடங்களில் ஒன்று நாம் பெற்றோருடன் கொண்டிருக்கும் உறவின் நிலையாகும். இருந்தாலும் இந்த தாக்குதல் ஏற்படாதபடிக்கு*

நாம் பெற்றோருடனான உறவை சரிசெய்து அதைத் தடுத்திடும் வாய்ப்பு நமக்கு உள்ளது.

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயிருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனை யும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.

*உபாகமம் 5:16*

உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.

*எபேசியர் 6:3*

இவ்வசனங்களில் சொன்னபடி பெற்றோரைக் கனம்பண்ணுகிற வர்களாக நாம் இருந்தால் நமக்கு நம்பிக்கை இருக்கிறது. உங்களுக்கு வேண்டுமென்றால் நீங்கள் வளமான நீடித்த வாழ்வை வாழ கூடும். அதற்கு பெற்றோரைக் கனம் பண்ணவேண்டும் என்கிற நிபந்தனை யை நீங்கள் நிறைவேற்றியாக வேண்டும். மற்றபடி சாபம் உங்களைத் தொடர்ந்து பிடித்து உங்கள் வாழ்வைக் கெடுத்துபோட்டு விடும். கீழ்படிதலுக்கான பலனாக நல்ல வாழ்வைக் காணுதல் என்பதில் பெற்றோரைக் கனம் பண்ணுதல் ஒரு நிபந்தனையாக இருக்கிறது. கீழ்படியாமையோ நமக்கு பின் விளைவாக பாதிப்பை ஏற்படும் தீதான காரியமாக இருக்கிறது. தீமை நமக்கே திரும்ப வரும். நன்மையோ தீமையோ அந்த பலனை நாமே அனுபவிப்போம்.

தேவனிடத்திருந்து இந்த கற்பனையை பெற்றுக்கொண்ட

இஸ்ரவேலர் இன்றுவரை அதை ஜாக்கிர தையாகக் கைக்கொள்ளுகிற வர்களாக இருந்து தகப்பனையும் தாயையும் கனம்பண்ணி வருகிறார்கள். அந்த கற்பனையை வரையறுத்த தேவனானவர் இஸ்ரவேலர் செய்துவருவது போலவே நாமும் ஜாக்கிறதையுடன் அந்த கற்பனையைக் கைக்கொள்ள வேண்டும் என்று விரும்புகிற ார். அப்படி செய்தால் நம்முடைய வாழ்நாளை நீடித்து தருவதாக வாக்கு பண்ணுகிறார். இந்த கற்பனைக்குக் கீழ்படிந்து பெற்றே ாரைக் கனம்பண்ணுவதை விட்டு நமக்கு வேறே வழியே இல்லை.

ஏற்கனவே சொன்னதுபோல, உங்களில் சிலர், மரித்துபோன எங்கள் பெற்றோரை நாங்கள் எப்படி கனம்பண்ணுவது? என்று கேட்கக் கூடும். மரித்துபோன நம்முடைய பெற்றோருக்கு விரோமமாக நாம் செய்த தப்பிதங்களுக்காக நாம் தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்க வேண்டும். பெற்றோர்கள் இன்று உயிரோடு இல்லை என்கிற சாக்கினால் நாம் கடந்த காலத்தில் செய்த தப்பிதங்களிருந்து தப்பித்துக்கொள்ள முடியாது. நமக்கு பிரச்சனையில்லை என்று நினைத்துக்கொள்ளக்கூடாது. தீமை வராதபடிக்குக் கதவை அடைப்பதற்கு ஒரே வழி வேத வார்த்தைக்கு ஏற்ப தேவனுக்கு முன்பாக சரியானதை நடப்பிப்பது தான்.

தீமை வேகமாக பரவி வரும் இந்த கால சூழ்நிலையில், பெற்றோரைக் கனம்பண்ணுவதால் நன்மைக்கு ஏதுவான மாற்றத்தை சமுதாயத்தில் ஏற்படுத்த தேவ நடத்துதலை நாட வேண்டும். நாம் இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்டிருக்கிறோம் என்பதால் நமக்கு ஒரு தீங்கும் நேரிடாது என்று நாம் மெத்தனமாக இருக்கக்கூடாது. கர்த்தராகிய இயேசுவினால் இரட்சிக்கப்பட்டிருப்பதைக் குறித்து நாம் மகிழ்ச்சியடையவேண்டியதுதான் என்ற ாலும் நம்முடைய மீறுதல்களுக்காக நாம் மனந்திரும்புகிற வர்களாக இருக்க வேண்டும். அது மட்டுமல்லாமல்,

தங்களை பாதிக்கும் காரியம் என்னது என்றே அறிந்திராத இந்த தலை முறையினருக்காக தொடர்ந்து போராடுகிறவர்களாக இருக்கவேண்டும்.

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் நீதியினாலும் நம்முடைய விசுவாசத்தினாலுமே நாம் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம், பிராமணத்தைக் கைக்கொள்ளுதல் நமக்கு இரட்சிப்பை கொடுக்காது என்று நாம் சொல்லலாம். இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தின் நீதியைக் குறித்து போதிப்பது இந்த புத்தகத்தின் நோக்மாயிராததால், நான் அதைக் குறித்து அதிகம் பேச விரும்பவில்லை. அதற்கு மாற ாக இரட்சிக்கப்பட்டிருக்கிற ஒருவன் செய்ய வேண்டிய நீதியின் கிரியைகளைக்குறித்து பேச விரும்புகிறேன். பூமியிலே வாழ்நாள் நீடித்திருப்பதற்கு தகப்பனையும் தாயையும் கனப்படுத்தவேண்டும் என்று தேவன் சொல்யிருக்கிறார். எனவே இது எதிர்த்து கேள்வி கேட்பதோ அல்லது அதை விட்டுக்கொடுப்பதோ முடியாது. நாம் இந்த சத்தியத்திற்குள் நிலைத்திருக்கிறவர்களாக இருந்து, தேவ கற்பனைகளை கைக்கொள்ளுவதற்கேற்ற பெலனையும் திடனை யும் அவர் நமக்குத் தரும்படி ஜெபிக்க வேண்டும்.

நம்முடைய வாழ்வில் தொடர்ச்சியாக தோல்விகளும் எதிர்மறை யான சூழலையும் நாம் சந்திக்க நேர்ந்தால் நாம் சற்று நின்று எங்கே தப்பு நடக்கிறது என்று நிதானிக்க வேண்டும். தோல்விகளை வாழ்கையின் அங்கமாக எடுத்துக்கொண்டு வாழக்கூடாது. நம்முடைய பிரச்சனைகளுக்கான காரணம் என்ன என்று நாம் ஆராய வேண்டும் அது இயற்கையான காரணமாகவும் இருக்கலாம் நம்முடைய பெற்றோருக்கு விரோதமாக நாம் செய்த பாவத்தின் விளைவாகவும் இருக்கலாம். நம்முடைய பெற்றோரை மதிக்காததின ால்தான் இந்த பிரச்சனைகள் நிகழுகின்றன என்பதை நாம் அடையாளம் கண்டுவிட்டால் அதற்கான பரிகாரமாகிய பாவ

மன்னிப்பை நாம் நம் பெற்றோரிடமும் தேவனிடமும் உடனடியாக நாட வேண்டும். அப்படி செய்வதினால் நம்முடைய வாழ்க்கையை நாம் சீர்செய்துவிட முடியும். நம்முடைய வாழ்வில் தொடர்ச்சியாக தோல்விகளும் எதிர்மறையான சூழலையும் நாம் சந்திக்க நேர்ந்தால் நாம் சற்று நின்று எங்கே தப்பு நடக்கிறது என்று நிதானிக்க வேண்டும். தோல்விகளை வாழ்கையின் அங்கமாக எடுத்துக்கொண்டு வாழக்கூடாது. நம்முடைய பிரச்சனைகளுக்கான காரணம் என்ன என்று நாம் ஆராய வேண்டும் அது இயற்கையான காரணமாகவும் இருக்கலாம் நம்முடைய பெற்றோருக்கு விரோதமாக நாம் செய்த பாவத்தின் விளைவாகவும் இருக்கலாம். நம்முடைய பெற்றோரை மதிக்காததினால்தான் இந்த பிரச்சனைகள் நிகழுகின்றன என்பதை நாம் அடையாளம் கண்டுவிட்டால் அதற்கான பரிகாரமாகிய பாவ மன்னிப்பை நாம் நம் பெற்றோரிடமும் தேவனிடமும் உடனடியாக நாட வேண்டும். அப்படி செய்வதினால் நம்முடைய வாழ்க்கையை நாம் சீர்செய்துவிட முடியும்.

தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிறவன் நிச்சயமாய்க் கொலைசெய்யப்படக்கடவன்.

*யாத்திராகமம் 21:17*

தன் தகப்பனையாவது தன் தாயையாவது சபிக்கிற எவனும் கொலைசெய்யப்படக்கடவன்; அவன் தன் தகப்பனையும் தன் தாயையும் சபித்தான், அவன் இரத்தப்பழி அவன்மேல் இருப்பதாக.

*லேவியராகமம் 20:9*

பெற்றோரைக் கனப்படுத்துதல் என்பது கட்டாயமான காரியமாக இருக்கிறது. அது மீறப்படுவது என்பது தேவ பிரமாணத்தை மீறுகிறதாகவும் வாழ்க்கையில் பெரிய பாதிப்பை

ஏற்படுத்தக்கூடிய பின் விளைவுகளைக் கொண்டதாகவும் முடிவிலே மரணத்திற்கும் வழிவகுக்கக்கூடிய காரியமாகவும் இருக்கிறது. தம்முடைய கற்பனைகளை மீறுபவர்களுக்கு தேவன் மரண தண்டனையை நியமித்திருக்கிறார். எல்லாவற்றிற்கும் மேலாக பெற்றோரை அவமதிப்பது தேவனை அவமதிப்பதாக கருதப்படுகிறது. பழைய ஏற்பாட்டின்படி தேவனை அவமதிப்பவன் கல்லெறிந்து கொல்லப்பட்டான். அதுபோல பெற்றோரை அவமதிப்பவன் மரித்துப்போனான். ஆக இரண்டு தண்டனை களுமே மரணத்தைதான் வருவித்தன. புதிய ஏற்பாட்டில் இதுபோன்ற தண்டனைகள் கொடுக்கப்படவில்லை என்பது உண்மைதான். அதே சமயம், பெற்றோரை அவமதிப்பது அல்லது கனப்படுத்த தவறுவதற்கு தண்டனை என்று எதுவும் புதிதாகக் கொடுக்கப்படவுமில்லை. எனவே மத்தேயு 24:35ல் சொல்லப்பட்டபடி பூமியும் வானமும் ஒழிந்துபோனாலும் என் வார்த்தைகளோ ஒழிந்துபோவதில்லை என்பதைக் கொண்டு தேவனுடைய வார்த்தைகள் மாறாதவைகள் என்பதை அறிகிறோம்.

இன்று தகப்பனையும் தாயையும் அவமதிப்பது மலிந்துபோய்விட்டது. உங்கள் பெற்றோரிடம் நீங்கள் கெட்ட வார்த்தை எதையும் முகத்திற்கு நேரே சொன்னதில்லை என்று சொல்லாம். நல்லது! கீழ்படியாமல் போவதும் கனம் பண்ணாமல் போவதும் தவறாக தானே இருக்கிறது? உங்களில் சிலர் பிரச்சனையில்லாத உங்களுடைய வார்க்கையில் திருப்தியாக இருக்கலாம் அது உங்கள் பெற்றோருக்கு விரோதமாக நீங்கள் செய்த குற்றங்களை நீங்கள் மறந்தே போவதற்குக் காரணமாகவும் இருக்கக்கூடும். தற்போதைக்கு உங்களுக்கு பிரச்சனை ஏதும் இல்லை என்றாலும் நீங்கள் விதைத்ததை நீங்கள் என்ற ாவது ஒருநாள் அறுத்தே ஆக வேண்டி வரும். குறிப்பாக நாம் நம்முடைய பெற்றோரின் முதிர் வயதிலே அவர்களுக்கு

வரும். பலன் இல்லாமல் தப்பித்துக்கொள்ளத் தக்கதாக சின்ன பாவம் என்று எதுவுமே இல்லை என்பதை கவனிக்க வேண்டும்.

நம்மை சுற்றி இருக்கும் சூழலை நாம் கவனித்துப் பார்த்தோமான ால், தகப்பனையும் தாயையும் கனம் பண்ணத் தவறினதின் விளைவை நம்முடைய உற்றார் உறவினரின் வாழ்வில் அவர்கள் அனுபவிப்பதை நாம் பார்க்க முடியும். சிலர் அது போன்ற பாவங்களினால் பற்பல விதங்களில் கஷ்டப்படு கிறார்கள். பெற்றே ாருடன் உறவு சரியாக இல்லாததினால் தங்கள் வாழ்க்கையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் கஷ்டப்படுவோரை பற்றி ஏராளமான உதாரணங்களைத் தர முடியும். எனக்கு அறிமுகமான ஒரு மனிதனின் உதாரணத்தை உங்களுக்குத் தருகிறேன்:

அவர் எத்தியோப்பியாவிலும் வெளிநாடுகளிலும் பயிற்சி பெற்ற இராணுவ அதிகாரி. இராணுவத் திலே அவருக்கு அவருடைய திற மையினிமித்தம் உயர்ந்த பதவியைக் கொடுத்திருந்தார்கள். இந்த மனிதர் இருபத்தி நான்கு ஆண்டுகளில் தன்னுடைய தாயை ஒரு முறைகூட சென்று பார்த்ததில்லை. இதை நான் கேள்விபட்டபோது உறைந்து போனேன். உடனடியாக அவருடைய தாயார் எங்கிருக்கி றார்கள் என்று கண்டறியும் முயற்சியில் என் சொந்த செலவில் இறங்கினேன். கடைசியாக அவரை அடிடிஸ் அப்பா என்கிற நகரத்தில் ஏழ்மையானதொரு பகுதியில் கண்டேன். அவர் குன்றின உடல் நலத்தினாலும் உணவு பற்றாக் குறையினாலும் அதிக பெலவீனமாய் இருந்தார்கள். நான் அவரை சந்தித்தபோது, என்னை அவருடைய மகனுடைய நண்பன் என்று அறிமுகப்படுத்தினேன். அதைக் கேட்ட அந்த தாயார், தன் மகனுக்கு இந்த உலகத்திலே ஒரு நண்பன் இருக்கிறானே என்று ஆச்சரியப்பட்டார்! அவரிடம் சிரிது நேரம் பேசிவிட்டு நான் கொண்டுபோயிருந்த பரிசு பொருட்களை என்னுடைய நெடு நாள் நண்பனாகிய அவருடைய

மகனுடைய பெயரிலேயே அவருக்குக் கொடுத்தேன். கண்ணீர் மல்க அவைகளை பெற்றுக்கொண்ட அந்தத் தாயார், இதுவரை என்னுடைய மகன் உயிரோடு இருக்கிறானா என்று கூட எனக்குத் தெரியாதிருந்தது என்று சொன்னார். கடைசியாக அவரிடமிருந்து பிரியும்போது அவர் அதிக சந்தோஷத்துடன் என்னை ஆசீர்வதித்து வழியனுப்பி வைத்தார். நான் திரும்பி வந்தபோது, நடந்த காரியங்களை என்னுடைய நண்பனுக்குச் சொல்லி அவர் தன் தாயாரை கவனிக்காதது குறித்து அவரைக் கடிந்து கொண்டேன். நான் செய்ததைக் கேட்ட அந்த மனுஷன் என்மேல் கோபம் கொண்டவராக ஆனார். நான் ஏன் அவருடைய தாயாரை போய் சந்தித்தேன் என்று என்னைக் கேட்டார்.

அந்த தாய்க்கு ஒரே மகனாக இருந்த அந்த மனுஷன் தன் தாயின் வயதான காலத்திலே அவரை கவனிக்க மறுத்தார். ஒரு சில மாதங்களுக்கு பின்பு நான் நகரத்தின் குப்பை மேடு பகுதி வழியாகக் கடந்து போனபோது, அங்கு குப்பை பொறுக்கிக்கொண்டிருந்த ஒரு நபரைக் கண்டேன். அது என்னுடைய அந்த நண்பன் தான். நான் அவரிடம் சென்று அவருடைய நிலையைக் குறித்து என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்தேன். அப்போது அவர் தான் இராணுவ சேவையிருந்து நீக்கப்பட்டு விட்டதைக் குறித்து ஏதோ முணுமுணுத்தார். தனக்கு மன நிலை பாதிப்பு ஏற்பட்டு விட்டது என்றும் அதன் காரணமாகவே தன்னுடைய வேலையை தான் இழந்துவிட்டதாகவும் கூறினார். அப்பொழுது நான் அவருயைட இந்த கேவலமான நிலைக்கு அவர் தன்னுடைய தாய்க்கு விரோதமாக செய்த பாவமே பிரதானமான காரணம் என்று அவருக்குச் சொன்னேன். நான் சொன்னதை அவர் ஒப்புக் கொண்டார். அவருக்கு இராணுவத்திருந்து ஓய்வூதியம் வந்து கொண்டிருந்தாலும், அவருடைய மனநிலை பாதிப்பு அவரை தெருவில் குப்பை பொறுக்கும் ஒருவராக மாற்றிவிட்டிருந்தது.

தன்னுடைய வயது சென்ற தாயை கவனிக்க அவர் மறுத்தார், அதேபோல அவருடைய நண்பர்களும் அவர் பல வருடங்களாக சேவை புரிந்த ஸ்தாபனமும் அவருடைய அந்த நிலையில் அவரை கவனிக்காமல் போய் விட்டன.

வாசகர்களே, இந்த மனிதனுடைய வாழ்க்கை அனுபவம் நமக்கு முக்கியமானதொரு பாடத்தைக் கற்பிக்கிறது. நாம் நம்முடைய பெற்றோருக்குத் தேவை ஏற்படும் காலத்தில் அவர்களுக்கு உதவாமற்போனால், நமக்கும் அதே நிலையோ அல்லது அதைவிட மோசமான நிலையோ ஏற்படும் என்பதை இந்த உதாரணம் நமக்குக் காட்டுகிறது.

தகப்பனைப் பரியாசம்பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும்.

*நீதிமொழிகள் 30:17*

சாலொமோனின் நீதிமொழிகளிலே மேலே சொல்லப்பட்டபடி, பெற்றோரை கனவீனம் பண்ணுதல், வாழ்க்கையையே நாசம்பண்ணிவிடும் காரியமாக அமையும். பெற்றோரை ஏளம் பண்ணுவது அவர்களோடு வழக்காடுவது அவர்கள் கொடுக்கும் ஆலோசனைகளை மதிக்காதது எல்லாம் குறிப்பிடப்படாத பாதிப்புகளை ஏற்படுத்தும். இந்த மாதிரியான பாவங்களுக்கு பலன் படிப்படியாக வரும். அவை ஆரம்பத்தில் சின்ன சின்ன விபத்துக்களாக ஆரம்பித்து பெரிய விபத்துக்களாகவும் மரணத்திலேயும் கூட முடிவடைய கூடும். இவ்விளைவுகள் இந்த தலைமுறையில் ஏற்பட்டுக்கொண்டே இருந் தாலும் இந்த உண்மை அறியப்படாததாகவே உள்ளது. காரியம் இப்படி இருப்பதால், நாம் விழிப்பாக இருந்து, மீறுதல்களினால் ஏற்படும் பாதக விளைவுகளிருந்து நம்மையும் நம்முடைய தலைமுறை யையும் காப்பாற்றிட வேண்டும்.

## 3. 5. நம்மைப் பொல்லாத வித்தின் அறுவடையை அறுக்கப்பண்ணும்

நாம் எதை விதைக்கிறோமோ அதையே நாம் அறுப்போம் என்பது இந்த வாழ்க்கையின் முக்கியமானதொரு உண்மை. நாம் அநியாயத்தை விதைத்தால், அநிநாயத்தையே அறுப்போம். நம்முடைய பெற்றோரை நாம் கவனியாமல் போனால், நம்முடைய பிள்ளைகளின் வாயிலாக அதை நாம் பின் நாட்களில் அறுப்போம் என்பது நிச்சயம்.

மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

*கலாத்தியர் 6:7*

நாம் வாழ்க்கையிலே நம்முடைய கடமைகளை தேவனுடைய கற்பனைகளின்படி முழுமையாகவும் ஜாக்கிறதையாகவும் நிறை வேற்றிட வேண்டும். தேவனுடைய நியமித்தின்படி நம்மால் விதைக்கப் படுகிறது அளவில் சிறிதானதாக இருந்தாலும், பலன் வரும்போது அது விதைக்கப்பட்டதைவிட பல மடங்கு பெரியதாக தான் இருக்கும். அதுபோல வயதான பெற்றோரின் வாழ்விலே நாம் நற்கிரியைகள் என்கிற நல்ல விதைகள் விதைக்கும்போது அது பல மடங்கு அதிக பலனைத் தருகிறது. மாறாக நாம் அவர்களை அலட்சியப்படுத்தினால், நம்முடைய வாழ்விலும் அலட்சியத்தை பல மடங்கு அதிகமாக பெற வேண்டியிருக்கும். இதில் முக்கியமான விஷயம் என்னவென்றால், தண்டனை நம்மோடு முடிந்துவிடுவதில்லை. அது நம்முடைய பிள்ளைகளில் வாழ்விலும் அவர்களுடைய பிள்ளைகளில் வாழ்விலும்கூட தொடருகிறதாய் இருக்கிறது.

குற்றவுணர்வும் கீழ்படியாமைக்கான பலனும் சிறிதாக இருக்குமானால், ஒருவேளை நாம் அதை சகித்துக்கொண்டுவிடலாம். ஆனால் அது அப்படி இருப்பதுமில்லை, நம்மோடு முடிவடைந்து விடுவதுமில்லை. அது நம்முடைய பிற்கால சந்ததிகளையும் பாதிக்கிற ஒன்றாக ஆகிறது. எனவே பெற்ற தாய்க்கும் தகப்பனுக்கும் கீழ்படியாமல் போவதும் அவர்களை கனம்பண்ண தவறுவதுமான செயல்களுக்கு ஏற்படும் பிற்கால பலன்களை சரியாக நிதானித்துப் பார்த்து நம்முடைய பின் சந்ததிகள் பெரும் பாதிப்புக்குளாகிவிடாதபடிக்கு நாம் செயல்பட வேண்டும்.

நம்முடைய பின் சந்ததிக்கு வரக்கூடிய தீய பாதிப்புகள் வராமல் நாம் தடுக்கவேண்டும். அவர்கள் செய்யாத குற்றத்திற்கு தண்டிக்கப்படாமல் இருக்க வேண்டும். நம்மையும் நம்முடைய சந்ததியையும் தப்புவிக்கும் நோக்கத்தோடு நம்மை நாமே தாழ்த்தி நம்முடைய பெற்றோரின் பாதத்தில் விழுந்து நம்முடைய தவறுகளுக்கு நாம் மன்னிப்பு பெற்றாக வேண்டும். இந்த சாபமான து எப்படி தொடர்ந்து வரக்கூடியது என்பதை அறிந்த நாம் அதன் தொடர்பாதிப்புக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்தாக வேண்டும். உடனடியான மனந்திரும்புதல் மற்றும் மன்னிப்புக் கோருதல் போன்ற செயலால் நாம் அதை செய்ய முடியும்.

நம்முடைய பெற்றோர்கள் முதியவர்களின் ஆசிரமத்திலோ, தெருக்களில் கையேந்துபவர்களாகவோ கவனிப்பார் இல்லை என்பதால் வேறெங்கும் உதவி நாடுபவர்களாகவோ ஆகும் சூழல் அவர்களுக்கு வராதபடிக்கு நாம் பார்த்துக்கொள்ள வேண்டும்

அப்படி அவர்களை விட்டுவிட்டால் என்ன பலனாக கிடைக்கும் என்பதை நாம் இதுவரை தெளிவாக பார்த்தோம். இனி நல்ல பலனை அடைவது எப்படி என்று பார்க்கப் போகிறோம்.

# அத்தியாயம் நான்கு

## பெற்றோருக்குக் கீழ்படிதனாலும் அவர்களைக் கனம்பண்ணுதனாலும் விளையும் பலன்கள்



யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான் என்றார்.

*ஆதியாகமம் 9:27*

## அத்தியாயம் 4

# பெற்றோருக்குக் கீழ்படிதலினாலும் அவர்களைக் கனம்பண்ணுதலினாலும் விளையும் பலன்கள்

### 4. 1. நாம் ஆசீர்வாதங்களைப் பெறுவோம்

ஆசீர்வாதங்களை பெற நம் எல்லாருக்குமே விருப்பம் தான். ஆசீர்வாதம் என்கிற வார்த்தையே அநேகருக்கு இனிமையாக இருக்கும். ஆசீர்வாதங்களைப்பற்றி கற்றுக்கொள்ளவும், கற்றுக்கொடுக்கவும் ஜனங்கள் விரும்புகிறார்கள். தங்கள் பிள்ளைகளுக்குக்கூட "ஆசீர்வாதம்' என்று மக்கள் பெயர் கொடுக்கிற ார்கள்.

இவைகளிருந்து மனுஷருக்கு ஆவிக்குரிய அல்லது பூமிக்குரிய ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ள தீராத தாகம் இருக்கிறது என்று அறிகிறோம். நல்ல மனநிலையில் இருக்கும் யாரும் சாபத்தை விரும்ப மாட்டார்கள். எல்லா வகையிலும் தான் ஆசீர்வதிக்கப்பட வேண்டும் என்பதே ஒவ்வொருவருடைய கனவாக இருக்கிறது. ஆனால் ஆசீர்வாதங்கள் எங்கிருந்து வருகின்றன என்று நாம் பார்க்கவேண்டும். எல்லா ஆசீர்வாதத்திற்கும் ஊற்றுறாக தேவன் இருக்கிறார் என்பதை அறிந்து, ஆசீர்வாதங்களை அடைவதற் கான முயற்சிகளில் இறங்குவது ஞானமாக இருக்கும். தேவனுடைய அளவிடப்படாத ஆசீர்வாத ஊற்றிருந்து ஆசீர்வாதங்களை பெற்றுக்கொள்ளுவதற்கு, பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும் என்கிற அவருடைய கற்பனையைக் கைக்கொண்டாலே போதுமான தாக இருக்கும்.

நீண்ட நாள் வாழவேண்டும் என்று எல்லாரும் விரும்புகிறார்கள். மைக்கேல் ஜாக்சன் என்பவர் 150 ஆண்டுகளுக்கு மேலாக சொகுசாக வசிப்பதற்கு தனக்கு ஒரு வீட்டை கட்டியிருப்பதாக ஒருமுறை சொன்னாராம். ஆனால் லண்டன் நகரில் ஒரு இசை நிகழ்ச்சிக்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது தனது 50வது வயதிலேயே அவர் மரித்துவிட்டார்.

நான் ஏற்கனவே சொன்னதுபோல, நீண்ட வாழ்நாளுக்கு நித்தியமான தேவனே காரணராக இருக்கிறார். நம்முடைய வாழ்நாள் நீடித்திருப்பது நம்முடைய பெற்றோருடனான நம்முடைய உறவைப் பொறுத்து இருக்கிறது. பெற்றோருடைய தேவைகளை நாம் சந்திக்கும்போது அவர்கள் நம்முடைய அன்றாட நடவடிக்கைகளிலும் எதிர்கால பிரயாசங்களிலும் தங்கள் ஆசீர்வாதத்தை கொடுப்பார்கள். கீழ்கண்ட தேவனுடைய வார்த்தையின் அடிப்படையிலான ஆசீர்வாதத்தை நம்முடைய வாழ்வில் பெற்றோரின் ஆசீர்வாத வார்த்தைகள் தூண்டிவிடுகின்றன.

யாப்பேத்தை தேவன் விர்த்தியாக்குவார்; அவன் சேமுடைய கூடாரங்களில் குடியிருப்பான்; கானான் அவனுக்கு அடிமையாயிருப்பான் என்றார்.

*ஆதியாகமம் 9:27*

மேற்கண்ட வசனத்தில் காணப்படுவதுபோல வாழ்க்கையின் அழிவும், தொடர்ச்சியும் நோவா மற்றும் அவனுடைய குமாரருடைய கதையை சார்ந்திருக்கிறது. தன் வாழ்வையே தன் குமாரருக்காக தியாகம் செய்த உத்தமனாகிய நோவா, குடி வெறியில் நிர்வானமாய் கிடக்கிறான்.

நோவா குடிவெறியினால் மயங்கிக் கிடந்தாலும் பெற்ற தந்தை என்கிற மதிப்பை அவன் இழந்து விட்டிருக்கவில்லை. அவனை அந்த நிலையில் கண்ட காம், நோவாவுக்கு இருந்த தகப்பன் என்கிற மதிப்பை மதிக்கவில்லை. காமைப்போல தங்கள் தகப்பனை ஏளம் பண்ண மறுத்த நோவாவின் மற்ற இரண்டு குமாரரும் ஒரு வஸ்திரத்தை எடுத்து பின்புறமாக நடந்துபோய் அவன் நிர்வானத்தை மூடினார்கள்.

பெற்றோருடனான உறவை நாம் எத்தனை ஜாக்கிறதையாகக் கையாளவேண்டும் என்பதை இந்த சம்பவம் நமக்குப் படிப்பிக்கிறது. காமினுடைய சகோதரர் செய்ததுபோல நாம் நடந்து கொள்வோமானால் அது நமக்கும் நம் சந்ததிக்கும் பயனுள்ளதாக அமையும்.

குடிவெறி தெளிந்து நோவா எழுந்தபோது தன் குமாரர் தனக்கு செய்ததற்கு ஏற்ப பதில் செய்தான். தன் நிர்வானத்தை வஸ்திரத்தைக்கொண்டு மூடின தன் இரண்டு குமாரரை நோவா ஆசீர்வதித்தான். அதே சமயம் தன் நிர்வானத்தை ஏளம் செய்த காமை அவன் சபித்தான். ஆக பெற்ற தகப்பன் என்கிற அதிகாரத்தைக்கொண்டு நோவா, இரண்டு குமாரரை ஆசீர்வதித்தான் ஒரு குமாரனை சபித்தான். அந்த ஆசீர்வாதமும் சாபமும் அந்த மூவரின் வாழ்விலும் அவர்களின் பின்னடியாரின் வாழ்விலும் பலித்தது.

அடியேனுக்கு தேவரீர் காண்பித்த எல்லா தயவுக்கும் எல்லா சத்தியத்துக்கும் நான் எவ்வளவேனும் பாத்திரன் அல்ல, நான் கோலும் கையுமாய் இந்த யோர்தானைக் கடந்துபோனேன்; இப்பொழுது இவ்விரண்டு பரிவாரங்களையும் உடையவனானேன்.

*ஆதியாகமம் 32:10*

மேற்கண்ட தாழ்மையான வார்த்தையை ஈசாக்கின் குமாரன ாகிய யாக்கோபு தான் தேவனிடத்திருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டு தேசம் திரும்பும்போது சொன்ன வார்த்தை ஆகும். யாக்கோபு தன் மாமனாகிய லாபானிடம் சேவித்த இருபது வருஷங்களில் பத்துமுறை யாக்கோபுடைய சம்பளத்தை லாபான் மாற்றினான். அப்படியிருந்து அவனுடைய தகப்பனுடைய ஆசீர்வாதங்கள் அவனோடு இருந்தபடியினால் யாக்கோபு அவைகளினால் பாதிக்கப்படவில்லை. மாறாக அது அவனுக்கு சாதகமாகவே ஆனது. கடைசியில் அவன் ஏராளமான கால்நடைகளைக் கொண்ட இரு பெரிய பரிவாரங்களுக்கு சொந்தக்காரன் ஆனான்.

அந்த ஆசீர்வாதம் அவன் தகப்பனிடமிருந்தும் தேவனிடமிந்தும் வந்தனவாக இருந்தன. திவ்ய சத்தியங்கள் தகப்பனாகிய ஈசாக்கின் வார்த்தைகளோடு சேர்ந்து யாக்கோபை எல்லா ஆபத்துகளி னின்றும் பாதுகாத்து, ஐசுவரியத்தைத் தந்து அவனை பத்திரமாகத் தாயகத்திற்குக் கொண்டுவந்தது.

இது எத்தியோப்பியாவிலே குராகே என்னும் இனத்தவர் மத்தியில் இருக்கும் பாரம்பரிய பழக்கத்தை எனக்கு நினை வுபடுத்துகிறது. இந்த மக்கள் தங்கள் ஆசீர்வாதத்திற்கான ஊற்றை எப்படி அடைவது என்பதை இந்த வழக்கத்தின் வாயிலாக செய்வார்கள். இதை மற்றவர்களும் கடைபிடித்தல் நல்லது என்று நான் நினைக்கிறேன். குராகே இனத்தின் கலாச்சாரத்தில் எல்லா குடும்பத்தின் பிள்ளைகளும் தங்கள் பெற்றோரின் ஆசீர்வாதத்தை நாடுவார்கள். தொழில் துவங்கும்போதோ திருமண காரியத்தில் இறங்கும் முன்போ அவர்கள் பெற்றோரின் ஆசீர்வாதத்தை தேடி அணுகுவார்கள். எத்தியோப்பிய மரபு வழி கிறிஸ்தவர்கள் மத்தியில் கிறிஸ்துவின் உண்மையான சிலுவையைக் கண்டுபிடித்த தினம்

என்று ஒரு நாளை எத்தியோப்பிய "மெஸ்கல்' என்கிற திருநாளாகக் கொண்டாடுவதுண்டு. இந்த எத்தியோப்பிய மெஸ்கல் திருநாளில், குடும்பத்தின் பிள்ளைகள் தங்கள் பெற்றோருடன் கூடி புசித்துக் குடித்து அவர்களுக்கு பரிசுகளை வழங்கி கொண்டாடுவார்கள். அப்போது பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை பாரம்பரிய வழக்கத்தின்படி ஆசீர்வதிப்பார்கள். இந்த ஆசீர்வாதங்களையப் பெற்ற பின்பு பிள்ளைகள் தங்கள் வாழ்க்கையை வாழ புற ப்படுவார்கள். இநத் நல்ல கலாச்சாரத்தை மற்றவர்களும்கூட கடைபிடித்தால் நலமாக இருக்கும்.

## 4. 2. நம்முடைய வாழ்நாளை அது நீட்டிக்கும்

வாழ்நாள் நீடித்திருப்பது பரம பிதாவின் கிருபைகளில் ஒன்று. தம்முடைய பிள்ளைகளின் வாழ் நாளை நீடிப்பதின் மூலம் தேவன் தம்முடைய பிள்ளைகளின் வாழ்வில் தம்முடைய நோக்கங்களில் பெரும்பாலானவற்றை நிறைவேற்றுகிறார். பெலவீனப்படுத்தும் வியாதியோ அல்லது வேறே பெரிய வேதனையோ இல்லாதவரை எல்லாருமே நீடித்த நாட்களைதான் விரும்புவார்கள். நீடித்த நாட்களை வாக்குபண்ணும் தேவனுடைய வாக்குத்தத்தம் பெற்றே ாரைக் கனம்பண்ணுதலோடு இணைக்கப்பட்ட வாக்குத்தத்தமாக இருக்கிறது.

> உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கு, உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக.
>
> *யாத்திராகமம் 20:12*

எண்ணிறந்தோரின் வாழ்நாள் சிறு வயதிலேயே முடிவடைந்துவிடுகிறது, வீடுகள் நாசமாகின்றன, தொழில்கள் முடங்குகின்றன, பற்பல சேதங்கள் சமுதாயத்திற்கு வருகிறது. இந்த சேதங்களுக்கு பெற்றோரின் மனக்குமுறலே காரணம் என்று நான் நம்புகிறேன். இவைகள் வாழ்க்கையில் இயற்கை யாக சம்பவிக்கிற காரியங்கள் என்று நாம் எடுத்துக்கொள்ளக் கூடாது. அதற்கு பதிலாக அவைகளை தேவனுடைய கற்பனையோடு ஒப்பிட்டு பார்க்கவேண்டும்.

பிள்ளைகளே, உங்கள் பெற்றாருக்குக் கர்த்தருக்குள் கீழ்ப்படியுங்கள், இது நியாயம். உனக்கு நன்மை உண்டாயிருப்பதற்கும், பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருப்பதற்கும் உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனையாயிருக்கிறது.

*எபேசியர் 6:1–3*

மேற்கண்ட வேத பகுதியை மூன்று பாகங்களாக பின்வருமாறு பிரிக்கலாம்:

1. தகப்பனையும் தாயையும் கனம்பண்ணு.
2. உனக்கு நன்மை உண்டாகும்.
3. பூமியிலே உன் வாழ்நாள் நீடித்திருக்கும்.

வாழ்க்கையிலே மனிதர் வேண்டும் என்று விரும்புகிற இரண்டு காரியங்கள் எபேசியரின் புத்தகத்திலே கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவது வாழ்க்கையிலே முன்னேற்றத்தை வேண்டி மனிதர்கள் அனுதின மும் அதிக பிரயாசப்படுகிறார்கள். பண வசதியுடன், நல்ல உடல் நலத்துடன், ஆசீர்வாதமான திருமணமும் பிள்ளைகளும் என்று வாழ்ந்து, கடைசியில் தாத்தா பாட்டியாக ஆக விரும்புகிறார்கள்.

எபேசியரின் புத்தகம் சொல்லும் இரண்டாவது காரியம் பெற்றோரைக் கனம்பண்ணுதல். தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுதல் என்கிற வார்த்தை, பூமியிலே பெற்றோருக்கு தேவனால் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தை காட்டும் வாக்கியமாக உள்ளது. இந்த புத்தகத்தின் ஆக்கியோன் மனிதனை தேவன் சிருஷ்டித்த கலைவண்ணத்தை வர்ணிக்கிறார். அதிலே தேவன் எப்படி மண்ணினாலே மனிதனை உருவாக்கி, அவன் நாசியிலே சுவாசத்தை ஊதி அவனை ஜீவாத்துமாவாக ஆக்கினார் என்று காண்பிக்கிறார். தகப்பனும் தாயும் ஒன்று சேரும்போது அதே படைப்பு நிகழுகிறது. அதிருந்து தம்மைப்போல படைக்கும் ஆற்றலை மனிதனுக்குத் தந்து அவனை உருவாக்குகிறவனாக தேவன் ஏற்படுத்தினார் என்று அறிகிறோம். அப்படி உருவாக்கப்பட்ட பிள்ளை வளர்ந்து தானும் பிள்ளையை பெற்றடுக்கும் காலம் வரும்வரைக்கும் அதைப் பராமரித்து பாதுகாத்து வளர்ப்பது மனிதனின் கடமையாக ஆகிறது. இது தேவனால் ஏற்படுத்தப்பட்ட திட்டமாக இருக்கிறது. தேவனுடைய திட்டத்தை இப்படி நிறைவேற்றும் பெற்றோருக்கு, அவர்களுடை சேவையை ஈடு செய்யும் வகையில் தேவன் பிள்ளைகள் அவர்களை அவர்கள் முதிர்வயதிலே பராமரித்து கனம்பண்ண வேண்டும் என்கிற கட்டளையை கொடுத்திருக்கிறார். இதை சரியாக புரிந்துகொள்ளுவதே மெய்யான அறிவாகும். தேவனுடைய கட்டளைக்குக் கீழ்படிந்து முழுஇருதயத்தோடு பெற்றோரைக் கனம்பண்ணுகிறவர்களுக்கு வளமையான நீடிய வாழ்வு காத்திருக்கிறது.

## 4. 3. அது வெற்றியை கொண்டுவரும்

வாழ்க்கையிலே வெற்றி அடையவே எல்லாரும் விரும்புகிறார்கள். வெற்றி பெறுவது எப்படியென்று சொல்க்கொடுக்கும் புத்தகங்களும், ஸ்தாபனங்களும் ஏராளம் உண்டு. இந்த போதனைகள் விசுவாசிகளுக்கும் உண்டு, அவிசுவாசிகளுக்கும் உண்டு. அவைகள் அனைத்தையும் தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ப பயன்படுத்தி வாழ்க்கையில் முன்னேற்றத்தைக் காண நாம் யாவரும் விரும்புகிறோம். அப்படி இருக்கும்போது, முன்னேற்றத்தை எந்த வகையிலும் எதுவும் பாதிப்பதை யாரும் விரும்புவதில்லை.

கருவிலே குழந்தைகள் அழிவது, குழந்தைகள் பிறந்து மரிப்பது போன்ற சாபங்களை முறிப்பதில் சபைகள் இன்று தீவிரம் காட்டுகின்றன. பிசாசு நம்முடைய வாழ்வின் தொடர்ச்சியைத் தடை செய்வது மற்றும் நம்முடைய அறுவடையை நாம் அறுக்க முடியால் போக செய்வது ஆகிய காரியங்களில் அதிக வேகமாக செயல்படுகிறான். இந்த நிலையில், தேவனுக்குக் கீழ்படிந்து நாம் பெற்றோரைக் கனம்பண்ணும்போது, அது பிசாசுக்கு விரோதமான இந்த போராட்டத்தில் நம்முடைய கையை திடப்படுத்துகிறது!

இந்த புத்தகத்தின் கருப்பொருள் சொல்லுவதுபோல வாழ்க்கையிலே வெற்றியைக் காண மிக சிறந்த வழி தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவதுதான். வெற்றிக்கு மெய்யான ஊற்றாக இருப்பது தேவனுடைய வார்த்தைதான். வேதம் அதை இப்படியாக சொல்லுகிறது:

உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கொடுக்கிற தேசத்திலே உன் நாட்கள் நீடித்திருப்பதற்கும், நீ நன்றாயி ருப்பதற்கும், உன் தேவனாகிய கர்த்தர் உனக்குக் கட்டளையிட்டபடியே, உன் தகப்பனையும் உன் தாயை யும் கனம்பண்ணுவாயாக.

*உபாகமம் 5:16*

உன் தகப்பனையும் உன் தாயையும் கனம்பண்ணுவாயாக என்பதே வாக்குத்தத்தமுள்ள முதலாங் கற்பனை யாயிருக்கிறது.

*எபேசியர் 6:3*

பழைய ஏற்பாடு மற்றும் புதிய ஏற்பாடு பகுதிகளிருந்து கொடுக்கப்பட்டுள்ள இந்த வசனங்கள் பெற்றோரைக் கன ம்பண்ணுதல் தேவனுடைய மாறாத நிலைபாட்டைக் காட்டுகிறது.

பெற்றோரைக் கனம்பண்ணுதல் என்னும் விதையை விதைத்து, வாழ்க்கையிலே வெற்றி என்னும் அறுவடையை அறுத்தல் என்கிற வரைத்திட்டத்தை தேவன் மனிதர்களுக்குக் கொடுத்திருக்கிற ார். தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டுமென்பது தேவனுடைய மாற்றமில்லாத கட்டளையாக இருக்கிறது. அதை நாம் நம்முடைய வசதிக்கு ஏற்ப கைக்கொள்ள முடியாது.

பெற்றோர் நல்லவர்களாகவோ கெட்டவர்களாகவோ இருப்பதும், இதிருந்து விலக்கு அளிக்காது. அதிலும் அவர்கள் தேவையில் இருந்தால் சாக்குச் சொல்ல இடமே இல்லை.

தங்கள் பிள்ளைகளுக்கு பிரச்சனைகளை ஏற்படுத்திக்கொண்டே இருக்கும் பெற்றோரும் உண்டு. அப்படிபட்டவர்களால்கூட,

நம்முடைய வாழ்க்கைக் கெட்டுப்போவதற்கு நாம் அனுமதிக்கக்கூடாது. அப்படிப்பட்ட பெற்றோரைக்கொண்ட பிள்ளைகள் பொறுமையை கடைபிடித்து, வேத வசனங்களால் தங்களை தற்காத்துக்கொண்டு, அந்த சூழலும் பெற்றோரை கனம்பண்ண வேண்டும். பெற்றோர் தீயவர்களாக இருக்கிறார்கள் என்று அவர்களை அலட்சியம் பண்ணுகிறவர்கள் பாதிப்புக் குள்ளாகிறார்கள், அதே சமயம், பொறுமையை காத்து அவர்களை கனம்பண்ணுகிறவர்கள் மேன்மை அடைகிறார்கள்.

பிரச்சனை தரும் பெற்றோரை கனம்பண்ணி மேன்மை அடைந்தவர்கள் என்று சுட்டிக்காட்ட ஏராளமான உதாரணங்கள் உண்டு. அப்படி வெற்றிகரமாக செய்தவர்கள் தங்கள் அனுபவத்தை நீண்ட கதையாகவே சொல்லமுடியும். இருந்தாலும் வாழ்க்கையில் அவர்களது வெற்றிக்கு பெற்றோ ருடன் அவர்கள் கொண்ட நல்லுற வே காரணமாக இருந்தது.

இப்படி செய்தவர்கள் தங்கள் பெற்றோரை நடத்தின விதம் நமக்கு நல்ல முன்மாதிரியாக இருக்கிறது. காரணம் அப்படி செய்ய தவறினவர்கள் வாழ்க்கையில் தோல்விகளை சந்திக்கிறவர்களாக ஆனார்கள்.

பெற்றோருடனான உறவு சரியாக இல்லாத நிலையில் இருக்கும்போது அவர்கள் இறந்து போய் விட்டால், அது அந்த பிள்ளைகளுக்கு சிக்கலை ஏற்படுத்துகிறது என்பது உண்மைதான். அப்படிப் பட்ட நிலையிலுள்ளவர்கள்மேல் நம்முடைய அனுதாபம் இருந்தாலும், அவர்கள் தங்கள் செய்கையை சீர் செய்ய, மனந்திரும்புவது ஒன்றே வழி என்று நாம் சொல்லுகிறோம். தேவனே மன்னிப்பை அருளுகிறவரும், சமாதானத்தை ஏற்படுத்துகிறவரும், வாழ்க்கையில் வெற்றியைத் தருக்கிறவருமாய்

இருக்கிறார். ஆகவே மனந்திரும்பி தேவனிடத்திருந்து மன்னிப்பை பெற்றுக்கொண்டுவிட்டால், கடந்த காலத்தை மறந்து, சிருஷ்டிகரோடுகூட நல்ல உறவுள்ள எதிர்காலத்தை நோக்கி பயணிக்க முடியும்.

தகப்பயையும் தாயையும் கனம்பண்ணுவதும் அவர்களுடன் நல்லுறவு கொண்டிருப்பதுமே நீடித்த நாட்களையும், வெற்றியுள்ள வாழ்க்கையையும் தரும் என்பதால், பெற்றோரோரோடு சிதைந்து போயிருக்கும் உறவை உடனே சீர் செய்து, வளமையான வாழ்க்கைக்கு நாம் வழிவகுப்போமாக.

## 4. 4. நல்ல வித்தின் அறுவடையை அறுப்போம்

மோசம் போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்.

*கலாத்தியர் 6:7*

நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம் என்று வேதாகமம் சொல்லுகிறது. தீமையை நாம் விதைத்தால் தீமையைத்தான் அறுப்போம். அதுபோல நல்ல விதையை விதைத்தால் நல்ல அறுவடையை நெடுநாட்களுக்கு அபரிவிதமாக அறுப்போம்.

நாம் விதைத்தற்கு ஏற்றாற்போல நன்மையையோ தீமையையோ நாம் நம்முடைய வாழ்நாட்களில் அறுக்கபோவது தவிர்க்க முடியாததாக இருக்கிறது. எதை விதைத்தோமோ அதை அறுப்பதற்கும், நம்முடைய வேத அறிவிற்கும், நாம் வாழும் கிறிஸ்தவ வாழ்க்கைக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. கெட்ட விதையை விதைத்த யாவரும் கெட்ட கனிகளையும் நல்ல விதைகளை விதைத்தவர்கள் நல்ல கனிகளையும் அறுப்பார்கள். நல்லதாகவோ கெட்டதாகவோ இருக்கும் விதைகள் பலன் கொடுக்கும் போது அவை பல மடங்காகவே பலன் கொடுக்கிற வைகளாக இருக்கின்றன. ஆதலால் முடிந்த அளவுக்கு நாம் நற்கிரியைகள் என்னும் நல்ல விதைகளை விதைக்கப் பிரயாசப்பட வேண்டும்.

தேவனுடைய வார்த்தைக்கு ஏற்ப நம்முடைய பெற்றோர் உயிரோடிருக்கிறவரை அவர்களை நாம் கனம்பண்ண வேண்டும். நாம் அப்படி செய்து அவர்களை பிரியப்படுத்தினால், அதற்கான பலனை நம்முடைய பிள்ளைகளின் செயல்களின் வடிவில் நாம் அறுப்போம். அதேபோல நம்முடைய பிள்ளைகள் அந்த நற்கனிகளை பெற்றோராகிய நம்மிலே விதைத்தால், அவர்களுடைய பிள்ளை களின் செயல்களிலே அவர்கள் அதற்கான பலனை அறுப்பார்கள். இது இப்படியே தொடரும்.

பெற்றோரிடம் விதைக்கப்படு நற்கிரியையாகிய நல்ல விதையானது அந்த நபருக்கு பற்பல விதத்திலே பலன் தருகிற தாக இருக்கிறது. சந்தர்ப்ப சூழ்நிலைகள் சரியாக இல்லையென்ற ாலும் பெற்றோரிடம் நற்கிரியைகளை நாம் செய்துகொண்டே இருக்கவேண்டும். அதற்கான பலனை நம்முடைய நாட்களி லும் நம்முடைய பிள்ளைகளின் வாழ்விலும் நிச்சயம் காணுவோம்.

பெற்றோரையும் சமுதாயத்திலுள்ள பெரியவர்களையும்கூட கனம்பண்ணுவதை வழக்கமாக ஆக்கிக் கொண்டு அவர்களுடைய பழுவைக் குறைக்க என்ன செய்ய முடியுமோ அதை செய்யவேண்டும். அப்படி செய்யும்போது, நம்முடைய நல்லெண்ணத்தைக் கண்டு தேவன் அதற்கேற்ற பலனை நமக்குத் தருவார்.

உதாரணத்துக்கு சோளத்தின் விதை ஒன்றை விதைத்தோமானால், அது ஒரு சோளத்தை அல்ல பலபல சோளத்தைத் தருகிறது. ஒரே காம்பிலே பல சோள முளைகள் எழும்புகின்றன. அதுபோல பெரியவர்களுக்கு நாம் உதவும்போது பற்பல நம்மைகளை எதிர்பார்க்க முடியும். அப்படி உதவி செய்யாமற் போனாலோ தீமை செய்தாலோ அதேபோல பற்பல தீமைகளையும் எதிர்பார்க்கலாம்.


தாய் தகப்பன் ஆகிய இரு நபர்களின் வித்தைக்கொண்டு பெருகச் செய்கிற தேவன் எப்படி பிள்ளைகள் பொருட்கள் என்று பெருக செய்தார் என்பதை நம்முடைய ஆவிக்குரிய கண்களினால் காண முடியும். அதேபோல அதே இரு நபர்களைக்கொண்டு அவரால் வியாபாரங்களையும் தொழில்களையும் வீட்டிலே அன்பையும் பெருகப்பண்ண முடியும். இந்த கிரியை இதோடு நின்றுவிடாமல் உற்றாரையும் இனி வரும் சந்ததியையும்கூட தொடுகிறதாய் இருக்கிறது.

நம்முடைய பிள்ளைகள் பிற்காலத்தில் நன்மைகளை அனுபவிக்க வேண்டுமென்று அவர்கள் எதிர் காலத்தைக் கருத்தில்கொண்டு நாம் நம்முடைய தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும். இது தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளும்படி அவருக்குக் கீழ்படிகிறதாக இருக்கும்.

நீங்கள் இளம் வயதுள்ளவராக இன்னும் பெற்றோரின் கீழ் இருப்பவராக இருந்தால், உங்களுக்கு சமாதானமான வாழ்க்கை அமைய நீங்கள் உங்கள் பெற்றோரை கனம்பண்ணவேண்டும் என்று நான் புத்தி சொல்லுகிறேன். இந்த புத்தகத்திலே சொல்லப்பட்டவைகளை ஏற்கனவே கைக்கொள்ளுகிறவர்களாக நீங்கள் இருப்பீர்களானால், கர்த்தருக்கு ஸ்தோத்திரம். உங்கள் வாழ்க்கை நிச்சயம் ஆசீர்வதிக் கப்பட்டதாக இருக்கும். நீங்கள் வளர்ந்து பெரியவர்களாகி பிள்ளைகளைப் பெற்றெடுக்கும்போது இன்னும் அதிகமான ஆசீர்வாதங்களைப் பார்க்கப்போகிறீர்கள். உங்கள் பிள்ளைகள் ஆசீர்வதிக்கப் பட்டவர்களாக இருப்பதையும், இப்போது நீங்கள் செய்கிறவைகளுக்கான பலனை அவர்கள் பெறுகிறதையும் நீங்கள் பார்ப்பீர்கள். இந்த கற்பனையை நமக்குத் தந்த நம்முடைய தேவனாகிய கர்த்தர், அந்த வாக்குத்தத்தங்களை நிறைவேற்ற உண்மையுள்ளவராக இருக்கிறார்.

# அத்தியாயம் ஐந்து

## பெற்றோருடைய கடமைகள்




பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

*எபேசியர் 6:4*

## அத்தியாயம் 5

# பெற்றோருடைய கடமைகள்

### 5. 1. எதிர்மறையான சொற்களைபிள்ளைகள்மேல் பயன்படுத்துவதால் வரும் பலன்கள்

பிள்ளைகளை எப்படி சரியாக வளர்ப்பது என்பதை பற்றி பெற்றோர் அறிந்திருக்கவேண்டும். பிள்ளைகளை நமக்குத் தந்த கர்த்தர், நாம் அவர்களைச் சரியாக வளர்க்கவேண்டும் என்றும், அவர்களை நாம் அவருடைய சித்தத்தின்படி நடத்தவேண்டும் என்றும் எதிர்பார்க்கிறார். தேவனுடைய சித்தத்தின்படி பிள்ளைகளை வளர்க்க வேண்டுமானால் தேவன் எவைகளை எதிர்பார்க்கிறார் என்று நாம் அறிந்திருக்கவேண்டும். பிள்ளைகள் பெற்றோரின் கட்டுப்பாட்டிற்குள் இருந்தால்தான் உலகத்தினால் பாதிக்கப்படாதபடி வளர முடியும். இல்லாவிட்டால் கேடான பின்விளைவுகளை சந்திக்க நேரிடும்.

பெற்றோர் சொல்லும் வார்த்தைகள் பிள்ளைகளின் வாழ்க்கையை பாதிக்கக்கூடியதாக இருப்பதால் அவர்களைக் கடிந்துகொள்ளுவதற்கு முன்பு பெற்றோர் சற்று யோசித்து செயல்படவேண்டும். தேவை யில்லாமல் பிள்ளைகளை சபிக்கும் பெற்றோர்கள் தங்கள் வார்த்தைகளினால் ஏற்படக்கூடிய பாதிப்பை அறியாதிருக்கிறார்கள். எதிர்மறையான ஒவ்வொரு வார்த்தையும் பிள்ளைகளை நேரடியாகவோ மறைமுகமாகவோ நிச்சயம் பாதிக்கும் என்பதை நாம் அறிந்திருக்கவேண்டும்.

“முட்டாளே”, “அறிவில்லாதவனே”, “பிர.யோஜனமற்றவனே நீ

உருப்படவே மாட்டாய்'', "மூடனே'', என்பதுபோன்ற கடினமான வார்த்தைகளைக்கொண்டு பெற்றோர் சற்றும் யோசிக்காமல் பிள்ளை பெற்றோர் சற்றும் யோசிக்காமல் பிள்ளைகளைத் திட்டுகிற ரார்கள். பெற்றோர் இந்த வார்த்தைகளை பயன்படுத்தும்போது அவைகள் வெறும் வார்த்தைகள் என்றும், அவைகளால் பாதிப்பு ஏதும் இல்லை என்றும் தோன்றலாம். ஆனால் அவை கள் பிள்ளைகளுடைய வாழ்க்கையில் நெடுங்கால பாதிப்பை ஏற்படுத்தக்கூடியனவாக இருக்கின்றன.

இந்த காரியத்தைக் குறித்து பயிற்சி எடுத்துக்கொண்ட இளம் பெண் ஒருவர் தன் சாட்சியை பகிர்ந்து கொண்டார். அவருடைய தகப்பன் அவரை, "உன் சகோதரிகளைவிட நீ தாழ்ந்துதான் இருப்பாய்'' என்றும், "நீ அவர்கள் தயவிலேதான் இருக்கப்போகிற ாய்'' என்றும் சொல்லி, கடிந்துகொள்ளுவாராம். இந்த பெண் பிற்காலத்தில் இரட்சிக்கப்பட்டு கிறிஸ்துவுக்குள் ஜீவித்தாலும், அவர் என்னதான் கடின மாக உழைத்தாலும், அவர் தன் சகோதரிகளையே சார்ந்து இருக்கவேண்டிய நிலை திரும்ப திரும்ப வந்ததாம். தங்கியிருப்பதற்குக்கூட ஒரு சகோதரியின் தயவிலே இருக்கவேண்டிய நிலை அவருக்கு வந்ததாம். அப்போதுதான் அவர், "நான் இத்தனை கடினமாக உழைத்தும், இப்படி என் சகோதரிகளை சார்ந்து அவர்கள் தயவிலே இருக்கவேண்டிய நிலை எனக்கு ஏன் வருகிறது?'' என்று யோசித் தாராம். அப்போது இது தன் தகப்பன் தன்னைக்குறித்து சொன்ன வார்த்தைகளின் பலன் என்பதை உணர்ந்தாராம். உடனே அவர் தன் தகப்பனிடம் சென்று அவர் சொன்ன வார்த்தைகளை மாற்றி இப்போது ஆசீர்வாதமான வார்த்தைகளை தன்னைக் குறித்து சொல்லும்படி கேட்டுக்கொண்டாராம். தகப்பனும் மனமுவந்து அவரை ஆசீர்வதித்தாராம். அதற்குபின்பு அந்த சகோதரி பிரச்சனைகள் எல்லாம் நீங்கி நல்ல நிலைக்கு வந்துவிட்டார்.

நாம் அறியாத வயதாக இருந்தபோது பல வருஷங்களுக்கு முன்பாக நம்முடைய பெற்றோர் சொன்ன வார்த்தைகள் எப்படி இன்று நம்முடைய வாழ்க்கையை பாதிக்க முடியுமென்று ஒருவேளை நீங்கள் கேட்கலாம். நாம் அறிந்து செய்கிற இன்றைய குற்றங்களுக்குதானே நாம் பலன் அடைய முடியும் என்று நீங்கள் சொல்லலாம். நீங்கள் சொல்லுவதிலே சற்று உண்மை இருக்கதான் செய்கிறது. நீங்கள் மாத்திரம் அல்ல, உங்கள் பெற்றோரும்கூட அதே நினைப்பில் தான் இருக்கிறார்கள். நாம் பேசுகிற ஒவ்வொரு வார்த்தையையுமா கர்த்தர் கணக்கிடப்போகிறார்? அப்படி பார்த்தால் யாரால் நிற்க முடியும்? என்று அவர்கள் நினைக்கிற ார்கள். இது கர்த்தருடைய கட்டளைகளைக் குறித்த தவறான அபிப்பிராயமாகும்.

உண்மை என்னவென்றால், சொல்லப்படுகின்ற எல்லா வார்த்தைகளுக்குமே பலன் இருப்பதில்லை. சொல்லப்படும் வார்த்தைகள் மனமுவந்து சொல்லப்படும்போது அவைகளுக்கு பலன் உண்டு. மேலும் காலம் கடந்துபோவது அந்த வார்த்தைகளின் தாக்கத்தை தவிர்க்காது. மனந்திரும்பி மன்னிப்பு கோருதலே அந்த தாக்கத்தை தவிர்க்கும். அதுமட்டுமல்லாது, தேவனுடைய அதிகாரத்தை பெற்றிருக்கும் பெற்றோர், சபை மூப்பர் போன்றே ாரைக் குறித்து நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். தேவனு டைய அதிகாரம் அவர்களுக்கு இருப்பதால் அவர்கள் சொல்லும் வார்த்தைகளுக்கு பாதிப்பு நிச்சயம். வார்த்தைகள் பார்ப்பதற்கு சாதாரணமான வார்த்தைகளாக இருந்தாலும் அவைகளை நாம் உண்மை யாகச் சொல்லும்போது அவைகள் நிச்சயம் பாதிப்பை ஏற்படுத்தும். எனவே பெற்றோர் தங்களின் தேவையற்ற வார்த்தைகள் பிள்ளைகளின் வாழ்வில் நெடுங்கால பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து,அவைகளைப் பிள்ளைகளின்மேல் பயன்படுத்தாதபடிக்கு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

## 5. 2. நேர்மறையான சொற்களை பிள்ளைகள்மேல் பயன்படுத்துவதால் வரும் பலன்கள்

தனிப்பெருமை வாய்ந்த கலாச்சாரங்கள் உலகிலே ஏராளம் உண்டு. தங்கள் பிள்ளைகளை நோக்கி எதிர்மறையான சொற்களை சொல்லக்கூடாது என்றே எல்லா கலாச்சாரங்களும் சொல்லுகின்றன. மாறாக அவர்களை நல்ல சொற்களைக் கொண்டு வாழ்த்தவே சொல்லுகின்றன. பெற்றோர் பிள்ளைகள் உரையாடல்களில் நல்ல வார்த்தைகளைப் பிரயோகப்படுத்த ஊக்கப்படுத்துவதே இந்த புத்தகத் தின் நோக்கமாய் இருக்கிறது. தாங்கள் சொல்லும் நல்ல வார்த்தைகள் பிள்ளைகளின் வாழ்க்கையில் நல்ல தாக்கத்தை ஏற்படுத்துகிறவையாக இருக்கின்றன என்பதை பெற்றோரும் பராமரிப்பாளரும் அவசியம் அறிந்துகொள்ளவேண்டும்.

> மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; அதில் பிரியப்படுகிறவர்கள் அதின் கனியைப் புசிப்பார்கள்.
>
> *நீதிமொழிகள் 18:21*

தங்கள் பிள்ளைகளுக்கு நல்ல காரியங்களை நினைப்பவர்கள் நல்ல வார்த்தைகளைத் தெரிந்தெடுக்க வேண்டும். பணம் பொருளைவிட நல்ல வார்த்தைகள் மேலானவையாகும். சொத்து சாபத்தோடே சேர்ந்துவந்தால் அது நிலைக்கப்போவதும் இல்லை, அதை அவர்கள் நீண்ட நாள் அனுபவிக்கப் போவதும் இல்லை. தெரிந்தெடுக்கப்பட்ட நல்ல வார்த்தைகள் பிள்ளைகளின் வாழ்க்கையில் முன்னேற்றத்தை ஏற்படுத்தும் காரியமாக அமையும்.

எனவே பிள்ளைகளிடம் நல்வார்த்தைகளைப் பேசிப்பழக்கப்பட்டுள்ள பெற்றோர்கள், தங்களுடைய பிள்ளைகளின் வாழ்விலே நல்ல நிகழ்வுகளை எதிர்பார்க்க முடியும். தங்கள் ஆசீர்வாத வார்த்தைகள் பிள்ளைகளுக்கு எந்த அளவுக்கு உண்மையாக ஆசீர்வாதமான காரிமாக ஆகும் என்பதைக் குறித்து பெற்றோர் கொண்டிருக்கும் சந்தேகங்களை அவர்கள் எடுத்துப்போட வேண்டும். அவர்கள் தேவனுடைய சத்திய வார்த்தைகளை நம்பி, தொடர்ந்து பிள்ளைகளிடம் நல் வார்த்தைகளையே பிரயோகப் படுத்த வேண்டும்.

## 5.3. தேவனுடைய அறிவுரையின்படி பிள்ளைகளை வளர்த்தல்

தேவனுடைய வார்த்தையே இந்த புத்தகத்தின் ஆதாரமாக இருப்தால், இதனை அந்த மாறாத சத்தியத் தின் வெளிச்சத்திலேயே பார்க்கவேண்டும். பிள்ளைகள் பெற்றோரை கனம்பண்ண வேண்டுமென்று, எழுதப்பட்ட தேவனுடைய வார்த்தை அறிவுறுத்துகிறது. பிள்ளைகளை சரியாக நடத்த அறியும் படிக்கு பெற்றோரானவர்கள் தேவனுடைய வார்த்தையில் நன்கு பழக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும் கட்டளையிடப்பட்டிருக்கிறது. மேலும், வேதம் பெற்றோருடைய பொறுப்பு எத்தகையது என்றும் தெளிவுபடுத்துகிறது. அதற்குக் காரணம் என்னவென்ற ால், பெற்றோர் பிள்ளைகளை தேவனுடைய வார்த்தையில் சரியாக வளர்க்கும்போது அவர்கள் பெற்றோரைக் கன ம்பண்ணுகிறவர்களாக எழும்புவார்கள். ஆகவேதான் தேவனுடைய கற்பனையின்படி பிள்ளைகளை வளர்ப்பது என்பது பெற்றோரி டம் தேவன் எதிர்பார்க்கிற காரியங்களில் ஒன்றாக இருக்கிறது. ஆகவே பிள்ளைகள் சொந்த விருப்பு வெறுப்பின்படியோ, கலாச்சாரத்தின் அடிப்படையிலோ இல்லாமல், தேவனுடைய

வார்த்தையின் படியே வளர்க்கப்பட வேண்டும்.

பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனை யிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

எபேசியர் 6:4

அப்போஸ்தலனாகிய பவுல் எபேசியருக்கு இந்த நிருபத்தை பிள்ளைகள் பெற்றோரைக் கனம்பண்ண வேண்டும் என்று போதிப்பதற்காக மட்டும் எழுதவில்லை, பெற்றோர் பிள்ளைகளை எப்படி வளர்க்க வேண்டுமென்று காட்டுவதற்கு எழுதினான். ஆகையால் பிள்ளைகளை உடைய பெற்றோரும் இனி பிள்ளைப்பெற திட்டம் கொண்டுள்ளவர்களும் தங்கள் பிள்ளை வளர்ப்பு வேத போதனையின் அடிப்டையிலேயே அமைந்திருக்கவேண்டும் என்று அறிந்துகொள்ள வேண்டும். கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனையிலும் என்று சொல்லும்போது, பிள்ளை வளர்ப்பதற்கு சிட்சையோடுகூட போதனையும் தேவை என்று வேதம் நமக்குத் தெரிவிக்கிறது. ஆகவே இதை சரியாக புரிந்துகொண் டோமான ால், பிள்ளைகளை வளர்க்கும் பொறுப்பு என்பது, தேவன் நம்மை எப்படி அன்பினால் பாதுகாத்து பராமரித்து வைத்திருக்கிறாரோ அதுபோல செய்வது என்று அறிவோம்.

நாம் அசட்டையாக இருந்து தீமை பயக்கும் காரியங்களில் இறங்கிவிடக் கூடாது என்று தேவன் நம்மை அறிவுறுத்துகிற ார். சபையிலும் மற்ற இடங்களிலும் நாம் கேட்கும் நல்ல உற்சாகமூட்டும் வார்த்தைகள் நமக்குக் கட்டளைகளாக இராமல், போதனையாக இருக்கிறது. இந்த போதனைகள் நாம் தவறான வழியிலே போய்விடக்கூடாது என்பதற்காக பரிசுத்த ஆவியானவர் மேற்கொள்ளும் முயற்சிகள் ஆகும்.

நாம் இந்த போதனைகளை ஏற்றுக்கொள்ள தவறினாலும், தேவன் நம்மை அரவணைப்போடே தான் நடத்துகிறார். குடும்பமான து, பரம பிதாவின் நடத்துதலைப்பற்றி கற்றுக் கொடுக்கும் பாடசாலையாக இருப்பதாலேயே தேவன் இந்த முறையைக் கையாளுகிறார்.

அதுபோல தேவனால் நடத்தப்படும் பெற்றோராகிய நாமும் நம்முடைய பிள்ளைகளுக்கு வெறும் கட்டளைகளைக் கொடுப்பதற்கு பதிலாக அவர்களுக்கு வழிகாட்டி போதித்து அவர்களை நடத்த வேண்டும். தேவ வார்த்தைக்கு மாற ாக நடந்துகொள்ளுகிறவர்களாகிய பிள்ளைகளையும் நாம் உடனடியாக தண்டித்துவிடாமல், அவர்களை அரவணைப்போடு நடத்தி போதிக்க வேண்டும்.

நாம் ஒவ்வொருவரும் பெற்றோர் பிள்ளைகள் நடத்துத–லின் நினைவுகளை சுமந்தவர்களாக இருக்கிறோம். சில பெற்றே ார் சரியானபடி வளர்க்கப்படாத பிள்ளைகளாக இருப்பார்கள். அவ்விதமான வளர்ப்பு எல்லாருக்கும் இருக்கும் பொதுவான வளர்ப்புமுறை என்று அவர்கள் தவறான நினைப்புகொண்டிருக்க முடியும். அதனடிப்படையில் அவர்கள் தங்கள் பிள்ளைகளையும் அப்படியே வளர்க்க முற்படுவார்கள். நம்முடைய பிள்ளைகள் கட்டுப்படுத்த முடியாத பிள்ளைகளாகவோ சமுதாயத்தில் தகாதவர்களாகவோ உருவாகுவார்களேயாகில், பெற்றோராக நான் எதை செய்யத் தவறினேன் என்றும், பிள்ளை என்னுடைய பொறுப்பிலே இருக்கும்போது நான் செய்ய தவறினது என்ன என்றும் நாம் கேட்டுப் பார்க்கவேண்டும். அப்போது நாம் செய்யக்கூடியது என்று ஏதாவது இன்னும் இருக்குமானால் அதை உடனடியாக செய்து, பிள்ளைகளை சரியான பாதையில் நடத்த முற்பட வேண்டும்.

கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்.

*ஆதியாகமம் 18:19*

இன்று நான் உனக்குக் கட்டளையிடுகிற இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது. நீ அவைகளை உன் பிள்ளைகளுக்குக் கருத்தாய்ப் போதித்து, நீ உன் வீட்டில் உட்கார்ந்திருக்கிறபோதும், வழியில் நடக்கிறபோதும், படுத்துக்கொள்ளுகிறபோதும், எழுந்திருக்கிறபோதும் அவைகளைக்குறித்துப் பேசி,

*உபாகமம் 6:6,7*

மேற்கண்ட இரண்டு வேத பகுதிகளும் பிள்ளைகளை எப்படி சரியாக நடத்தவேண்டும் என்கிறதை போதிக்கிற தேவ வார்த்தைகளாகும். இந்த வசனங்கள் பெற்றோர் பழைய பாரம்பரியங்களையும் வழக்கங்களையும் சார்ந்திருப்பதற்கு பதிலாக தேவனுடைய வார்த்தையையே சார்ந்திருக்கவேண்டும் என்பதை காண்பிக்கிறது. ஆகவே வேதாகமத்தின் அடிப்படையிலேயே பிள்ளைகளை போதித்து நடத்துவது பெற்றோரின் கடமையாக ஆகிறது.

பிள்ளைகளை வளர்ப்பதில், வேத நடத்துதலை கடைபிடித்து தேவனுடைய வார்த்தைக்கு அனுதினம் செவிசாய்க்க வேண்டும். சில பெற்றோருக்கு போதிக்கவும் கற்றுக்கொடுக்கவும் தெரியும் ஆனால் பிள்ளை தவறு செய்யும்போது அதை வழிகாட்டி நடத்த

தெரியாது. பிள்ளைகளை நேசிக்கும் சில பெற்றோருக்கு தவறு செய்யும் பிள்ளைகளைக் கண்டிக்க தைரியம் இருக்காது. பெற்றோருக்குக் கீழ்படியாத பிள்ளை, குற்றத்திற்கு ஏற்ப கண்டிக்கப்பட வேண்டும். பிள்ளைகளை போதிப்பதும் நடத்துவதும் அவர்கள் தேவனுடைய வார்த்தைக்கு விரோதமாக நடக்கும்போது அவர்களைத் திருத்துவதும் தங்களுடைய கடமை என்பதை பெற்றோர் உணர வேண்டும்.

## 5.4. தகப்பன்மார் பிள்ளைகளைக் கோபப்படுத்தக்கூடாது

பிதாக்களே, உங்கள் பிள்ளைகள் திடனற்றுப்போகாதபடி, அவர்களுக்குக் கோபமூட்டாதிருங்கள்.

கொலோசேயர் 3:21

பிள்ளைகளை வளர்ப்பதில் எச்சரிக்கையை கையாளுவது அவசியம் என்பதை பெற்றோர் உணர வேண்டும். பிள்ளைகள் வளர்ந்து வரும்போது, அவர்களுடைய நடவடிக்கைகளில் சரியானது எது? சரியில்லாதது எது? என்பதை அடையாளம் காணவேண்டும். பிள்ளைகளுடைய தீயப்பழக்கங்கள் பிள்ளைகளுடைய எதிர்காலத்தை பாதித்துவிடாதபடிக்கு கவனத்தோடு நடந்துகொள்ளவேண்டும். பிள்ளைகள் சின்ன சின்ன காரியங்களில் சந்தோஷப்படுவார்கள், அதேபோல சின்ன சின்ன காரியங்களில் சோர்வடைவார்கள் இந்த உண்மையை பெற்றோர் அறிந்திருக்கவேண்டும். எனவே பிள்ளைகள் ஆசைப்பட்டு கேட்கும் காரியத்தில் உறுதியாக இருப்பதற்கு பதிலாக சற்று

வளைந்துகொடுத்து போக பெற்றோர் அறிய வேண்டும்.

பிதாக்களே, நீங்களும் உங்கள் பிள்ளைகளைக் கோபப்படுத்தாமல், கர்த்தருக்கேற்ற சிட்சையிலும் போதனை யிலும் அவர்களை வளர்ப்பீர்களாக.

*எபேசியர் 6:4*

பெற்றோரே உங்கள் பிள்ளைகளை தேவனுடைய வார்த்தையின்படி வளர்த்திடுங்கள். ஆனால் அரவணைப்பில்லாமல் பிள்ளைகளை நடத்தாதீர்கள். அரவணைப்பில்லாத வளர்ப்பு, பிள்ளைகளின் மனதில் கசப்பை ஏற்படுத்தி, அவர்களை எதிர்மறை யான நடைக்கை உள்ளவர்களாய் மாற்றிவிடும். அது மேலும் அதிகமான கசப்புகளையும் எதிர்மறையான நடக்கையையும் விளைவிக்கிறதாக ஆகிவிட முடியும்.

பிள்ளைகள் கோபப்படுத்தப்படுவதால் கசப்பான பிள்ளை–பெற்றோர் உறவு ஏற்பட்டுவிடக்கூடாது. இதைக் குறித்து பெற்றே ார் அதிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

## 5. 5. சரியான நடக்கைக்கு பிள்ளைகளை ஊக்கப்படுத்துதல்

பிள்ளைகளின் நடக்கை சரியாக இருக்கவேண்டுமானால் பெற்றோர் தங்கள் நடக்கை சரியாக இருக்கும்படி பார்க்க வேண்டும். ஏனென்றால் பெற்றோரின் நடக்கைக்கு ஏற்பதான் பிள்ளைகளின் நடக்கை இருக்கும். பெற்றோரிடம் காணுவதும் கேட்பதுமான காரியங்கள், பிள்ளைகளை வாழ்நாள் பூராவும் பாதிக்கிற காரியமாக அமையும். பெற்றோரிடமிருந்து பிள்ளை முதல் ஆறு வருஷங்களில் கற்றுக்கொள்ளும் காரியங்கள்தான் அதனுடைய அறுபது முதல் எழுபது சதவித வாழ்வை தீர்மானிக்கிறது என்று ஆராய்ச்சிகள் சொல்லுகின்றன. அப்படி இருக்கும்போது எத்தனை பெரிய பொறுப்பை நாம் சுமக்கிறோமென்பதை பெற்றோர் சரியாக உணர்ந்துகொள்ள வேண்டும். நல்லது கெட்டதை சரியாக நிதானிக்கக் கூடியவர்களாக பிள்ளைகளை பயிற்றுவித்து நாம் உருவாக்க வேண்டும்.

பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.

*நீதிமொழிகள் 22:6*

இத்தனை கருத்தாக பிள்ளையை வளர்ப்பதன் நோக்கம் அவர்கள் முதிர்வயதிலே கனித்தருபவர்களாக எழும்பவேண்டும் என்பதுதான். பிள்ளைகளின் இளம்பிராயத்தில் மனதில் என்ன பதிகிறதோ அது அவர்கள் வாழ்நாள் முழுவதும் அவர்களோடிருக்கிற காரியமாக ஆகிவிடும். ஆகவே, பெற்றோர் பிள்களுக்கு என்ன சொல்க்கொடுக்கிறோம் என்பதைக்குறித்து அதிக எச்சரிக்கையாக இருக்க வேண்டும். உதாரணத்துக்கு, பிள்ளைக்கு முன்னால்

பெற்றோர் பொய் சொல்வார்களேயாகில், பொய் சொல்லுவது குடும்பத்திற்குள்ளேயும் சமுதாயத்திலும் சாதாரணமான காரியம் என்று பிள்ளையின் மனதிலே பதிந்துவிடும். "ஓநாய் வருகிறது, பூதம் வருகிறது" என்று பிள்ளைகளிடம் சொல் பயமுறுத்தும் பழக்கம் எத்தியோப்பியாவிலே உண்டு. அப்படிபட்ட மூட நம்பிக்கையான வார்த்தை களை பிள்ளைகளிடம் சொல்லுவதால், பிள்ளையின் பகுத்தறிவு வெகுவாக பாதிக்கப்பட்டுப்போகும். பொய்யான வாக்குகளைப்பண்ணுவது மற்றொரு கெட்ட பழக்கம். பிள்ளைகள் செய்யவேண்டிய கடமைகளை சரிவர செய்தால் அவர்களுக்கு ஏதாகிலும் வாங்கித் தருவோம் என்று நாம் வாக்கு பண்ணுவதுண்டு. நம்முடைய வாக்கை நாம் காப்பாற்ற வேண்டும் என்று பிள்ளை எதிர்பார்க்கும். ஆனால், ஒன்று அதை மற ந்துவிடுகிறோம் அல்லது, அதை அலட்சியம் செய்துவிடுகிறோம். இது பிள்ளைகளை பாதித்து அவர்களும் அப்படியே பொய்யாக வாக்குபண்ணுகிறவர்களாக வளர்ந்து வருவார்கள்.

பிள்னைகளை நல்ல ஒழுக்கத்திலே வளர்த்திட வேண்டும் என்று கர்த்தர் அவர்களை நம்மிடம் ஒப்படைத்திருக்கிறார். பிள்ளைகள் வளர்ந்து வரும்போது அவர்கள் மற்ற பிள்ளைகளிடமிருந்தும் வேறு வழிகளிலும் அநேக காரியங்களைக் கற்றுக்கொண்டாலும், பெற்றோரின் அறிவுரையும் வழி நடத்துதலும் அவர்களை அதிகம் உருவாக்கி வனைகிறதாக இருக்கிறது.

பிள்ளைகளை வளர்ப்பதைக் குறித்து பல பழமொழிகளும் வழக்கச் சொற்களும் எத்தியோப்பியாவிலே உண்டு. பெற்றே ாரின் வளர்ப்பை மதிப்பிடும் வழக்கச் சொற்களும் உண்டு, அவைகளில் ஒன்று "மகளுடைய நடத்தை, தாயினுடைய குணத்தை காட்டுகிறது" என்பதாகும். "உள்ளே நுழைவதற்கு முன்பு, வெளி வாசலை கவனியுங்கள்" என்பது மற்றொன்று. தாய்

கோபக்காரியாக இருப்பாளேயாகில், மகளும் கோபக்காரியாக இருக்க வாய்ப்பு உண்டு என்று அந்த வழக்கச்சொல் காட்டுகிறது. அதேபோல தாய் பொறுமைசாயாக இருந்தால், மகளும் அப்படியே பொறுமையைக் கையாளுகிறவளாக இருப்பாள் என்றும் எதிர்பார்க்கலாம்.

முற்கோபம் கொண்ட பெற்றோருடைய பிள்ளைகள் பெரும்பாலும் மற்றவர்களுடன் சமூக உறவு கொள்ள முடியாதவர்களாகவும் கட்டுப்படுத்த முடியாத குழந்தைகளாகவும் இருப்பதை காண முடியும். அதே போல, தெய்வ பயமுள்ள பெற்றோரின் பிள்ளைகள் தங்கள் பெற்றோருக்கு இருக்கும் அதே மனப்பான்மையோடே சமூகத்தில் பிறரோடு பழகுவதை காண முடியும்.

பிள்ளைகளை பண்புள்ளவர்களாக வளர்ப்பது பெற்றோருக்கும் சமுதாயத்திற்கும் பயனுள்ளதாக இருக்கும். ஏனெனில் இந்த முதலீட்டிற்கான பலனை அவர்கள் பிள்ளைகள் வளர்ந்து பெரியவர்கள் ஆகும் போது காணுவார்கள். எனவே விரும்பப்படாத விதத்தில் வெட்கத்தை உண்டுபண்ணுகிறவர்களாக பிள்ளைகளை வளர்க்காமல், அவர்களை தேவனுடைய வார்த்தையின்படியே வளர்த்திட வேண்டும்.

## 5. 6. தெய்வீக தயையோடே பிள்ளைகளை ஆசீர்வதித்தல்

விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான். விசுவாசத்தினாலே யாக்கோபு தன் மரணகாலத்தில் யோசேப்பினுடைய குமாரர் இருவரையும் ஆசீர்வதித்து, தன் கோலின் முனையிலே சாய்ந்து தொழுதுகொண்டான்.

*எபிரெயர் 11:20,21*

வாழ்க்கையில் பிள்ளைகள் முன்னேற்றமடைந்து வெற்றியை காணத்தக்கதாக பெற்றோர் அவர்களை ஆசீர்வதித்துக்கொண்டே இருக்கிறவர்களாக இருக்கவேண்டும். இந்த நல்ல வழக்கம் சில பெற்றோருக்கு உண்டு. அவர்கள் அதற்கான நல்ல பலனை அறுக்கிற ார்கள். அது அவர்கள் தங்கள் பெற்றோரிடமிருந்து சிறுவயதில் பெற்ற ஆசீர்வாத்தின் விளைவாக இருக்கக்கூடும். அவர்கள் மற ந்துகூட இந்த ஆசீர்வாதத்தின் தொடர் பாதிக்கப்படாதபடி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். அவர்கள் தங்கள் பெற்றே ாரிடமிருந்து பெற்ற ஆசீர்வாதங்களை தங்கள் பிள்ளைகளுக்கு கடந்துபோக வேண்டும்.

தங்கள் வாயின் வார்த்தைகளுக்கு எத்தனை வல்லமை உண்டு என்பதை உணர்ந்த பெற்றோர் எதிர் மறையான வார்த்தைகளை தங்கள் பிள்ளைகள்மேல் பிரோகிக்கியாதிருக்கவேண்டும். நல்வார்த் தைகளோ தீயவார்த்தைகளோ, எதுவானாலும் பிள்ளைகள்மேல் பிரோகிக்கப்படும்போது அது ஆவிக்குரிய ரீதியில் அவர்களை நிச்சயம் பாதிக்கிறது. அந்தவிதமான பாதிப்பு ஆவிக்குரிய ரீதியி

லேயே சரிசெய்யப்பட வேண்டியதாயிருக்கும். பிள்ளைகள் குழந்தைகளானாலும் வாலிபரானாலும் அவர்கள் நன்கு போற்ற ப்படும் வாழ்க்கையை வாழுகிற நபர்களாக ஆவதற்கு, அவர்களுக்கு உற்சாக மூட்டும் வார்த்தைகள் அவசியமாக இருக்கிறது.

தேவன் உனக்கு வானத்துப்பனியையும் பூமியின் கொழுமையையும் கொடுத்து, மிகுந்த தானியத்தையும் திராட்சரசத்தையும் தந்தருளுவாராக.

*ஆதியாகமம் 27:28*

பிள்ளைகள் பெற்றோரால் ஆசிர்வதிக்கப்படுவது யூத கலாச்சாரம். அந்த வழக்கமே யூதர்களின் பலத் திற்குக் காரணமாக இருக்கிறது. ஆகவேதான் ஈசாக்கு யாக்கோபின்மேல் விசுவாசத்தோடு ஆசீர்வாதங் களை கொட்டினான். ஈசாக்கினுடைய முன்னுதாரணத்தின்படியே பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு ஆசீர்வாதங்களைக் கடந்துபோகச் செய்கிறவர்களாக இருக்கவேண்டும். பிள்ளைகளை ஆசீர்வதிக்கும் பழக்கத்தை உறுதியாக யூதர்கள் கடைபிடித்தார்கள். பயங்கரமான பின்விளைவுகளை பற்றி எண்ணிப் பார்க்காமல் பிள்ளைகளை சபிப்பவர்கள் யூதர்களிடமிருந்து இந்த காரியத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும். தீய வார்த்தைகளைப் பேசிவிட்டால், உடனடியாக மன்னுப்புக்கோரி, அதற்கு பதிலாக நல்வார்த்தைகளைச் சொல்லி,சொல்லப்பட்ட தீய வார்த்தைகளை நிவிர்த்தி செய்துவிட வேண்டும்.


தன்னுடைய திருமணத்திற்கு முன்பு தன் தாயிடம் ஆசீர்வாதத்தை வேண்டி போன ஒரு நபரை பற்றி நான் கேள்விப்பட்டேன். அவருடைய தாயார் வயல் வெளியிருந்து பசுமையான புல்லையும், தேனையும், பாலையும் கொண்டு அவரை ஆசீர்வதித்தாராம்.

பசுமையான புல்லை அவர் முகர்ந்து பார்த்து விட்டு, "மகனே உன்னுடைய வாழ்வு முழுவதும் இந்த பசும் புல்ன் நறுமணத்தோடு இருப்பதாக" என்றாராம். அடுத்து அந்த புல்லை தேனிலும் பா–லும் முக்கி எடுத்து, "உன் வாழ்வு முழுவதும் தேசத்திலும் உன் சக ஊழியர் மத்தியிலும் இனிமையானதமாக இருப்பதாக." என்று சொல்விட்டு, தான் சொன்ன ஆசீர்வாதங்களை அவருக்கும் மெய்ப்பிப்பதற்காக தேனிலும் பாலும் முக்கப்பட்ட பசும் புல்லை தம்முடைய வாயினால் சுவைத்தாராம். அதன்பின்பு அவர் அவரை கட்டியணைத்து முத்தம் செய்தாராம்.

பாரம்பரிய மதங்களைப் பின்பற்றுவோர் மத்தியில்கூட ஆசீர்வாதமான வார்த்தைகளுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவத்தை இந்த நிகழ்ச்சியின் மூலமாக அறிகிறோம். தேவனை அறியாத அந்த தாய் தன்னுடைய ஆசீர்வாதமான வார்த்தைகள் தம்முடைய மகனை உயர்த்தும் என்று நம்புவாரான ால் கிறிஸ்தவ தாய் எத்தனை அதிகமாக நம்ப வேண்டும்? தேவ ஜனமே, உற்சாகமூட்டும் வார்த்தைகளால் உங்கள் பிள்ளைகளை ஆசீர்வதித்து பெற்றோருக்கான உங்கள் கடமையை நிறை வேற்றுங்கள்.

# அத்தியாயம் ஆறு

## ஆவிக்குரிய தகப்பன்மாரைக் கனப்படுத்துதல்




உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைக ளென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன்.

கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்.

*1 கொரிந்தியர் 4:14,15*

அத்தியாயம் 6

# ஆவிக்குரிய தகப்பன்மாரைக் கனப்படுத்துதல்

## 6. 1. தெய்வீக நடத்துதல் தகப்பனின் நடத்துதல்

முந்தின அத்தியாயங்களில் நாம் கண்டபடி தெய்வீக நடத்துதலும் பெற்றோருடைய வழிகாட்டுதலும் ஒன்றுக்கொன்று நெருங்கினதாக இருக்கின்றது. சபைகளிலே கர்த்தர் எதிர்பார்க்கும் தலைமைத்துவம் உலகத்திலே காணப்படும் தலைமைத்துவத்தைவிட வித்தியாசமானதாகும். உலகத்திலே தலைவர்கள் ஆரம்பத்திலே, மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டு தலைவர்களாக ஆகிறார்கள். பிற்பாடு அந்தத் தலைவர்கள் தங்கள் போக்கிற்கு செயல்படுகிறவர்களாக ஆகிவிடுகிறார்கள். ஆனால் சபைகளிலே தலைமைத்துவமானது, தகப்பனைப்போல அக்கரையெடுக்கும் தலைமைத்துவமாக இருக்கிறது.

மாம்சீக தகப்பன் இருப்பதுபோலவே நமக்கு ஆவிக்குரிய தகப்பன்கள் உண்டு. நம்முடைய மாம்சீக தகப்பனுக்கு எப்படி நாம் அக்கரை எடுத்து கனம் கொடுக்கிறோமோ அதுபோல நம்முடைய ஆவிக்குரிய தகப்பன்களையும் கனம்பண்ண வேண்டும். நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியின்போது நமக்குத் தோல்விகள் ஏற்பட்டபோதெல்லாம் வெறுத்துவிடாமலும், வெட்கப்படுத்தாமலும், நம்மை நடத்தி வந்தது, ஆவிக்குரிய தகப்பன்கள் செய்த அரும்பணியாகும். சபையின் கண்களிலும் சமுதாயத்திற்கு முன்பாகவும் நாம் ஆவியில் முதிர்ச்சி அடையத்தக்கதாக அவர்கள் தங்கள் வாழ்நாட்களை நமக்காக தியாகம் செய்திருக்கிறார்கள். அவர்கள்

நமக்காக சுமந்த பாரங்களை எல்லாம் பார்க்கும்போது, அவர்களுடைய ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நம்மால் அவர்கள் கனம்பண்ணப்பட வேண்டியவர்களாய் இருக்கிறார்கள் என்று உணர்ந்துகொள்ளுவோம்.

தகப்பன் என்று சொல்லும்போது அது ஆண்களை மாத்திரம் குறிக்கிறதாய் தெரியலாம். ஆனால் இது ஆண்களை மாத்திரமல்ல, ஆவிக்குரிய வழிநடத்துலைத்தந்து பின்னடியாரை நடத்தும் அத்தனை பேரையும் உள்ளடக்கிய வார்த்தையாக இருக்கிறது. எனவே நாம் தகப்பன் என்று சொல்லும்போது தலமைத்துவம் தாங்கி செயல்படும் தாய்மார்களையும் குறிக்கிற வார்த்தையாக அது இருக்கிறது. பெண்கள் இந்த ஊழியத்தில் பெரும் பங்கு வகிப்பவர்களாக இருப்பதால், இந்த ஊழியத்தின் பலனைப்பற்றி பேசும்போது அவர்களுக்குரிய அங்கீகாரத்தை நாம் கொடுத்தே ஆக வேண்டும்.

நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக.

*மத்தேயு 6:9*

மேற்கண்ட வார்த்தைகள் இயேசு ஜெபிக்க கற்றுக்கொடுக்கும் போது சொன்னது. அதிலே தேவனை விசுவாசிக்கிறவர்கள் அவரை, தவறுகளுக்குத் தண்டனையளிக்கும் சர்வாதிகாரியாக காணுவதற்கு பதிலாக, அவரை பாசமிகும் தகப்பனாக காணவேண்டும் என்றே விரும்பினார். எனவே தேவனைப் பற்றி நாம் நினைக்கும்போது, அவரை நாம் நம்முடைய தந்தையாகவே காணவேண்டும். அப்படி பார்க்கும்போது, திருச்சபையில் தேவன் தரும்

வழிநடத்துதல்கள் தகப்பனுடைய நடத்துதலாகவே இருக்கும்.

ஆகவே, சபையிலும் சமுதாயத்திலும் கர்த்தர் ஏற்படுத்தித் தரும் தலமைத்துவங்களும் தகப்பனுடைய வழிநடத்துதன்படியே இருக்கும் காரியங்களாய் இருக்கின்றன. அப்படி இருப்பதால் இந்த தலைவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கும் அதிகாரங்கள் அனை த்தும் அதிகார தோரணையில் செலுத்தப் படாமல், தகப்பனுடைய ஸ்தானத்திருந்து பிரயோகிப்படுபவையாகவே இருக்கவேண்டும். எனவே போதக பொறுப்புகள் தகப்பனுடைய பொறுப்புகளாக ஆகின்றன. ஆவிக்குரிய தலமைத்துவங்கள் அனைத்தும் அன்பும் கரிசனையும் கொண்டு செயல்படுத்தப்படும் நடவடிக்கையாக பரம தகப்பனை பிரதிபப்பவையாக இருக்கவேண்டும்.

குமாரன் தன் பிதாவையும், ஊழியக்காரன் தன் எஜமானையும் கனம் பண்ணுகிறார்களே; நான் பிதாவானால் என் கனம் எங்கே? நான் எஜமானானால் எனக்குப் பயப்படும் பயம் எங்கே? என்று சேனைகளின் கர்த்தர் தமது நாமத்தை அசட்டைபண்ணுகிற ஆசாரியர்களாகிய உங்களைக் கேட்கிறார்; அதற்கு நீங்கள்: உமது நாமத்தை எதினாலே அசட்டைபண்ணினோம் என்கிறீர்கள்.

*மல்கியா 1:6*

தேவன் தெய்வ பக்திக்கும் தகப்பனுக்குரிய மரியாதைக்கும் பாத்திரராய் இருக்கிறார். தேவன் தாம் அளிக்கும் பாதுகாப்பிற்கும் பராமரிப்புக்கும் உரிய கனத்தைப் பெற தகுதியுள்ளவராய் இருக்கிற ார். இந்த மதிப்பும் கனமும் தேவனுக்கு மட்டும் அல்ல அவரால் ஏற்படுத்தப்பட்ட ஆவிக்குரிய தலைவர்களுக்கும் பொருந்தும்.

இந்த காரணத்தால் பூமியிலே தேவனுடைய சித்தத்தை நிறை வேற்றும்படி தேவனால் ஏற்படுத்தப்பட்ட தேவதாசர்களை நாம் அடையாளம் கண்டு, அவர்களுக்கான கனத்தைக் கொடுக்க வேண்டும்.

அதுபோலவே ஊழியத்தில் உள்ளவர்களும் தங்களுக்குமேல் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மூத்த ஊழியரைக் கன ம்பண்ண வேண்டும்.

தகப்பனுடைய உரிமைகள் பிள்ளையை பெற்றதினால் மட்டும் வந்துவிடுவதில்லை. அது அவர்கள் நடக்கையின் அடிப்படையில் அவர்களுக்குக் கிடைக்கப்பெறுவதாகும். இதனடிப்படையில் பார்க்கப் போனால், சபையிலே தேவனைப்பற்றும் அறிவும் உணர்வும் கொண்ட தகப்பனுடைய அன்புள்ளவர்களால் நடத்தப்படுவதே, பூமியிலே வரவேண்டுமென்று நாம் ஜெபிக்கிற தேவனுடைய ராஜ்யமாய் இருக்கிறது.

மனிதர்களைக் குறித்த தேவனுடைய திட்டம், பெற்ற தாய் தகப்பனையும் ஆவிக்குரிய தகப்பபன்மா ரையும் கனப்படுத்துவதின ால் விளையும் ஆசீர்வாதத்தின் அடிப்படையிலேயே உள்ளது என்பதை கவனத்தில் கொள்ளவேண்டும். நீடித்த வாழ்வையும் வளமையையும் நாடுவோர் தேவனுடைய இந்த வழிமுறையின் மூலமாகவே அவைகளை அடைய முடியும். பூமியிலே தேவனால் ஏற்படுத்தப்பட்ட அதிகாரிகளாய் இருப்பவர்கள் சொல்லும் வார்த்தைகள் வல்லமையும் நிரந்தரமுமானவை என்பதை பிள்ளைகளும் ஊழியருக்குக் கீழ் பணிபுரிபவரும் உணர்ந்துகொள்ள வேண்டும்.

அதே சமயம், ஆவிக்குரிய தலைவர்கள் தேவன் தங்களுக்குக் கொடுத்துள்ள பொறுப்புகளைக் குறித்து தேவனுக்குக் கணக்கு ஒப்புவிக்க வேண்டுமென்கிற எண்ணத்தில், கடமையுணர்வோடு நிறைவேற்ற வேண்டும். தேவனுடைய அழைப்புக்கு இணங்க அவர்கள் மற்றவர்கள் முன்பாக தாழ்மையும் சுத்தமுமாக நடந்துகொள்ள வேண்டும்.

## 6. 2. நம்முடைய வாழ்வில் தகப்பனாக பணியாற்றினோரை அடையாளம் காணுதல்

உங்களை வெட்கப்படுத்தும்படிக்கு நான் இவைகளை எழுதவில்லை, நீங்கள் எனக்குப் பிரியமான பிள்ளைகளென்று உங்களுக்குப் புத்திசொல்லுகிறேன். கிறிஸ்துவுக்குள் பதினாயிரம் உபாத்தியாயர்கள் உங்களுக்கு இருந்தாலும், தகப்பன்மார் அநேகர் உங்களுக்கு இல்லையே; கிறிஸ்து இயேசுவுக்குள் சுவிசேஷத்தினால் நான் உங்களைப் பெற்றேன்.

*1 கொரிந்தியர் 4:14,15*

மாம்சீக பிரகாரமாக பார்க்கும்போது நம்மைப்பெற்ற தகப்பன் மட்டுமே நமக்கு தகப்பன் என்கிற உரிமையைக் கொண்டாட முடியும். அண்டை வீட்டாரோ நெருங்கினவர்களோ யாரும் அந்த உரிமையைக் கோர முடியாது.

இதே தத்துவம்தான் ஆவிக்குரிய தகப்பன் என்கிறதிலும் உண்மையாக இருக்கிறது. மேற்கண்ட வசனத்தின்படி ஒரு சாராருக்கு ஆவிக்குரிய தகப்பனாக இருப்பவர்கள், வேறே

சாராருக்கு தகப்பனாக இருக்கமாட்டார்கள். சுவிசேஷகரோ, பிரசங்கியாரரோ, ஏதோ ஒரு சமயம் நமக்கு போதித்ததினால் அவர்கள் நம்முடைய ஆவிக்குரிய தகப்பனாக ஆகிவிடமாட்டார்கள். ஆவிக்குரிய தகப்பனுடைய உண்மையான தன்மை அவருடைய மேய்ப்பனின் குணம், வழிநடத்தல் மற்றும் ஆவிக்குரிய அனுபவங்களில் கொண்டுபோகுதல் ஆகியவற்றில் இருக்கிறது. "கிறிஸ்துவின் சுவிசேஷத்தால் நான் உங்கள் தகப்பன் ஆனேன்" பவுல் சொல்லும்போது, அதைத்தான் குறிப்பிடுகிறான். காரியம் இப்படி இருப்பதினால் நம்முடைய வாழ்வில் அதிக பிரயாசங்களை எடுத்து நம்மை சத்திய வார்த்தைக்குள் நடத்திய தேவமனுஷர்கள் நம்முடைய ஆவிக்குரிய தகப்பன்களாக இருக்கிறார்கள். நம்முடைய ஆவிக் குரிய வளமைக்குக் காரணமான அவர்களை நாம் அடையாளம் காணுவது அவசியம். அநேகருடைய வாழ்விலே தாக்கத்தை ஏற்படுத்திய அல்லது ஏற்படுத்திக்கொண்டிருக்கிற அந்த தகப்பன்கள் தற்போது நம்மோடு இல்லை என்றாலும் அவர்களை கனப்படுத்துவது அவசியம்.

அதே சமயம், தங்களுடைய சுயநலனுக்காக உள்நோக்கோடு தாங்கள் சபையில் பொறுப்பிருப்பதால், "உங்கள் ஆவிக்குரிய தகப்பன்கள் தாங்கள்தான்" என்று கூறிக்கொள்ளுவோரின் கூற்றுக்கு நாம் முக்கியத்துவம் கொடுக்கவேண்டிய அவசியம் ஏதுமில்லை.

எங்களுடைய நாட்களில் ஆவிக்குரிய தகப்பனாக இருக்க விரும்புவோர், பவுலைப்போல அன்போடும் அக்கரையோடும், கண்டிப்போடும், சீர்திருத்தலோடும் செயல்பட்டார்கள். ஒருமுறை, பின்வரும் காரியத்தை பவுல் தன்னுடைய ஆவிக்குரிய பிள்ளைகளுக்கு சொல்லுகிறான்.

உங்களுக்கு என்னவேண்டும்? நான் பிரம்போடு உங்களிடத்தில் வரவேண்டுமோ? அல்லது அன்போடும் சாந்தமுள்ள ஆவியோடும் வரவேண்டுமோ?

*1 கொரிந்தியர் 4:21*

ஆகவே ஆவிக்குரிய தகப்பன்மார்கள் நம்முடைய வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தியவர்கள் மட்டுமல்ல, அவர்கள் எத்தனை தூரத்திருந்தாலும் நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கையின்மேல் கரிசைனைக்காட்ட ஏற்படுத்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள். எனவே பிள்ளைகளாகிய நாம் அவர்கள் சொல்லுக்கு செவிகொடுக்க கடமைபட்டிருக்கிறோம். அப்படி நாம் செவிகொடுக்காத பட்சத்தில், பவுல் கொரிந்தியருக்கு செய்ததுபோல, நம்மை சிட்சிக்க அவர்களுக்கு அதிகாரம் இருக்கிறது.

இதினிமித்தமாக, எனக்குப் பிரியமும், கர்த்தருக்குள் உண்மையுமுள்ள என் குமாரனாகிய தீமோத்தேயுவை உங்களிடத்தில் அனுப்பினேன்; நான் எங்கும் எந்தச் சபையிலும் போதித்துவருகிறபிரகாரம் கிறிஸ்துவுக்குள்ளான என் நடக்கைகளை அவன் உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்.

*1 கொரிந்தியர் 4:17*

மேற்கூறிய வசனத்திருந்து தீமோத்தேயு எத்தனை உண்மையுள்ளவனாய் இருந்தான் என்பதை நாம் கவனிக்க வேண்டும். அவனுடைய ஆவிக்குரிய தகப்பனாகிய பவுல் வெளிப்படையாக கர்த்தருக்குள் என் குமாரன் என்று அவனைக் குறிப்பிடுகிறான். பவுல் தீமோத்தேயுவை தன்னுடைய வாரிசு

என்று சொல்லும் அளவுக்கு தீமோத்தேயுவின் கீழ்படிதலும் ஆவிக்குரிய வளர்ச்சியும் இருந்தது. இது தகப்பன் குமாரன் என்கிற உறவுக்குள்ளாக வந்திருக்கும் இரண்டு நபர்களைத் தெளிவாகக் காட்டுகிறது.

## 6. 3. தலைமுறைக்குப் பிதாக்களாக நின்று பணியாற்ற அழைக்கப்பட்டோரை அங்கீரித்தல்

வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு ஊழியங்களை செய்ய தேவ தாசர்கள் அழைக்கப்படுகிறார்கள். அப்படி இருக்கிற படியால் எல்லா தேவமனுஷரும் ஒரே ஊழியத்தை செய்ய அற்பணிக்கப்பட்டிருக் கிறார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது. ஒரு சிலர் சபைகளிலே பிதாக்களாக இருந்து செயல்பட அழைக்கப்பட்டிருப்பார்கள். வேறு சிலர் தேசமெங்கும் போய் பிரசங்கிக்கிற அழைப்பைப் பெற்றிருப்பார்கள். இன்னும் சிலர் அடுத்தத் தலைமுறையை பராமரிக்கும் பொறுப்பை பெற்றிருப்பார்கள்.

ஊழியங்களிலே இத்தனை வித்தியாசங்கள் இருப்பது தேவனுடைய ராஜ்ய பணியிலே தம்முடைய தாசர்களுக்கு தேவன் வைத்திருக்கும் வித்தியாசமான திட்டங்களைக் காட்டுகிறது. நம்முடைய ஆவிக்குரிய தகப்பனை நாம் கனம்பண்ண வேண்டுமான ால், முதலாவது அவர்களது ஊழியத்தை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும்.

தங்கள் ஊழியத்தை சரியாக நிறைவேற்றின ஆவிக்குரிய தகப்பன்கள் சரித்திரத்திலே இருக்கிறதை நாம் காண முடியும். சமீபத்திய எடுத்துக்காட்டாக மார்டீன் லூத்தர் அவர்களை

கடந்து, உள்ளூர் சபையையும் தாண்டி, பற்பல பேரை சந்திக்கிற ஒன்றாக இருந்தது. லூத்தர் அவர்களின் போதனைகள் பல தலைமுறைகளிலுள்ள லட்சோப லட்ச மக்கள் ஏற்றுக்கொண்டு, உடன்படுகிறவையாக இருக்கின்றன. எனவே தேவனுடைய கிருபையினாலும், அழைப்பினாலும், எழும்பிய சபைக்குள் உள்ள ஊழியரையும் நம்முடைய பிராந்தியத்தையோ தேசத்தையோ தழுவிய ஊழியரையும் நாம் அடையாளம் காண வேண்டும்.

## 6. 4. தகப்பனாக பாத்திரம் வகிப்போரின் அசவசியம்

தகப்பனோ தாயோ இல்லாது வளரும் பிள்ளைகள், தீமையில் அகப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம். அதுபோலவே ஆவிக்குரிய வழிநடத்துதல் இல்லாமல் வளருபவரும் ஸ்திரமான ஆவிக்குரிய நிலையில்லாதிருக்கிறதை நாம் காண முடியும். மாற ாக நல்ல ஆவிக்குரிய நடத்துலை பெற்றவர்கள் ஆரோக்கியமான வசனங்களும் நல்ல முன்மாதிரியையும் கொண்டவர்களாக இருந்து நன்றாக வளர்ந்து வருவார்கள். தன்னுடைய முன் மாதிரியான வாழ்க்கையைக் குறித்து பவுல் இப்படியாக சொல்லுகிறான்:

> நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கிவிட்டார்.
>
> *2 தீமோத்தேயு 3:10,11*

என் நடக்கைகளை அவன் (தீமோத்தேயு) உங்களுக்கு ஞாபகப்படுத்துவான்.

*1 கொரிந்தியர் 4:17*

தகப்பன் என்று அழைக்கப்படுவதும் ஆவிக்குரிய தகப்பனுடைய நிழலில் வளர்க்கப்படுவதும் பெருமை பாராட்டிக்கொள்ளும் காரியம் அல்ல. நான் ஏற்கனவே சொன்னதுபோல ஆவிக்குரிய தகப்பன் என்பவர் ஊழியத்திற்கான வாசல்களைத் திறந்துதரும் ஒரு நபர் அல்ல. மாறாக அவர் வசனத்தின்படி ஜீவித்து, பின்பு ஊழியஞ்செய்ய நமக்குக் கற்றுத் தருபவராக இருக்கிறார். ஆவிக்குரிய தகப்பனைக் கொண்டிருப்பது நல்ல காரியந்தான் என்றாலும், அந்த நபர் வசனத்தின் ஜீவிக்கிறவராக இருக்கிறரா என்று பார்த்துதான் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். நாம் ஆவிக்குரிய தகப்னாகப் பின்பற்றப்போகும் நபர், தம்முடைய அழைப்புக்கு உண்மையுள்ளவராக இருந்து நல்ல முன்மாதிரியான நடக்கையை கொண்டவராக இருக்கவேண்டும். ஆகவே நாம் தம்முடைய அழைப்புக்கு உண்மை உள்ளவராக இல்லாதவரும், தங்களை தகப்பன் போல காட்டிக்கொள்ளுபவருமானவரை நாம் நம்பிவிடக்கூடாது. நாம் ஆவிக்குரிய தகப்பனாகத் தெரிந்தகொள்ளும் நபரின் தன்மை நம்மை பாதிக்கிற ஒன்றாக இருக்கப்போவதினால், நாம் இந்த விஷயத்தில் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

நம்முடைய ஆவிக்குரிய தகப்பனை நாம் தெரிந்துகொண்டபின்பு நாம் அவருடைய போதனைகள், அவர் வாழும் முறை, அவருடைய நோக்கம், விசுவாசம், பொறுமை, சகிப்புத்தன்மை, ஆகியவற்றை பார்த்து, அவற்றை நம்முடைய வாழ்வில் செயல்படுத்தி, அவருடைய அடிச்சுவடை பின்பற்ற வேண்டும். எப்படி

நாம் பிரதிபலிக்கிறோமோ, அதேபோல ஆவிக்குரிய தகப்பனுடைய நல்ல குண நலன்களையும் நம்முடைய வாழ்வில் நாம் பிரதிப–க்க வேண்டும்.

ஆவிக்குரிய தலைவர்களுடன் எப்போதுமே நல்ல தொடர்புடன் இருந்துகொண்டே இருப்பது வரவேற்க தக்க காரியமாகும். இந்த உறவு நல்ல பலனைக் கொடுக்கவேண்டும் என்றால், தீமோத்தேயுவுக்கு பவுல் செய்ததுபோல அவர்களுடைய வாழ்வை இவர்கள் எப்போதுமே சீர்தூக்கி பார்க்கிறவர் களாகவும், கற்றுக்கொடுக்கிற வர்களாகவும், போதிக்கிறவர்களாகவும் சரியான வழியிலே அவர்களை நடத்துகிறவர்களாகவும் இருக்கவேண்டும்

## 6. 5. தகப்பன்களான தலைவர்கள் மதிக்கப்பட வேண்டும்

எவனைக் கனம்பண்ணவேண்டியதோ அவனைக் கனம்பண்ணுங்கள்.

ரோமர் 13:7

தாயும் தகப்பனும் அதிக பாரங்களைச் சுமந்து தங்கள் கடமைகளை நிறைவேற்றினவர்களானபடியால், அவர்கள் கனம்பண்ணப்பட வேண்டும் என்பது தேவகட்டளை ஆகும். ஆவிக்குரிய தகப்பன்மாரும் அதேபோல நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தவர்களானபடியால் அவர்களும் கனத்துக்குப் பாத்திரராக ஆகிறார்கள். தகப்பன்மார்கள் மதிக்கப்படும்போது அவர்கள் தங்கள் கடமைகளை திருப்தியுடன் செய்வார்கள், அப்படி நிறைவுடன் செய்யப்படும் கிரியைகள்

பன்மடங்கு நற்பலனைத் தருகின்றனவாகவும் இருக்கும்.

இந்த காரணத்தினால்தான் உலமெங்கிலும் பல சபைகளிலே, பல்வேறு நிலைகளிலுள்ள தலைவர்கள் மத்தியில் இணக்கமான உறவு இருக்க நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. ஆவிக்குரிய தலைவர்களுக்கு நல்ல மதிப்பளிக்கப்படும்போது அது நல்ல ஆத்தும ஆதாயத்தைப் பலனாக தந்து, சபை வளர்ந்து பெருகி, பெரிய தலைவர்களால் நடத்தப்படுகிற சபையாக ஆகிறது. அந்த சபைகளுக்கு கிளைகள் எழும்பினாலும், அந்த கிளைகளும் தங்களை உருவாக்கி வளர்த்த தாய் சபைமேல் பற்றுள்ளவர்களாகவே இருப்பார்கள். அவர்கள் தங்கள் தலைவர்களுக்கு கொடுக்கவேண்டிய மரியாதையை தொடர்ந்து கொடுப்பார்கள். அதின் விளைவால் தலைவர்களின் ஆசீர்வாதமான வார்த்தைகள் அவர்களுக்குக் குறைவின்றி கிடைத்துக் கொண்டிருக்கும்.

இதற்கு மாறாக சில விசுவாசிகள் சபைக்குள்ளே பிரிவினை களை விதைத்து தங்கள் தலைவர்களை இழிவுபடுத்தும் அளவிற்கு அவர்களை எதிர்த்து செயல்படுகிறவர்களாக இருக்கிறார்கள். சிலர் போட்டியையும் பொறாமையையும் தூண்டிவிடுகிற ார்கள். தேவன் இளம் தலைவர்களுக்கு ஆத்தும ஆதாயத்தில் புதிய பொறுப்புகளைக் கொடுப்பார் என்பதில் சந்தேகமே இல்லை. என்றாலும், அப்போஸ்தலனாகிய பவுல் சொல்லுகிற படி “சகலமும் ஒழுங்கும் கிரமமுமாய் செய்யப்படவேண்டும்”. மூத்த தலைவர்கள் இளம் தலைவர்களை எல்லாருக்கும் முன்பாக ஆசீர்வதித்து தேவன் அவர்களைக் கொண்டு நிறை வேற்ற விரும்பும் ஊழியத்தை அவர்கள் நிறைவேற்றும்படி அவர்களை ஊக்குவித்து, உற்சாகப்படுத்தி அனுப்பவேண்டும்.

இது மாதிரியான மனத்தாழ்மையான நடக்கைகள் இன்று மிகவும் குறைந்துவருவது வருத்தத்திற்குரிய காரியம். பெரும்பாலும் ஆவிக்குரிய தகப்பனுக்கும் பிள்ளைக்கும் இடையே இருக்கும் உறவு அறுந்து அதினால் பெரிய சபைகள் பிளவுபட்டு போகின்றன. மூத்தவர்களுக்கும் இளையவர்களுக்கும் இடையே சரியான ஆவிக்குரிய உறவை ஏற்படுத்தி இதுபோன்றதான நிகழ்வைத் தவிர்ப்பது நம்மு டைய கடமையாக இருக்கிறது.

## 6. 6. தகப்பன்கள் எச்சரிக்கையுடன் திருத்தப்படவேண்டும்

நோவா பயிரிடுகிறவனாகி, திராட்சத்தோட்டத்தை நாட்டினான். அவன் திராட்சரசத்தைக் குடித்து, வெறி கொண்டு, தன் கூடாரத்தில் வஸ்திரம் விலகிப்படுத்திருந்தான். அப்பொழுது கானானுக்குத் தகப்பனாகிய காம் தன் தகப்பனுடைய நிர்வாணத்தைக் கண்டு, வெளியில் இருந்த தன் சகோதரர் இருவருக்கும் அறிவித்தான். அப்பொழுது சேமும் யாப்பேத்தும் ஒரு வஸ்திரத்தை எடுத்துத் தங்கள் இருவருடைய தோள்மேலும் போட்டுக் கொண்டு, பின்னிட்டு வந்து, தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தை மூடினார்கள்; அவர்கள் எதிர்முகமாய்ப் போகாதபடியினால், தங்கள் தகப்பனுடைய நிர்வாணத்தைக் காணவில்லை.

*ஆதியாகமம் 9:20–23*

நீதிமானும் ஜலபிரளயத்துக்கு பின்பு வந்த சந்ததிக்குத் தகப்பனுமாகிய நோவா நூற்றிருபது வருடங் களாக பேழையைக் கட்டி, அத்தனை ஜீவன்களையும் காப்பாற்றின பெரும்

பணியை செய்திருந்தாலும், குடித்து வெறித்து நிர்வானமாகக் கிடக்கும் செயலை செய்துவிட்டான். நோவா இந்த தவற்றைச் செய்திருந்தாலும், தகப்பன் என்கிற அவனுடைய அதிகாரம் எந்த. வகையிலும் குறைந்துவிடவில்லை.

நோவாவின் அதிகாரம் குறைந்துவிடவில்லை என்பதை உணராத காம், நோவாவின் நிலையைக் கண்டதும் அவனை மூடிப்போடுவதற்கு பதிலாக, தன் சகோதரர்களிடம் போய் காரியத்தை வெளிப்படுத்தினான். காமின் சகோதரர்கள் உடனே எழுந்து நோவாவின் கூடாரத்திற்குபோய் ஒரு வஸ்திரத்தை எடுத்து அவனை மூடினார்கள்.

இதிருந்து நாம் கற்றுக்கொள்ளுவது என்னவென்றால், சபை தலைவராக இருந்து ஜனங்களை நடத்த ஏற்படுத்த வேண்டிய ஒருவர், வழி தவறிப்போய் குற்றம் புரிந்தாலும் அவர்கள் இன்னும் தலைவர்களாகதான் இருக்கிறார்கள். நோவாவை சேமும் யாபேத்தும் நடத்தியதுபோலவே அப்படிப்பட்ட வர்களை நல்ல விதத்திலே கடிந்துகொள்ள வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக நம்முடைய நடக்கையினால் ஆவிக்குரிய தகப்பன்மார்கள் விசன ப்பட்டு நம்மைக் குறித்துத் தீதாக சொல்லுவார்களே யாகில் அது நமக்கு எத்தனை பாதகமாக அமையும் என்பதை நாம் உணர்ந்துகொள்ள வேண்டும். நோவா புத்தி தெளிந்த பின்பு காம் தனக்கு செய்ததை அறிந்தபோது, அவன் எடுத்த நடவடிக்கை காமை மட்டுமல்ல அவனுடைய சந்ததியையுமே பாதிக்கிற ஒன்ற ாக ஆனது. ஆனபடியால், நம்முடைய ஆவிக்குரிய தகப்பன்மார்கள் தவறு செய்து வழிதப்பி இருந்தாலும், நாம் அவர்களை மதித்து அவர்களோடு மரியாதைக்குரிய உறவை வைத்திருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது.

## 6. 7. நேர்மறையும் எதிர்மறையுமான தாக்கங்களை அடையாளம் காணுதல்

எந்த மனுஷனும் மேலான அதிகாரமுள்ளவர்களுக்குக் கீழ்ப்படியக்கடவன்; ஏனென்றால், தேவனாலேயன்றி ஒரு அதிகாரமுமில்லை; உண்டாயிருக்கிற அதிகாரங்கள் தேவனாலே நியமிக்கப்பட்டிருக்கிறது.

ரோமர் 13:1

பூமியிலே உள்ள ஒவ்வொரு அதிகாரமும் நியமணமும் அது ஆவிக்குரியதாக இருந்தாலும், பூமிக்குரியதாக இருந்தாலும், அது தேவனாலேதான் ஏற்படுகிறது. நியமிக்கப்பட்டவர் பலமுள்ளவராக இருந்தாலும், பெலவீனராக இருந்தாலும், அவர் தேவனால் ஏற்படுத்தப்பட்டிருக்கிறபடியால், நாம் அவரை மதிக்கவேண்டும். சில தலைவர்கள் அவர்களுடைய அழைப்புக்கு ஏற்ற தகுதிகள் இல்லாதவர்களாக காணப்படலாம். இருந்தாலும் அவர்கள் அந்த பதவியை வகிக்கிறவரைக்கும் அவர்கள் தேவனால் ஏற்படுத்தப்பட்டவர் என்றே நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். இதனால்தான் ஆவிக்குரிய தலைவர்கள் பரம அதிகாரத்தினால் அந்த பதவியில் வைக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை நாம் உணர்ந்து செயல்படவேண்டும். நாம் அவர்கள் பெலவீனராய் இருப்பதினால், அவர்களை எதிர்த்து செயல்பட்டால், அதினிமித்தம் அவர்கள் வருத்தமடைந்து தங்களுடைய வெறுப்பை நம்மேல் காட்ட வாய்ப்பு

ஏற்பட்டுவிடும். அவர்களுடைய நல்லதல்லாத வார்த்தைகள் நம்மை நிகழ்காலத்திலும் வருங் காலத்திலும் பாதிக்கிறதாக ஆகிவிடும். மாறாக அவர்களுடைய நல்வார்த்தைகள் நம்மை ஆசீர்வாத மாக வைக்க முடியும்.

அவர்களிலே நாம் எதை விதைக்கிறோமோ அதை நிச்சயமாக அறுப்போம். நம்மேல் அவர்கள் அதிருப்தியடைந்தால் நாம் அதிருப்தியை விதைக்கிறோம் என்று அர்த்தம். நாம் இவ்வாறு அதிருப்தி தரும் வகையிலும் கீழ்படியாமையிலும் நிலைத்திருந்து, நம்முடைய சுய நீதியின்மேல் நம்பிக்கை கொண்டு செயல்பட்டால், நம்மை நாமே கெடுக்கிறவர்களாக இருப்போம். அதற்கு மாறாக, நாம் பின்விளைவுகளை உணர்ந்து, சரியாக செயல்பட்டால் அது நல்லதாக இருக்கும்.

## 6. 8. ஆவிக்குரிய தகப்பன்மாரின் ஆசீர்வாதத்தை தேடுதல்

ஆவிக்குரிய தகப்பன்மார்களின் ஆசீர்வாதத்தைத் தேடுவது அவசியம். காரணம் அவர்கள்மேல் வைக்கப்பட்டிருக்கும் அதிகாரம் மேலோட்டமான ஒன்றாக இராமல், நம்மை ஆசீர்வதிக்கக்கூடிய அருமையான அதிகாரமாக இருக்கிறது. ஆவிக்குரிய தகப்பன்மார்களாகிய அவர்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரத்தைக் குறித்து ஜாக்கிற தையுள்ளவர்களாக செயல்பட எதிர்பார்க்கப்படுகிறார்கள். அவர்களுக்குக் கீழ் கொடுக்கப்பட்டிருப்போரைக் குறித்து அவர்களுக்கு இருக்கும் பொறுப்பு மிக அதிகம். ஆசீர்வாதங்களாகிய பொக்கிஷங்களை அவர்கள் அந்த மக்கள்மேல் ஊற்ற வேண்டும். தனி நபர்களையும் அவர்கள் ஊழியஞ்செய்யும் சபையையும் அவர்கள் ஆசீர்வதிக்க வேண் டும்.

ஆசீர்வாதமான வார்த்தைகளுக்கு பதிலாக உணர்ச்சிவயப்பட்டு ஆத்திரத்தில் தேவையில்லாத வார்த்தைகளை பேசி விடாதபடி அவர்கள் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

விசுவாசத்தினாலே ஈசாக்கு வருங்காரியங்களைக்குறித்து யாக்கோபையும் ஏசாவையும் ஆசீர்வதித்தான்.

*எபிரெயர் 11:20*

முற்பிதாக்கள் தங்கள் பிள்ளைகளை நல் வார்த்தைகளினால் ஆசீர்தித்தார்கள் என்றும், பிள்ளைகள் பெற்றோரின் ஆசீர்வாதத்திற்காக ஆவலோடு காத்திருந்தார்கள் என்றும் மேற்கண்ட வசனத்தில் காண்கிறோம்.

ஏசா தன் தகப்பனை நோக்கி: என் தகப்பனே, இந்த ஒரே ஆசீர்வாதம் மாத்திரமா உம்மிடத்தில் உண்டு? என் தகப்பனே, என்னையும் ஆசீர்வதியும் என்று சொல்லி, ஏசா சத்தமிட்டு அழுதான்.

*ஆதியாகமம் 27:38*

ஆவிக்குரிய தகப்பன்மாரின் வார்த்தைகள் நம்மை பாதிக்கக்கூடிய வார்த்தைகளாக இருப்பதால் நாமும்கூட ஏசாவைப்போல ஆசிர்வாதத்தைத் தேடி அவர்கள் நம்மை நல்வார்த்தைகளால் ஆசீர்வதிக் கும்படி கேட்க வேண்டும்.

ஒருசில வருஷங்களுக்கு முன்பு பிராங்க்போர்ட் நகரத்திற்கு நான் சுவிசேஷ மிஷன் சம்பந்தமாக போயிருந்தபோது அங்கு

ஹோட்டல் பணியாளாக பணிபுரிந்த ஒரு இளைஞனைக் கண்டு பரிதாபப்பட்டு, அவருக்கு கொஞ்சம் பணத்தைக் கொடுத்து உற்சாகமூட்டும் வார்த்தைகளைக் கூறினேன். பின்பு நான் கழிவறைக்குப் போனபோது, அங்கே அந்த இளைஞன் ஓரமாக உட்கார்ந்து வேதாகமத்தை வாசித்துக்கொண்டிருந்ததைப் பார்த்தேன். அப்போது நான், "நீங்கள் ஒரு விசுவாசியா?" என்று விசாரித்தேன். அதற்கு அவர், தான் ஒரு இரட்சிக்கப்பட்ட நபர் தான் என்று தெரிவித்தார். அப்பொழுது நானும்கூட இரட்சிக்கப்பட்ட ஒருவர்தான் என்றும், நான் ஒரு சபையின் போதகர் என்றும் சொன்னேன். இதை நான் சொன்ன மாத்திரத்தில், அந்த நபர் நான் கொடுத்த பணத்தை என்னிடத்தில் திருப்பிக் கொடுத்துவிட்டு, என் கையைப் பிடித்து தம்முடைய தலையில் வைத்து என்னை உங்கள் வார்த்தைகளால் ஆசீர்வதியுங்கள் என்று வேண்டிக்கொண்டார்.

ஆசீர்வாத வார்த்தையை அடையவேண்டுமென்கிற அந்த வாலிபரின் பேரார்வத்தைப் பார்த்தபோது, நம்முடையவர்களின் மத்தியில் அப்படிப்பட்ட ஆர்வம் இல்லையே என்கிற வருத்தம் எனக்கு வந்தது. நம்முடைய போதகர்கள்கூட ஆசீர்வாதத்தைக் குறித்த ஆர்வத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்த தவறுகிறார்கள் என்பதும் மற்றொரு குறையாகும்.

ஆவிக்குரிய தகப்பன்மார்கள் மதிக்கப்பட வேண்டும் என்றும், நம்முடைய வாழ்வில் ஆசீர்வாதமான வார்த்தையை அவர்கள் நமக்காக சொல்ல ஏவப்படவேண்டும் என்றும், இந்த தலைமுறை புரிந்து கொள்ளவேண்டும். இதுவே முடிவாக நான் சொல்ல விரும்புகிற காரியம் ஆகும். இந்த உண்மையை அறிந்தவர்கள் ஆவிக்குரிய பெற்றோரிடமிருந்து ஆசீர்வாதத்தை ஆவலாய் தேடி, அதன் பலனை தங்கள் வாழ்நாள் பூராவும் அனுபவிக்கிறவர்களாக இருக்கிறார்கள்.

# முடிவுரை

## செய்யவேண்டிய காரியங்கள்

பெற்றோர் இன்னும் உயிரோடு இருக்கிறவர்களாகக் கொண்டவர்கள் உங்கள் சகோதர சகோதரிகளுடன் சேர்ந்து உங்கள் பெற்றோரை வெகுமதிகளோடு போய் பார்த்து, அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். நேரில் செல்ல இயலாதவர்கள் தொலை பேசி மூலமாகவோ தபால் மூலமாகவோ தொடர்புகொண்டு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

தாயையும் தகப்பனையும் இழந்தவர்கள் உங்கள் கடந்தகால மீறுதல்களும் கீழ்படியாமைகளும் கொண்டுவரக்கூடிய சாபங்களை உடைத்துப்போடுமாறு நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவனிடத்தில் மன்னிப்புக் கேட்டுப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஆவிக்குரிய தகப்பன்களால் நடத்தப்பட்டவர்கள் அவர்களைக் கனப்படுத்தும்படி வெகுமதி களை வாங்கிக்கொண்டு, அவர்களை சந்தித்து, அந்நாட்களில் நீங்கள் செய்திருக்கக்கூடிய மீறுதல்கள் அலட்சியங்கள் போன்றவற்றுக்கு மன்னிப்புக்கேட்டு அவர்கள் உங்களை ஆசீர்வதிக்குமாறு கேட்டுக்கொள்ளுங்கள்.

# நூற்பட்டியல்


Bible Knowledge Commentary OT First, John F. Walvoord 1985.

The Apostolic Fathers, A. Cleveland Coxe D.D. January 6, 1885

Tamil O.V. Bible.

தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவதால் வாழ்நாள் நீடித்திருக்கும் என்பது கடந்த நூறு ஆண்டுகளாக மறக்கப்பட்டிருந்த சத்தியமாகும். அதை பாஸ்டர் அமிலு அழகாக எடுத்துரைத்து எழுப்புதலையும், புத்துணர்வையும் கொண்டுவந்திருக்கிறார். உலகெங்கிலும் குடும்பத்துடன் சேர்ந்து இந்த நூலை தியானிப்பது சால சிறந்ததாக இருக்கும்.

Rev. Dr. டெமிஸ்ஜன் **A**. பெஷ்ஜாயீ
அமெரிக்க ஐக்கிய நாடுகள்

------------------------------

தகப்பனையும் தாயையும் கனம்பண்ணு என்கிற இந்த புத்தகத்தின் எழுத்தாளர், தன் சொந்த வாழ்க்கை சம்பவங்களையும், வேத மற்றும் சமுதாய தத்துவங்களையும் சேர்த்து பெற்றோரைக் கன ம் பண்ணுதலைக் குறித்து சொல்யிருக்கிறார். ஒவ்வொருவரையும் குறிப்பாக இளம் தலைவர்கள் இந்த புத்தகத்தை வாசித்து, வாக்குத்தத்தமுள்ள முதலாம் கற்பனையை கைக்கொள்ளுகிற வர்களாக ஆகி ஆசீர்வாதங்களை அனுபவிக்க துவங்கவேண்டும் என்று நான் ஊக்குவிக்க விரும்புகிறேன்.

பாஸ்டர் யோகானீஸ் அட்டாஷம் M. Div.
இயக்குனர், Young Adult Ministries and Mission
International Ethiopian Evangelical Church Washington DC (IEEC)
USA

---------------------------

நாம் அறிந்த காரியந்தான் என்று சொல் நாம் கவனம் செலுத்தாமற் போன முக்கியமான காரியத்தைக் குறித்து சரியான நேரத்தில் இந்த புத்தகம் பேசுகிறது. தகப்பன் தாய் மற்றும் சபையின் தலைவர்கள் ஆகியோருக்கு மதிப்புக் கொடுக்கப்படும்போது குடும்பங்களிலும் சபைகளிலும் ஏன் மொத்த தேசத்திலுமே

அமைதியும் சமாதானமும் நிறைந்திருக்கும் என்பது பொதுவாக எல்லாராலும் அங்கீகரிக்கக்கப்படும் உண்மையாக இருக்கிறது. இந்த புத்தகம் அதற்கான வாசலைத் திறந்து, பெற்றோரை கனம்பண்ணுவதை பற்றிய தகவல்களை தந்து, சத்திய வேதத்தின் அடிப்படையில் அந்த முக்கிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு வேண்டிய ஊக்கத்தைக் கொடுக்கிறது. பெற்றோரையும் ஆவிக்குரிய தகப்பன்களையும் தலைவர்களையும் கனம்பண்ணுவதால் கிடைக்கக்கூடிய ஆசீர்வாதத்தை நாங்கள் பெறும் விருப்பம் எங்களும் உண்டாகிவிட்டது.

நிக்யூஸ் புல்ச்சா

பொது செயலாளர்

**Word of God Reader's Association**

எத்தியோப்பியா

------------------------------

தகப்பனையும் தாயையும் கனம்பண்ண வேண்டும் என்பது தேவனுடைய நித்திய வார்த்தியிலுள்ள முக்கிய கற்பனையாகும். பாஸ்டர் அமிலு கிட்டா தம்முடைய புத்தகத்தின் வாயிலாக இந்த சத்தியத்தை இந்த தலைமுறைக்கு உயிரூட்டமுள்ளதாக ஆக்கி தந்துள்ளார். முழுமை அடைய விரும்பும் குடும்பத்திற்கு இது முதல் படியாக இருக்கிறது. வாசித்து ஊக்கப்படும்படி நான் இந்த புத்தகத்தை அதிகம் பரிந்துரைக்கிறேன்.

**Rev. Dr.** டொசா குடீனா

**Ethiopian Evangelical Church**

**Atlanta Georgia**

**USA**

-----------------------

என்னுடைய நண்பராகிய போலே இம்மானுவேல் திருச்சபையை சார்ந்த பாஸ்டர் அமிலு எழுதிய உன் தகப்பனையும் தாயையும் கனம்பண்ணுவாயாக என்கிற இந்த புத்தகத்தை மிகுந்த மகிழ்ச்சியோடு சிபாரிசு செய்கிறேன். அது இந்த நாளுக்கு உள்ள எல்லா கிறிஸ்தவ பிள்ளைகளுக்கும் பெற்றோருக்கும் ஏற்றதாக இருக்கிறது. அதன் செய்தி தனி நபருக்கானதாகவும், நடைமுறைக்குட்பட்டதாகவும் வல்லமையானதாகவும் இருக்கிறது. பத்து கற்பனைகளிலே இந்த ஒரு கற்பனை தான் நிச்சயமான வாக்குத்தத்தத்தைக் கொண்ட கற்பனையாக இருக்கிறது.

நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து மத்தேயுவின் சுவிசேஷத்திலே இந்த கற்பனையை மீறுவது நம்முடைய வாழ்வை பயனற்றதாக ஆக்கிவிடும் என்று கடுமையாக எச்சரித்துள்ளார். அப்போஸ்தல னாகிய பவுலும் எபேசியருக்கு எழுதின நிருபத்திலே இதனால் வரும் ஆசீர்வாதங்களைப்பற்றி கூறியுள்ளான். இந்த புத்தகத்தின் ஒவ்வொரு பக்கமும் ஜெபத்தோடும் அக்கரையோடும் வாசிக்கப் படும்போது அது குடும்பத்தையும், சபையையும், ஏன் தேசத்தையேகூட மாற்றத்திற்குள்ளாகக் கொண்டு வரும்.

Rev. ஜெரால்ட் காட்சன்<br>UK board member of El Shaddai TV Net Work and<br>Nearly 50 Years of ministry in Ethiopia

-------------------------

தகப்பன்மாரையும் தாய்மாரையும் கனம்பண்ண வேண்டும் என்கிற கற்பனை முதலாவது மோசே மூலமாக பத்து கற்பனை களிலும், அடுத்து இயேசுகிறிஸ்து மூலமாகவும், பின்பு புதிய ஏற்பாட்டை எழுதினவர்கள் மூலமாகவும் தேவனால் முக்கியப்படுத்தப்பட்டுள்ள கற்பனை ஆகும். இந்த சந்ததியால் அதிகம் அசட்டை செய்யப்பட்டதாகிய இந்த கற்பனை யை தம்முடைய தாசனாகிய அமிலு மூலமாக மீண்டுமாக நம்முடைய கவனத்துக்குக் கொண்டுவந்த தேவனுக்கு ஸ்தோத்திரம். இந்த புத்தகத்தை வாசிப்பது சத்தியத்தை விட்டு வேகமாக விலகிப்போய் கொண்டிருக்கும் இந்த தலைமுறைக்கு தேவனு டைய வாக்குத்தத்தத்தைக் கொண்டுவருகிறதாய் இருக்கும்.

Dr. நியூவே ஆர்கா
Chief Executive Officer
Denver, Colorado, USA

------------------------



அமிலு கிட்டா எத்தியோப்பியாவின் அடிடிஸ் அபாபாவிலுள்ள போலே இம்மானுவேல் ஐக்கிய திருச்சபையின் மூத்த பாஸ்டராக பணி புரிகிறார். இவர் இறையியல் B.A. பட்டம் பெற்றுள்ளார்.


TAMIL PUBLICATION
By
LTN Ministries india
Google/Youtube
LTN ministries.india


Mail.ID lovethyneighbour.reuben@gmail.com
Contacts -9884557226,9789887305
Whatsapp number -7449214190